யாழ்ப்பாணம்

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 8.00

www.uthayan.com

சுடர் 19 வள்ளுவர் ஆண்டு 2034 மார்கழி 24 வியாழக்கிழமை (08-01-2004) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:43

# உடன்படிக்கை, சமாதானப் பேச்சு:

# பிரதமர் முற்றாகக் கைகழுவிவிட்டார்!

## இரண்டும் இனிமேல் ஜனாதிபதியின் பொறுப்பில்தான் அவர் எதை வேண்டுமானாலும் செய்யலாம் என அறிவிப்பு

கொழும்பு,ஜனவரி8

**அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையிலான போர்நிறுத்த உடன்படிக்கையை முன்னெடுத்துச் செல்லும் முழுப்பொறுப்பையும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க நேற்று ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவிடம் ஒப்படைத்து விட்டார். ஜனாதிபதி பாகிஸ்தானில் இருக்கையிலேயே பிரதமர் இந்த அதிரடி நடவடிக்கையை மேற்கொண்டார்.**

**விடுதலைப் புலிகளுடன் பேச்சு நடத்தி, போர்நிறுத்த உடன்படிக்கையை மீண்டும் ஏற்படுத்த அல்லது உடன்படிக்கையைத் திருத்தி அமைக்க நடவடிக்கை மேற்கொள்வது இனி ஜனாதிபதியின் பொறுப்பாகும் என்று பிரதமர் அறிவித்திருக்கிறார்.**

கடந்த நவம்பர் மாதத்தில் மூன்று முக்கிய அமைச்சுக்களை ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க பொறுப்பேற்றது முதல் முடங்கிப் போயிருக்கும் சமாதான முயற்சிகளை மீள ஆரம்பிக்கச்செய்யும் வழிவகைகளைத் தேடிக் களைத்துப் போனதையடுத்தே பிரதமர் ரணில், போர்நிறுத்த உடன படிக்கை தொடர்பான தனது அரசின் பொறுப்பைக் கைகழுவியிருக்கிறார்.

பண்டுவஸ்நுவர தேர்தல் தொகுதியிலுள்ள பலகொல்ல கிராமத்துக்கு நேற்றுக் காலை விஜயம் செய்த பிரதமர் ரணில், அங்கு நடைபெற்ற பொது மக்கள் சந்திப்பின்போதே போர்நிறுத்த உடன்படிக்கையிலிருந்து அரசு விலகுவதை அறிவித்தார்.

தாம் கையேற்ற மூன்று அமைச்சுக்களையும் தொடர்ந்து தனது பொறுப்பிலேயே வைத்துக்கொண்டு சமாதானப் பேச்சுக்களை முன்னெடுத்துச் செல்லவேண்டும் என்ற நிலைப்பாட்டில் ஜனாதிபதி இன்னும் இருப்பாரேயானால் - விடுதலைப் புலிகளுடன் பேசி போர் நிறுத்த உடன்படிக்கையை மீளமைக்க அவர் நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று பிரதமர் அங்கு சுட்டிக்காட்டினார்.

பிரதமர் அங்கு மேலும் பேசுகை

(16ஆம் பக்கம் பார்க்க)

## ஒப்பந்தத்தை மாற்ற ஜனாதிபதி மறுப்பு

யுத்தநிறுத்த உடன்படிக்கையில் மாற்றங்களைச் செய்வதை ஜனாதிபதி விரும்பவில்லை என்று அவரது பேச்சாளர் ஹரீம் பீரிஸ் தெரிவித்துள்ளார்.

புரிந்துணர்வு ஒப்பந்தத்திலிருந்து வாபஸ் பெறுகிறார் என பிரதமர் விடுத்துள்ள அறிவிப்புத் தொடர்பாகக் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

கடந்த இரண்டுவருடங்களாக அமுலில் உள்ள யுத்தநிறுத்த உடன்படிக்கையில் மாற்றம் எதனையும் செய்யத் தேவையில்லை.

சமாதான முயற்சி என்பது பல கட்சிகளையும் உள்ளடக்கிய ஒரு விடயமாக இருக்கவேண்டும். பிரதமர் கூறுவதுபோல், மற்றவர்களின் கருத்துக்களை புறக்கணிக்கும் வகையில் குறுகிய நோக்கத்துடன் இது அமையக்கூடாது. இதுவே ஜனாதிபதியின் நிலைப்பாடு

- இப்படி அவர் தெரிவித்தார்.

## இலங்கையின் சமாதான முயற்சிக்கு நோர்வே தொடர்ந்து ஆதரவளிக்கும்

### தூதுவர் ஹன்ஸ் பிரட்ஸ்கர் தெரிவிப்பு

கொழும்பு,ஜன.8

இலங்கையின் அமைதிக்கும் சமாதானத்துக்குமான சகல நடவடிக்கைகளுக்கும் நோர்வே தொடர்ந்தும் பூரண ஆதரவினை வழங்கி வருமென நோர்வே தூதுவர் ஹன்ஸ் பிரட்ஸ்கர் தெரிவித்துள்ளார்.

நேற்றுக்காலை திருகோணமலை மாவட்ட செயலகத்தில் உள்நாட்டு, வெளிநாட்டு அரசசார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகளைச் சந்தித்துப் பேசுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

திருகோணமலை மாவட்ட அரச அதிபர் காமினி றொட்ரிக்கோ தலைமையில் இந்தச் சந்திப்பு இடம்பெற்றது.

இலங்கைக்கும் நோர்வேக்கும் இடையிலான தொடர்புகள் பாரம்பரியம் வாய்ந்தவை. சமாதான முயற்சிகளைப் பொறுத்தவரை நாம் தொடர்ந்தும் முழுமையான பங்களிப்பினை வழங்குவோம். குறிப்பாக, நிரந்தர சமாதானம் உருவாக வேண்டுமானால் மக்களிடையே புரிந்துணர்வு ஏற்படவேண்டும். தற்போதைய முட்டுக்கட்டைகள் நீங்கி விரைவில் சமாதானப் பேச்சுகள் ஆரம்பமாகும் என்றும் நோர்வேத் தூதர் தெரிவித்தார். (ஐ-8)

## மக்கள் வழங்கிய ஆணையிலிருந்து தாமாக எவரும் ஒதுங்கிவிட முடியாது

### ஜோசப் எம்.பி. வலியுறுத்து

கொழும்பு,ஜன.8

ஜனாதிபதியும் பிரதமரும் மக்கள் தமக்கு வழங்கிய ஆணைக்கு ஏற்ப ஒன்றிணைந்து செயற்பட்டு சமாதான முயற்சிகளை முன்னெடுக்கவேண்டும். மக்கள் ஆணையில் இருந்து எவரும் ஒதுங்கிவிட முடியாது.

இப்படிக் கூறியிருக்கிறார் மட்டு. மாவட்டக் கூட்டமைப்பு எம்.பியான ஜோசப் பரராஜசிங்கம்.

புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் இருந்து வாபஸ் பெறுகிறார் என நேற்று பண்டுவஸ்நுவரவில் நடைபெற்ற கூட்டம் ஒன்றில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க அறிவித்துள்ளமை தொடர்பாகக் கருத்துத் தெரிவித்தபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்திருப்பதாவது:-

சமாதானத்தை ஏற்படுத்தவேண்டும் என்ற ஒரே நோக்கத்துடனேயே பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவை கடந்த பொதுத் தேர்தலில் மக்கள் தேர்ந்தெடுத்தனர். இந்த அடிப்படையில் தான் விடுதலைப் புலிகள் அமைப்பும் ஐ.தே.க. அரசும் புரிந்துணர்வு உடன்படிக்கையில் கைச்சாத்திட்டன.

தற்போது பாதுகாப்பு அமைச்சு ஜனாதிபதியால் பறிக்கப்பட்டதன் காரணமாக பேச்சுக்களை தொடர்ந்து

(16ஆம் பக்கம் பார்க்க)

### தொடரும் கொலைகளை அடுத்து

## வவுனியாவில் நேற்று முதல் பாதுகாப்புப் பலப்படுத்தப்பட்டது

வவுனியா,ஜன.8

வவுனியாவில் படையினரும் பொலீஸாரும் நேற்று முதல் கூட்டாக பாதுகாப்பு நடவடிக்கைகளைப் பலப்படுத்தியிருக்கின்றனர்.

அதிக எண்ணிக்கையான படையினரும் பொலீஸாரும் வீதிச் சோதனைகளில் ஈடுபட்டிருக்கின்றனர். வீதிகளில் சந்தேகத்துக்கிடமான வாகனங்கள், ஓட்டோக்கள் மறிக்கப்பட்டு அதில் பயணம் செய்பவர்களின் விவரங்கள் கண்காணிக்கப்படுகின்றன.

வவுனியாவில் பாதுகாப்பு நிலைமை மோசமாக இருப்பதாக சுட்டிக்காட்டப்பட்டிருப்பதை அடுத்தே இவ்வாறு சோதனைகள் தீவிரப்படுத்தப்பட்டிருக்கின்றன.

வவுனியாவில் அடுத்தடுத்து இடம்பெற்றுவரும் கொலைச் சம்பவங்கள் காரணமாக அங்கு பாதுகாப்பு நிலை கேள்விக்குள்ளாகி இருப்பதாக வவுனியா சிரேஷ்ட பொலீஸ் அத்தியட்சகர் அலுவலகத்தில் கடந்த ஞாயிறன்று நடைபெற்ற ஒரு கூட்டத்தில் சுட்டிக்காட்டப்பட்டது.

புரிந்துணர்வு உடன்படிக்கை ஏற்பட்ட பின்னர் வவுனியாவில் இதுவரை 12 பேர் கொலை செய்யப்பட்டிருக்கின்றனர். (ஐ-164)

## இஸ்லாமாபாத் சுப்பர் மார்க்கட்டில் சந்திரிகா சாறிகள் வாங்கினார்!

இஸ்லாமாபாத்,ஜன.8

சார்க் மாநாட்டில் கலந்துகொள்வதற்காக பாகிஸ்தானின் தலைநகர் இஸ்லாமாபாத் சென்ற ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க, அங்கு உல்லாசப் பயண மையங்களுக்குச் சென்றார் என்றும், தலைநகரின் கடைகள் சிலவற்றில் தனக்கு சாறிகள், நகைகள் ஆகிய பொருள்களை வாங்கினார் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

சார்க் மாநாடு நிறைவடைந்த பின்டமான், மாகல்லா மலைப் பகுதி ஆகிய உல்லாசப் பயணிகளின் மனங்கவர் இடங்களுக்கு ஜனாதிபதி சந்திரிகா சென்று அவற்றைக் கண்டு களித்தார்.

இஸ்லாமாபாத்தின் ஜின்னா சுப்பர் மார்க்கட்டில் தனக்குரிய புடைவைகள், சாறிகள் என்பனவற்றையும், நகைக்கடையில் சில நகை வகைகளையும் அவர் வாங்கினார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

## இலங்கை தொடர்பான இந்தியக் கொள்கை மாறுகின்றது என்கிறார் ஜனாதிபதி சந்திரிகா!

### இராணுவ ஒத்துழைப்பு உடன்பாடு விரைவில் என உறுதி

இஸ்லாமாபாத்,ஜன.8

★ இலங்கை விவகாரத்தைப் பார்த்துக்கொண்டு காத்திருக்கும் தனது நிலைப்பாட்டை இந்தியா படிப்படியாக மாற்றிவிட்டது.

★ இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையில் இராணுவ ஒத்துழைப்பு உடன்பாடு விரைவில் செய்யப்படுவதற்கான வாய்ப்புகள் ஏற்பட்டுள்ளன.

- ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க இவ்வாறு கூறியிருக்கின்றார்.

பாகிஸ்தான் தலைநகர் இஸ்லாமாபாத்தில் நடைபெற்ற பன்னிரண்டாவது சார்க் உச்சி மாநாட்டின் கலந்துகொள்வதற்காக அங்கு சென்றிருக்கும் அவர், செய்தியாளர்களுக்குத் தகவல் வெளியிடுகையிலேயே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் கூறியதாவது:-

1990இல் ஜனாதிபதி பிரேமதாஸாவுடன் ஏற்பட்ட கருத்து வேறுபாட்டை அடுத்து இந்திய அமைதிப்படையை இலங்கையிலிருந்து திருப்பி அழைத்த இந்தியா, அதற்குப்பின் இலங்கை விடயத்தைப் பார்த்துக்கொண்டு காத்திருக்கும் கொள்கையைக் (Wait and Watch Policy) கடைப்பிடித்து வந்தது.

கடந்த ஆண்டுகளில் அந்தக் கொள்கையை அது படிப்படியாக மாற்றிக்கொண்டுவிட்டது.

இந்திய அமைதிப்படை அனுபவத்தை அடுத்து கொழும்புடனான உறவுகள் தொடர்பான தனது அணுகுமுறையை எச்சரிக்கையுடனும் நியாயப் போக்குடனும் இந்தியா முன்னெடுத்ததால் ஏற்பட்ட படிப்படியான கொள்கை மாற்றம் இது.

கடந்த பத்து வருடங்களின் பின்னர், செயற்பாட்டுச் சார்புநிலையை நோக்கி அவர்கள் வந்துள்ளார்கள்.

எங்களது சமாதான நடவடிக்கைகளையும் பேச்சு மூலமான தீர்வுக்கான எமது முயற்சிகளையும் அவர்கள் எப்போதும் ஆதரித்து வந்திருக்கின்றார்கள். அதே நிலைப்பாட்டைத்தான் இப்போதும் கொண்டுள்ளனர் - என்றாலும் கூடுதல் சார்பு நிலைப்பாட்டுடன்.

தற்போதைய சமாதான நடவடிக்கையில் இந்தியா அதிக ஆர்வம் காட்டுகின்றது.

இலங்கையும் இந்தியாவும் இராணுவத்துறையில் தமது ஒத்துழைப்பை அதிகரிக்க நடவடிக்கை எடுத்து வருகின்றன. இருநாடுகளுக்கும் இடை

(16ஆம் பக்கம் பார்க்க)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

# வவுனியாவிலிருந்து கூ. சங்கங்களுக்கு கோதுமை மா ஏற்றிவருவது காலதாமதம்

பிறிமா நிறுவனத்தின் வவுனியா பிராந்திய களஞ்சியத்திலிருந்து மா விநியோகிப்பதில் கூட்டுறவுச் சங்கங்கள் புறக்கணிக்கப்படுகின்றன என்று யாழ். மாவட்ட விவசாய நுகர்ச்சிக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம் குற்றஞ்சாட்டி உள்ளது.

இது தொடர்பாக சங்கத் தலைவர் ப.கனகலிங்கம் நேற்று விடுத்த செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

'பிறிமா' நிறுவனத்தின் வவுனியாவில் உள்ள பிராந்திய களஞ்சியத்திற்கு மா கொள்வனவுக்காக ப.நோ.கூ.சங்க லொறிகள் 01.01.2004 இல் அனுப்பப்பட்டபோதிலும் இன்று வரை மா ஏற்றப்படாமல் 05 நாள்களாக அனுப்பப்பட்ட பாரவூர்திகள் காத்திருக்க வேண்டிய துர்பாக்கிய நிலை ஏற்பட்டுள்ளது.


கடந்த காலங்களில் திருகோணமலை பிறிமா நிறுவனத்தின் களஞ்சியத்தில் மா பெற்று வரும்பொழுது எத்தகைய தடங்கலுமின்றி கூட்டுறவுச் சங்கங்கள், மக்களுக்குத் தேவையான மாவைப் பெற்று வழங்கி வந்தமை குறிப்பிடத்தக்கது.

பின்னர் வவுனியாவிலுள்ள பிராந்திய களஞ்சியத்திற்கு யாழ். மாவட்டத்திற்கான மா விநியோகம் மாற்றப்பட்டதும் கூட்டுறவுச் சங்கங்களுக்கான மா வழங்கலில் மெத்தனப் போக்கே கடைப்பிடிக்கப்படுகிறது.

இவ்விடயமாக கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர், வடக்கு - கிழக்கு, யாழ். மாவட்ட அரச அதிபர் ஆகியோருக்கும், ப.நோ.கூ. சங்கங்கள் தமது நிலைப்பாட்டைக் கடித மூலம் தெரியப்படுத்தியுள்ளன. அத்துடன், யாழ். மாவட்ட விவசாய நுகர்ச்சி கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்தின் பொதுச்சபைப் பிரதிநிதிகள் கூ.சங்கங்களுக்குத் தேவையான மாவை தொடர்ந்தும் திருகோணமலையிலேயே பெற்றுக்கொள்ளவேண்டும் எனவும், இல்லையேல் வேறு பொருத்தமானதொரு நடவடிக்கையை மேற்கொள்ளவேண்டும் என்றும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

- இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)



தியாகி அறக்கொடை நிறுவனத்தின் ஆண்டு விழாவை முன்னிட்டு வெளியிடப்பட்ட மலரை யாழ். பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் சு. மோகனதாஸ் பெற்றுக்கொள்வதையும் நிகழ்வில் கலந்துகொண்டோரில் ஒரு பகுதியினரையும் படங்களில் காணலாம். *(அலுவலகப் படப்பிடிப்பாளர்)*

# பாரம்பரியக் கலைகள் மேம்பாட்டுக்கழக கூத்து, கிராமியக் கலைப் போட்டிகள்

## சனியன்று கந்தர்மடம் சைவப்பிரகாசவில் ஆரம்பம்

யாழ்ப்பாணம்,ஜன.8

பாரம்பரியக் கலைகள் மேம்பாட்டுக் கழகத்தின் 10 ஆவது ஆண்டு நிறைவு விழாவை முன்னிட்டு நடத்தபபடும் இசைநாடக, கூத்து, கிராமியக் கலைப் போட்டிகள் நாளைமறுதினம் சனிக்கிழமைமுதல் யாழ். கந்தர்மடம் சைவப்பிரகாச வித்தியாசாலையில் நடைபெறவுள்ளன.

காத்தவராயன் கூத்துப் போட்டிகள் எதிர்வரும் 10ஆம், 11ஆம் திகதிகளிலும் - இசை நாடகப் போட்டிகள் எதிர்வரும் 17ஆம், 18ஆம் திகதிகளிலும் -

தென்மோடிக் கூத்துப் போட்டிகள் எதிர்வரும் 24ஆம், 25ஆம் திகதிகளிலும் - உடுக்கு, ஆர்மோனிய வாத்திய போட்டி எதிர்வரும் 31ஆம் திகதியும் -

கிராமியப் பாடல் போட்டி அடுத்த மாதம் முதலாம் திகதியும் - வில்லுப்பாட்டு, மயிலாட்டம், ஒயிலாட்டம், குதிரையாட்டப் போட்டிகள் அடுத்த மாதம் 4ஆம் திகதியும் - கரகம், காவடிப்போட்டிகள் அடுத்தமாதம் 5ஆம் திகதியும் -

கிராமிய நடனப் போட்டிகள் (கும்மி, கோலாட்டம் உட்பட) அடுத்த மாதம் 7ஆம் திகதியும் - மேற்குறிப்பிட்ட பாடசாலையில் நடைபெறும் என கழகத்தின் செயலாளர் தமிழ்கலைக் காவலன், கலாபூஷணம் செல்லையா மெற்றாஸ்மயில் அறிவித்துள்ளார். (எ)

## உடற்கல்வி ஆசிரியர் கருத்தரங்கு

தென்மராட்சிக் கல்வி வலயப் பாடசாலைகளில் 7ஆம், 8ஆம் தரங்களில் சுகாதாரம் மற்றும் உடற்கல்வி கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான கருத்தரங்கு முறையே நாளை வெள்ளிக்கிழமையும் நாளைமறுதினம் சனிக்கிழமையும் காலை 9 மணிக்கு சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் நடைபெறவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (எ-9)

## போயா தினத்தை முன்னிட்டு

# 40 வறிய குடும்பங்களுக்கு உலர் உணவுப் பொதிகள்

யாழ்ப்பாணம்,ஜன.8

போயாதினத்தை முன்னிட்டு யாழ். நகரப் பகுதியில் வசிக்கும் 40 வறிய குடும்பங்களக்கு 512ஆவது படைப் பிரிவினர் உலர் உணவுப் பொருள் பொதிகளை வழங்கியுள்ளனர்.

யாழ். சிங்கள மகாவித்தியாலயம் இயங்கிய கட்டடத்தில் வைத்து நேற்றுக் காலை இந்தப் பொருள்கள் வழங்கப்பட்டன.

512ஆவது படைப்பிரிவின் கீழ் அடங்கும் கொட்டடி, சுண்டுக்குழி உட்பட யாழ். நகரப் பகுதிகளில் வசிக்கும் நாற்பது குடும்பங்கள் அரிசி, பருப்பு, சீனி, சோயாமீற், மீன்ரின், தேங்காய் போன்ற உணவுப் பொருள்களைப் பெற்றுக்கொண்டன.

உலர் உணவுப் பொதிகளை கொழும்புத்துறை இராணுவ அதிகாரி மேஜர் அபயநாயக்க, 512 ஆவது படைப்பிரிவின் 7ஆவது கொமாண்டர் லெப்டினன்ட் சேனரத்ன மற்றும் ஓ.எல்.ஆர். ஆலய வண.பிதா சரத்ஜீவன் அடிகளார், யாழ்.நகர் கிழக்கு கிராமசேவகர் க.நித்தியானந்தன் ஆகியோர் வழங்கினர். (எ-7)





யாழ். நகரில் கிழக்கு கிராம அலுவலர் க.நித்தியானந்தன் குடும்பத்தலைவி ஒருவருக்கு உணவுப் பொதியைக் கையளிப்பதையும் நிகழ்வில் கலந்துகொண்ட 512ஆவது படைப்பிரிவின் அதிகாரிகள் மற்றும் வண.பிதா சரத்ஜீவன் அடிகளார் ஆகியோரையும் படங்களில் காணலாம். *(அலுவலகப் படப்பிடிப்பாளர்)*

## சான்றிதழ் வழங்கும் நிகழ்வு

யாழ்ப்பாணம்,ஜன.8

சமூக நலன்புரி அமைச்சின் ஆதரவில் மக்கள் நலன்புரிச் சங்கமும் படையணிகளும் அமைபபினால் நடத்தப்பட்ட தொழிற்பயிற்சி திட்டத்தின் கீழ் வறுமைக்கோட்டிற்கு உட்பட்ட யுவதிகளுக்கான தையல் பயிற்சி வகுப்பில் சித்தி அடைந்த 24பேரிற்கான சான்றிதழ் வழங்கும் வைபவம் நாளைமறுதினம் சனிக்கிழமை மாலை 3.30 மணிக்கு சங்கப் பணிமனையில் நடைபெறவுள்ளது.

இதனத் தொடர்ந்து தையல் பொருள்கள் க்ண்காட்சி ஒன்றும் நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (எ-8)

# தியாகி அறக்கொடை நிறுவன ஆண்டு விழா சிறப்புற நடைபெற்றது

யாழ்ப்பாணம்,ஜன.8

தியாகி அறக்கொடை நிறுவனத்தின் 2ஆம் ஆண்டு நிறைவு விழா நாவலர் வீதியிலுள்ள அதன் அலுவலக வளாகத்தில் நேற்று மிகச் சிறப்பாக நடைபெற்றது.

ஆசிரியர் ஸ்ரீதேவி ஞானரட்ணம் தலைமையில் நிகழ்வுகள் ஆரம்பமாகின. பிரதம விருந்தினராக யாழ். பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் சு.மோகனதாஸ் கலந்து கொண்டிருந்தார்.

முன்னதான விருந்தினர்கள் அனைவரும் நாவலர் கலாசார மண்டபத்தில் இருந்து 'பாண்ட்' வாத்தியம் மற்றும் மேள வாத்தியம் சகிதம் நிகழ்வு இடம்பெற்ற மேடைக்கு அழைத்துவரப்பட்டனர். தொடர்ந்து நிகழ்வுகள் ஆரம்பமாகின.

நிகழ்வில் மலர் வெளியீடும் இடம் பெற்றது. யாழ். பல்கலைக்கழக கல்வியியற்துறைப் பேராசிரியர் க.சின்னத்தம்பி நூலின் ஆய்வுரையினை நிகழ்த்தினார்.

தொடர்ந்து, பாடசாலை அதிபர்களின் உரை மற்றும் கல்விப் புலமைப் பாிசில் பெறும் மாணவரின் பேச்சு என்பன இடம்பெற்றன.

கௌரவ விருந்தினர்களாகக் கலந்து கொண்ட மாவட்ட செயலக உதவி அரசஅதிபர் வி.முருகையா, தென்மராட்சி பிரதேச செயலர் செ.ஸ்ரீநிவாசன், யாழ். பிரதேச செயலர் பா.செந்தில் நந்தனன், ஊர்காவற்றுறைப் பிரதேச செயலர் ஜே.எக்ஸ். செல்வநாயகம், ஓய்வுபெற்ற மாவட்ட நீதிபதி மு. திருநாவுக்கரசு, தமிழர் புனர்வாழ்வுக் கழக யாழ். மாவட்ட பணிப்பாளர் எஸ்.ஜெயராசா, பொருண்மிய மேம்பாட்டு நிறுவன யாழ். மாவட்டப் பொறுப்பாளர் சி.தேவா, யாழ். வலயக் கல்விப் பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன் ஆகியோரும், சிறப்பு விருந்தினர்களாகக் கலந்துகொண்ட சர்வதேச பொருண்மிய மதியுரையக இயக்குநர் எம்.சுந்தரமூர்த்தி ஆகியோரும் உரையாற்றினர்.

பிரதம விருந்தினரின் உரையைத் தொடர்ந்து பாடசாலை மாணவர்களுக்கான சீருடை வழங்கல் நிகழ்வு இடம் பெற்றது.

சிறந்த சேவையாளர்களைப் பாராட்டிக் கௌரவித்தல் மற்றும் புதிய உதவித் திட்டங்களின் அங்குரார்ப்பணம் என்பனவும் இடம்பெற்றன.

மதியபோசனத்தைத் தொடர்ந்து கலை நிகழ்வுகள் இடம்பெற்றன. (எ-9)

# மன்னார் மாவட்டத்தில் போதைவஸ்து விழிப்புணர்வு

மன்னார்,ஜன.8

தமிழீழ அரசியல்துறை, தமிழீழ சுகாதார சேவை மற்றும் தமிழர் புனர்வாழ்வுக் கழகம் ஆகியன இணைந்து மன்னார் மாவட்டத்தில் போதைவஸ்து விழிப்புணர்வு நிகழ்வுகளை நடத்தி வருகின்றன.

நேற்றுப் புதன்கிழமை ஆரம்பமான இந்த விழிப்புணர்வு நிகழ்வுகள் எதிர்வரும் 11ஆம் திகதி வரை நடைபெறும் என்று தமிழீழ சுகாதார சேவையினர் அறிவித்துள்ளனர்.

விழிப்புணர்வு நடவடிக்கைகளில் யாழ். பல்கலைக்கழக மாணவர்கள், வவுனியா பல்கலைக்கழக மாணவர்கள், மன்னார் மாவட்ட தமிழீழ எழுச்சிப் பேரவையினர், அரச உத்தியோகத்தர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள் ஆகியோர் பங்கேற்று வருகின்றனர். (எ-10)

## நாடாளுமன்றம் இன்று கூடும்

கொழும்பு,ஜன.8

நாடாளுமன்றம் இன்று கூடும் வரவு - செலவுத் திட்ட விவாதங்களுக்குப் பின்னர் ஒத்திவைக்கப்பட்ட நாடாளுமன்றம் புதுவருடத்தில் இன்றே முதல் தடவையாகக் கூடுகிறது.

# சதாமிடம் தினமும் 12 மணிநேரம் விசாரணை கழிவறையைத் தானே சுத்தம் செய்கிறாராம்!

## லண்டன் பத்திரிகை தகவல்

கெய்ரோ,ஜன.8

கைதுசெய்யப்பட்டுத் தடுத்து வைக்கப்பட்டுள்ள ஈராக்கின் முன்னாள் ஜனாதிபதி சதாம் ஹுசைன் தினமும் 12 மணிநேரம் விசாரணை செய்யப்படுகிறார்; தனது கழிவறையைத் தானே சுத்தம் செய்கிறார்.

லண்டனில் இருந்து வெளிவரும் "அல்ஸாத் அல் அவ்சத்" என்ற பத்திரிகை இந்தத் தகவலை வெளியிட்டுள்ளது.

கடந்த டிசெம்பர் 13ஆம் திகதி ஈராக்கின் திக்ரித் என்ற இடத்தில் வைத்து சதாம் ஹுசைன் அமெரிக்கப்படைகளால் கைது செய்யப்பட்டு ஈராக்கின் இரகசிய இடமொன்றில் வைத்து விசாரிக்கப்பட்டுவருகிறார்.

இவரது கைது தொடர்பாகவும், இவர் தடுத்து வைக்கப்பட்டுள்ள இடம் தொடர்பாகவும் பல்வேறு தகவல்கள் வெளிவந்துகொண்டிருக்கும் நிலையில், லண்டன் பத்திரிகை மேற்படி செய்தியை வெளியிட்டுள்ளது.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

ஈராக் தேசிய கவுன்ஸில் செய்தித் தொடர்பாளர் கீழ்க்கண்ட தகவலைத் தெரிவித்தார்.

சதாம் ஹுசைன் சர்வாதிகாரியாக இருந்தபோது தமது எதிரிகளை ரட்வனையா என்ற சிறையில் அடைத்து சித்திரவதை செய்தார். இப்போது அதே சிறையில்தான் சதாம் அடைக்கப்பட்டுள்ளார்.

அவரிடம் தினமும் 12 மணிநேரம் விசாரணை நடத்தப்படுகிறது. அவர் அடைக்கப்பட்டுள்ள சிறை அறைச் சுவரில் அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ் புஷ்ஷின் படம் மாட்டப்பட்டுள்ளது.

விசாரணை நேரம் போக மீதி நேரத்தில் தமது கழிவறையைத் தாமே கழுவி சுத்தம் செய்கிறார் சதாம். அது போக மீதம் உள்ள நேரத்தை தூக்கத்தில் கழிக்கிறார்.

- இவ்வாறு அதிகாரி கூறினார் என்று பத்திரிகை செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

# டயானாவின் மரணம் திட்டமிட்ட சதி! இளவரசர் சாள்ஸே அதற்குக் காரணம்!!

## லண்டன் பத்திரிகை அடித்துக் கூறுகிறது

லண்டன்,ஜன.8

பிரிட்டிஷ் இளவரசி டயானாவின் மரணம் திட்டமிடப்பட்ட சதி என்று லண்டன் பத்திரிகை ஒன்று கூறியிருக்கி





றது. அதுவும், இளவரசர் சாள்ஸே இந்தச் சதித்திட்டத்துக்குக் காரணம் என்றும் அது கூறியுள்ளது.

டயானாவின் மரணவிசாரணை நேற்றுமுன்தினம் ஆரம்பமாகியது. விசாரணை ஆரம்பமான நாளன்று மேற்படி தகவல் வெளியானதால், அது பரபரப்பாகப் பேசப்படுகின்றது.

இளவரசி டயானா 15 ஆண்டு கால திருமண வாழ்க்கைக்குப் பின்பு கணவர் சாள்ஸைப் பிரிந்தார்.

சாள்ஸ் - டயானா இருவருமே தங்களது கள்ளக் காதல் விவகாரங்களை ஒப்புக்கொண்டதை அடுத்து கடந்த 1996ஆம் ஆண்டு விவாகரத்துச் செய்து கொண்டனர்.

1997ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் தனது 36ஆவது வயதில் பிரான்ஸ் தலைநகர் பாரிஸ் நகரில் இடம்பெற்ற கார் விபத்தில் டயானா பலியானார். அவருடன் காதலன் டோடி பயட், கார் சாரதி ஹென்றி போல் ஆகியோரும் பலியானார்கள்.

விபத்து நடந்ததில் இருந்தே அது விபத்தல்ல, டயானாவைத் தீர்த்துக் கட்டுவதற்காக நடைபெற்ற திட்டமிட்ட சதி என்று அவ்வப்போது தகவல்கள் வெளியாகி வந்தன.

தற்போது லண்டனில் இருந்து வெளிவரும் 'டெய்லி மிரர்' பத்திரிகையில் டயானாவை பலிகொண்ட கார் விபத்துச் சதிக்கு இளவரசர் சாள்ஸே காரணம் என்ற தகவலை வெளியிட்டு பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது அப்பத்திரிகை.

அதற்கு ஆதாரமாக விபத்துக்குப பத்து மாதங்களுக்கு முன்பே டயானாவின் நம்பிக்கைக்குப் பாத்திரமான சமையல்காரர் போல் புரெல் என்பவருக்கு டயானா எழுத்திய கடித நகலையும் அந்தப் பத்திரிகை வெளியிட்டிருக கிறது.

அந்தக் கடிதத்தில் "என் வாழ்க்கையில், குறிப்பிட்ட இந்தக் காலகட்டம் மிகவும் ஆபத்தானதாகும். எனது காரில் 'பிரேக்' பிடிக்காமல் செய்து பலமான தலைக் காயத்தை உண்டாக்கும் விபத்தை ஏற்படுத்த சதித்திட்டம் தீட்டி வருகிறார்" - என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

கடுமையான அரச குடும்பச் சட்ட விதிமுறை காரணமாக, அவதூறு வழக்கைத் தவிர்க்கும் வகையில் கடிதத்தில் இடம்பெற்றிருந்த சாள்ஸின் பெயர் அந்தப் பத்திரிகையில் வெளியிடப்படவில்லை.

டயானாவின் கடிதத்தை விசாரணை அதிகாரிகளிடம் ஒப்படைக்கப் போல் புரெல் தயாராக இருக்கிறார் என்றும் - அதில் கூறப்பட்டுள்ளது. இந்தச் செய்தி குறித்துக் கருத்துத் தெரிவிக்க சாள்ஸின் செய்தித் தொடர்பாளர் மறுத்து விட்டார்.

இந்தச் செய்தி வெளியான அதே நாளில், டயானாவின் மரணம் குறித்த பிரேத பரிசோதனை அறிக்கை விசாரணையை மேற்கொண்ட அதிகாரி மைக்கேல் பர்க்கீஸ், டயானாவின் விபத்துக் குறித்து வெளிவரும் பல்வேறு யூகங்கள் குறித்து விசாரணை நடத்தும்படி லண்டன் மெட்ரோ போலிட்டன் பொலீஸ் ஆணைக்குழுவுக்கு உத்தரவிட்டார்.

இந்த விசாரணை அடுத்த ஆண்டுக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

## 55 மணித்தியாலங்களுடன் முறிந்தது பிரிட்னி ஸ்பியர்சின் திருமண வாழ்க்கை!

எவருக்குமே அறிவிக்காமல் முன்னேற்பாடுகள் எதுவுமின்றி நடந்த பிரபல பொப் இசைப் பாடகி பிரிட்னி ஸ்பியர்ஸின் திருமணம் 55மணித்தியாலங்கள் கழிந்து விவாகாரத்தில் முடிந்தது.

கடந்த சனிக்கிழமை பிரிட்னிஸ் பியர்ஸ் (வயது-22) தனது குடும்ப உறவினரும் நீண்டகாலத் தோழனுமாகிய அலெக்ஸாண்டரை (வயது-22) திடீர் திருமணம் செய்து கொண்டார். இவர்களது திருமணம் இசை உலகை மட்டுமன்றி, பிரிட்னியின் ரசிகர்களையும் வியப்பில் ஆழ்த்தியது.

சனிக்கிழமை காலை பிரிட்னியும் அலெக்ஸ்ஸாண்டரும் சந்தித்த போது "அனைவரையும் திகைக்க வைக்கும் வகையில்நாம் ஏதாவது செய்வோமா? என்று பிரிட்னி கேட்டுள்ளார். தேவாலயத்தை அணுகி தமது திருமணவிருப்பத்தைத் தெரிவித்தனர். உடனடியாகத் திருமணம் நடந்தது. திருமணத்தின் போது இருவரும் மது அருந்தாமல், சுயநினைவுடன் இருந்ததை அங்கிருந்தவர்கள் உறுதிசெய்தனர்.

திருமணத்திற்குப் பின்பு பிரிட்னியிடம் அவளுடைய தோழிதான் இது குறித்து முதலில் பேசினார்."வயது கூட அதிகம் ஆகவில்லையே, அதற்குள் திருமணத்திற்கு என்ன உனக்கு அவசரம்?"என்று கேட்டார்.

திருமணம் செய்து கொள்ள வேண்டும் என்பதற்காக அல்ல, எல்லோரையும் திகைப்படைய வைக்கவேண்டும என்பதற்காகத்தான் இதைச் செய்து கொண்டோம் என்று பிரிட்னி பதிலளித்தார். "அப்படியானால் இந்தத்திருமணம் வெறும் விளையாட்டுத்தானா? என்று தோழி கேட்டார். ஆமாம், என்று பிரிட்னி பதில் அளித்தார். அப்படியானால், திருமணத்தை ரத்துச்செய்துவிடு என்று அவர் அறிவுரை கூறினார். அதன்படியே திருமணம் விவாகரத்தில் முடிந்து விட்டது. விவாகரத்திற்கு அலெக்சாண்டரும் ஒப்புக்கொண்டார்.

## மலேஷியாவில் தடை!

கோலாலம்பூர்,ஜன.8

உடலின் அங்க வெட்டைக் காட்டும் இறுக்கமான, குட்டையான உடைகளைப் பெண்கள் அணியக்கூடாது என்று மலேஷிய மாகாண அரசு உத்தரவு பிறப பித்துள்ளது.

தெரங்கனு மாகாணத்தில் ஆட்சி வகிக்கும் தீவிரவாத இஸ்லாமிய கட்சியான பாஸ், பிறப்பித்துள்ள இந்த உத்தரவின்படி, உள்ளழகை வெளிப்படுத்தக்கூடிய வகையில் உடைகளை அணிந்துகொண்டு பெண்கள் வேலைககுச் செல்லக்கூடாது.

இந்தத் தகவலை சட்டப்பேரவை உறுப்பினர் சுலைமான் அப்துல்லா தெரிவித்தார். எந்த மதத்தைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும் இந்தக் கட்டுப்பாடுகள் பொருந்தும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

முஸ்லிம் மதத்தைச் சேராத பெண்கள் பாவாடை அணிவதற்குத் தடையில்லை. ஆனால், அது முழங்காலிற்கு மேல் இருக்கும் வகையில் குட்டையாக இருக்கக்கூடாது - என்றும் அவர் தெரிவித்தார்.

அத்துடன், தலையில் ஸ்கார்ப் அணிந்துதான் பெண்கள் வேலைக்குச் செல்லவேண்டும். இந்த உத்தரவை ஏற்காமல் வேறு ஆடையுடன் பணியில் இருப்பது தெரியவந்தால், அந் நிறுவனத்திடம் 66 டொலர் அபராதம் வசூலிக்கப்படும். இல்லையெனில், அந்த நிறுவனத்தின் உரிமை ரத்துச செய்யப்படும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

பல்வேறு கலாசாரங்களைக் கொண்டுள்ள மலேஷியாவில் 13 மாகாணங்கள் உள்ளன. இவற்றில் 2 மாகாணங்களில் தீவிரவாத இஸ்லாமியக் கட்சியான பாஸ், ஆட்சியிலுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

உலக அரங்கில்

## இந்தியா - பாகிஸ்தானுக்கு உலக நாடுகள் பாராட்டு

இஸ்லாமாபாத்,ஜன.8

இந்தியாவும் பாகிஸ்தானும் தமக்கிடையே உள்ள பலதரப்பட்ட பிரச்சினைகளைப் பேச்சு மூலம் தீர்த்துக் கொள்வதற்கு முன்வந்துள்ளதற்கு உலக நாடுகள் பலவும் வரவேற்புத் தெரிவித்துள்ளன.

அடுத்த மாதம் இரு நாடுகளுக்கும் இடையே நேரடிப் பேச்சு ஆரம்பிக்கும் என்று நேற்றுமுன்தினம் அறிவிக்கப்பட்டது.

இம்முறை இப்பேச்சின் மூலம் நீண்ட காலமாக இருந்து வரும் பகையுணர்வு நீங்கும் என்று எதிர்பார்ப்பதாகவும் இந்திய வெளியுறவு அமைச்சர் ஜஸ்வந்த் சின்ஹா தெரிவித்திருந்தார்.

பேச்சுக்களை ஆரம்பிப்பதற்கு இரு நாடுகளும் முடிவு செய்திருப்பதற்கு ஐ.நா. பொதுச் செயலர் கோபி அனானும் தனது பாராட்டுக்களைத் தெரிவித்துள்ளார்.

## சர்வதேச விண்வெளி ஆய்வகத்தில் காற்றழுத்தம் குறைந்து வருகிறது!

கேனவரல்முனை,ஜன.8

விண்வெளியில் இயங்கிவரும் சர்வதேச ஆய்வு மையத்தில் காற்றழுத்தம் குறையத்தொடங்கியுள்ளதாக விஞ்ஞானிகள் அச்சம் தெரிவித்துள்ளனர்.

இதனால், தற்போது அங்கு தங்கியிருக்கும் இரண்டு வீரர்களின் நிலை கேள்விக்குறியாகியிருக்கிறது. காற்றழுத்தம் குறைந்து செல்வதற்கான காரணத்தைக் கண்டறியும் முயற்சியில் தரையில் உள்ள அமெரிக்க, ரஷ்ய விஞ்ஞானிகள் தற்போது ஈடுபட்டுள்ளனர்.

இவ்வாறு அழுத்தம் குறைவதற்கு காற்றுக் கசிவு காரணமா? என்று தரைக கட்டுப்பாட்டு நிலையத்தில் உள்ள விஞ்ஞானிகள் ஆய்வு மேற்கொண்டு வருகின்றனர்.

அதேசமயம், விண்வெளி ஆய்வகத்தில் உள்ள அமெரிக்க வீரர் மைக்கேல் ஃபோல், ரஷ்ய வீரர் அலெக்ஸ்சாண்டர் கலேரி இருவரையும் தரைக் கட்டுப்பாட்டு விஞ்ஞானிகள் தொடர்பு கொண்டு இத்தகவலைத் தெரிவித்துள்ளனர்.

"ஆபத்து ஏதுமில்லை. நாங்கள் அது குறித்துப் பார்த்துக்கொள்கிறோம். நீங்கள் ஓய்வு எடுத்துக்கொள்ளுங்கள்" - என்று தரையில் உள்ள விஞ்ஞானிகள் அவர்களுக்குக் கூறியுள்ளனர்.

ஆனால், இது குறித்த தகவல் அறிந்த உடனேயே அவர்கள் இருவரும் ஆய்வகத்துக்கு வெளியே சென்று சோதனை நடத்தியுள்ளனர்.

இதனை அங்குள்ள வீரர் போல் தரைக்கட்டுப்பாட்டு நிலையத்துக்குத் தெரிவித்திருக்கிறார்.

(ம)



யூகோஸ்லாவியாவின் பெல்கிரேட் நகரில் குழந்தைகளும், இளைஞர்களும் அவர்களுடைய பாரம்பரிய கிறிஸ்மஸ் பானை வெட்டி உண்பதற்கு ஆயத்தமாவதைப் படத்தில் காணலாம்.

## ஆப்கானில் குண்டு வெடிப்பு: 15 பேர் பலி; 10 பேர் காயம்!

கந்தகார்,ஜன.8

ஆப்கானிஸ்தானின தெற்குப் பகுதியில் உள்ள கந்தகாரில் சக்திவாய்ந்த குண்டு வெடித்ததில் 15 பேர் பலியாகினார்கள்.

தலிபான்களின் கோட்டையாக விளங்கிய கந்தகாரில், அமெரிக்க தாக்குதலுக்குப் பின்னர் தலிபான்களின் ஆட்சி முடிவுக்கு வந்தது. ஆட்சியை இழந்த தலிபான்கள் தற்போதைய ஹமீத் கர்சாய் அரசுக்கு எதிராக செயறபட்டு வருகின்றனர். ஆப்கானிஸ்தானில் உள்ள வெளிநாட்டுப் படையினர் மீதும் இவர்கள் தாக்குதல் நடத்தி வருகின்றனர்.

கந்தகாரில் பிரதான வீதியில் நேற்று முன்தினம் சக்தி வாய்ந்த குண்டு வெடித்தது. இதில் ஏராளமான வாகனங்கள் சேதமடைந்தன. 15 பேர் பலியானார்கள்; 10 பேர் படுகாயமடைந்தனர்.

குண்டு வெடிப்பதற்கு முன்பதாக வேகமாக ஓடிமறைந்து கொண்ட ஒருவரை ஆப்கானியப் பொலீஸார் கைது செய்துள்ளனர். இந்த நபர் தலிபான் அமைப்பைச் சேர்ந்தவர் எனக் கருதப்படுகின்றது. அவரிடம் தொடர்ந்து விசாரணை நடந்துவருகின்றது. காயமடைந்தவர்கள் கந்தகார் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர். இந்த குண்டுவெடிப்பு சம்பவத்தில் பாதிக்கப்பட்டவர்கள் அனைவரும் ஆப்கானிஸ்தானைச் சேர்ந்தவர்கள் என்றும் அந்த மாகாண ஆளுநர் தெரிவித்தார்.



எகிப்திய பயணிகள் விமானம் ஒன்று கடந்த சனியன்று கடலில் வீழ்ந்ததில் 148 பேர் உயிரிழந்தனர். இவர்களில் பெரும்பாலானவர்கள் பிரான்ஸ் நாட்டைச் சேர்ந்தவர்கள். உயிரிழந்த ஒருவரின் உறவுக்காரப் பெண் மெழுகுவர்த்தி ஏற்றி அஞ்சலி செலுத்துகிறார்.

## இரண்டாயிரம் எலிகளை பிடித்தவருக்கு மலேஷியாவில் 80 ஆயிரம் ரூபா பரிசு!

கோலாலம்பூர்,ஜன.8

இரண்டாயிரம் எலிகளைப் பிடித்த மலேஷியருக்கு 80ஆயிரம் ரூபா பரிசு வழங்கப்பட்டது. மலேஷியாவின் வட பகுதி நகரான ஹோடா பாஹ்ருவில் எலிகளின் தொல்லை அண்மைக்காலமாக அதிகரித்தது. இதனையடுத்து, அங்குள்ள எலிகளைக் கொல்லும்படி நகராட்சி அறிவித்தது. அதிக எலிகளைக் கொல்பவருக்கு பரிசும் வழங்கப்படும் என்று அறிவிக்கப்பட்டது.

இந்த எலி ஒழிப்புத்திட்டத்தின் படி பொதுமக்கள் தங்களால் இயன்றளவு எலிகளைக் கொல்ல வேண்டும். அதற்காக அவர்களுக்கு எலி ஒன்றுக்கு ஒரு ரிங்கிட் (மலேஷிய நாணயம்) வழங்கப்படும் என்றும் அறிவிக்கப்பட்டது.

இஸ்மாயில்ஹம்ஜா (வயது-43) என்பவர் உடனடியாக எலிகளைக் கொன்று குவிக்கும் முயற்சியில் இறங்கினார். மூன்று மாதங்களுக்குள் இரண்டாயிரம் எலிகளை அவர் கொன்று குவித்தார். இந்த எலிகளின் உடல்களை நகராட்சி மன்ற உறுப்பினர்களின் பார்வைக்குக் கொண்டு சென்றார்.

நகராட்சி அதிகாரிகளால் எலி பிடிப்பதில் சிறந்தவர் என்ற பட்டம் அவருக்கு வழங்கப்பட்டது. அத்துடன், இரண்டாயிரம் ரிங்கிட்டும் (80 ஆயிரம் ரூபா) அவருக்கு வழங்கப்பட்டது.

## சின்னஞ்சிறு விளம்பரம்

### திருமண சேவை

1969, சித்திரை, செவ்வாய் 8, டோகாவில் தொழில் புரியும் மணமகனுக்கு கௌரவமான குடும்பத்தைச் சேர்ந்த அழகிய மணப்பெண் தேவை. உள்ளூர், வெளியூர் மணமக்களுக்கு தொடர்பு கொள்க. துரைவிமலா இலகு திருமண சேவை. நாச்சிமார்கோயிலடி, யாழ்ப்பாணம். (26904)

1971, மிருகசீரிடம், செவ்வாய் பாவமற்ற கௌரவ குடும்ப கனடா மணமகனுக்கு படித்த அழகான மணமகள் வேண்டும். விரைவில் வரவுள்ளார். தொடர்பு: துரைவிமலா இலகு திருமண சேவை நாச்சிமார் கோவிலடி, யாழ்ப்பாணம். (26869)

### சட்ட விரோத மதுபான விற்பனை நிலையம் பொலீஸாரிடம் சிக்கியது

தெல்லிப்பழை,ஜன.8

சுன்னாகம் நகரப் பகுதியிலுள்ள திரையரங்கு ஒன்றின் அருகில் சட்ட விரோதமான முறையில் இயங்கி வந்த மதுபான விற்பனை நிலையமொன்றை பொலீஸார் கைப்பற்றியுள்ளனர்.இது தொடர்பாக ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

இரகசியமான முறையில் அனுமதிபத்திரமின்றி இயங்கி வந்த இம்மதுபான விற்பனை நிலையத்திலிருந்து பெருமளவு சாராயப் போத்தல்களையும் சுன்னாகம் பொலீஸார் கைப்பற்றியுள்ளனர். இச்சம்பவத்தின் போது கைது செய்யப்பட்ட நபர் நீதிமன்றில ஆஜர்படுத்தப்படவுள்ளார். (ம-150)

### ஓவிய, சிற்ப கண்காட்சி

திருமறைக் கலா மன்றத்தின் ஓவியக் கலைவட்டம் நடத்தும் ஓவிய மற்றும் சிற்பக் கண்காட்சி நாளை வெள்ளிக கிழமைமுதல் 11ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது.

யாழ்றக்காவீதியில் உள்ள 'கலா முற்றம்' அலுவலகத்தில் இடம்பெறும இக்கண்காட்சி தினமும் காலை 9மணி முதல் பிற்பகல் 5மணிவரை மூன்று நாள்களும் இடம்பெறும்.

இக்கண்காட்சியைப் பார்வையிடுவோர் மத்தியிலும் ஓவியப்போட்டி ஒன்று நடத்தப்படவுள்ளது.

கண்காட்சித் திடலில் வைத்து தலைப்பு ஒன்று வழங்கப்படும் அத் தலைப்புக்கு அமைய ஓவியங்களை வரைந்து கொடுக்க வேண்டும். அவற்றில் சிறந்த மூன்று ஓவியங்களின் தெரிவு செய்யப்பட்டு நினைவுப் பரிசுகள் வழங்கப்படவுள்ளன. இக்கண்காட்சிக்கான பிரவேசம் இலவசம் என அறிவிக்கப்படுகிறது. (ம-9)


**சித்திரப்பயிற்சி**

**A/L 2006 2005**

தரம் **6-O/L** வரை

**ஆரம்பமாகியுள்ளது.**

- ★ வசதிப்படி நேரசூசி
- ★ மிகக் குறைந்த கட்டணம்
- ★ பயிற்சி முடிவில் சான்றிதழ்

(26913)(35-21-13-26)

**IAT சித்திரப் பயிற்சி நிறுவனம்**

ஆத்திசூடிவீதி, கந்தர்மடம்.


## பாராட்டி வாழ்த்துகிறோம்



சந்திரபுரம், மட்டுவில் வடக்கு
செல்வவிநாயகர் சனசமூக நிலையத்தின் முன்னாள் தலைவரும்
முன்னாள் தென்மராட்சி சனசமூக நிலையங்களின்
சமாசச் செயலாளரும், தற்போது செல்லப்பிள்ளையார் கோயில்
திருப்பணிச் சபை செயலாளருமான

### திரு.வல்லிபுரம் மகாலிங்கம்

அவர்கள் 05.01.2004 அன்று சாவகச்சேரி மாவட்ட நீதிமன்றில் நீதிபதி திரு.சிவசுப்பிரமணியம் முன்னிலையில் அகில இலங்கை சமாதான நீதவானாக சத்தியப்பிரமாணம் செய்து கொண்டதையிட்டு அவரை மனமாரப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

மட்டுவில் வடக்கு,
சந்திரபுரம்,
சாவகச்சேரி. (26910)(26-21-13)

நிர்வாகத்தினர்,
செல்வ விநாயகர் சனசமூக நிலையம்.

## பாராட்டி வாழ்த்துகிறோம்



சந்திரபுரம், மட்டுவில் வடக்கு செல்வவிநாயகர்
சனசமூக நிலையத்தின் முன்னாள் தலைவரும்
முன்னாள் தென்மராட்சி சனசமூக நிலையங்களின் சமாசச்
செயலாளரும், தற்போது செல்லப்பிள்ளையார் கோயில்
திருப்பணிச் சபை செயலாளருமான

### திரு.வல்லிபுரம் மகாலிங்கம

அவர்கள் 05.01.2004 அன்று சாவகச்சேரி மாவட்ட நீதமன்றில் நீதிபதி திரு. சிவசுப்பிரமணியம் முன்னிலையில் அகில இலங்கை சமாதான நீதிவானாக சத்தியப்பிரமாணம் செய்து கொண்டதையிட்டு அவரை மனமாரப் பாராட்டி வாழ்த்துகிறேன்.

சின்னத்துரை கமலாம்பிகை
[ஆசிரியை] (26911)

சந்திரபுரம்.
மட்டுவில் வடக்கு. சாவகச்சேரி. (26-21-13)

## மானிப்பாய் மருதடி விநாயகர் ஆலயம்

மானிப்பாய்

தகரப் பந்தல் அமைப்பதற்கான

### கூறுவிலை கோரல்

60அடி நீளம், 20அடி அகலமும் கொண்ட தகரப்பந்தல் 1½ inch தடித்த கல்வனைஸ்பைப் கொண்டும், 18 கேஜ் தடிப்புள்ள தகரமும் கொண்டு செய்யப்பட வேண்டும்.

மேற்படி பந்தலுக்கு கூறுவிலை கோரப்படுகிறது.

தகுதியானவர்கள் தங்கள் கூறுவிலையை 14.01.2004 அன்று பகல் 12.00மணிக்கு முன்னதாக, ஆலயத்தில் நேரடியாகவோ, தபால் மூலமாகவோ கிடைக்கச் செய்யவும்.

சித்தி பெறும் கேள்விக்காரர் 31.01.2004 இற்கு முன்பதாக மேற்படி பந்தலை ஆலயத்தில் ஒப்படைக்க வேண்டும்.

தலைவர்
தர்மகர்த்தா சபை,
மானிப்பாய் மருதடி விநாயகர் ஆலயம்
மானிப்பாய்.

(26906)(35-21-13-18)

## நன்றி தெரிவித்துக் கொள்கின்றோம்

எமது குடும்பத்தின் மணிவிளக்கு

### திருமதி இரத்தினசபாபதி சீதேவிப்பிள்ளை

அவர்களின் திடீர் மரணச்செய்தி கேட்டு உடன்வந்து பல்வேறு உதவிகள் செய்த அயலவர்கள், இச்செய்தியைப் பிள்ளைகளுக்கு அறிவிக்க உதவியவர்கள், பிள்ளைகள் இறுதிக்கிரியைகளில் கலந்துகொள்ளத் தேவையான உதவிகளைச் செய்த வவுனியா கல்விவலய சமூகத்தினர், வெளிநாட்டு நண்பர்கள், வெளிநாட்டுத் தூதரகங்களிலுள்ளவர்கள், உறவினர்களுக்கு இந்த அவலச் செய்தியை அனுப்ப உதவியவர்கள், அன்னாரின் உடல்பழுதுபடாமலிருக்க ஆவன செய்துதவிய வைற்றவுஸ் ஸ்தாபனத்தார் மற்றும் இறுதிக்கிரியைகளில் கலந்துகொண்ட உறவினர்கள், நண்பர்கள், அயலவர்கள், உத்தியோகத்தர்கள், சோக இசை வழங்கிய பாண்ட்வாத்தியக் குழுவினர், தொலைபேசி, தந்தி, பக்ஸ், தபால் மூலமாக எமக்கு அனுதாபச் செய்திகளை அனுப்பியவர்கள் ஆகிய அனைவருக்கும் எமது நெஞ்சம் நெகிழ்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

திரு.த. இரத்தினசபாபதி (கணவர்)
மற்றும்
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

அல்லாரை தெற்கு,
மீசாலை. (26902)(26-21-13-18)


**பொங்கல் Offer**

அதி நவீன கணனிகள்

**Intel Pentium 4**

2.0 / 2.4 / 2.6 / 3.0 Ghz

**55,950/-**

விசேட சலுகை விலையில்

| | |
|---|---|
| 2.1, 4.1, 5.1, Woofers | 1,400/- |
| Digital Cameras | 8,000/- |
| Scanners | 6,500/- |
| Printers, UPS | 4,800/- |
| T.V + FM Cards | 4,300/- |
| Writers/Combo | 6,950/- |
| View Sonic Monitors 15`` | 11,300/- |

(26905) (23)

**REPAIRS**

கணனி பழுது பார்த்தல்

Free கலர் Printer or UPS

- இன்றநெற் - e-mail இணைப்பு
- Software Installation
- Net2phone setup
- உதிரிப்பாகங்கள் மாற்றல்/ பழுதுபார்த்தல்
- மொனிட்டர், UPS, ஸ்கானர், பிரின்ரர், Power unit

உங்கள் வீடுகளுக்கு/அலுவலகத்துக்கு வந்து திருத்தப்படும்

**நடமாடும் சேவை (MobileDivison)**

மேலதிக விபரங்களுக்கு: 021 - 222 5893

**MICRO PC SYSTEMS**

175/3, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

கிளைகள்: வெள்ளவத்தை, கொட்டாஞ்சேனை, வவுனியா, திருகோணமலை, மட்டக்களப்பு



**விக்னா கல்வி நிறுவனம்**

**A/L 2004**

அனேக மாணவர்களின் வேண்டுகோளுக்காக மேலும் ஒரு புதிய பிரிவு

- ★ சந்தை சமநிலை வரைபுகள் 4.30 - 5.30 சனி, ஞாயிறு (S.L.T)
- ★ 400 பயிற்சி வினாக்கள் 5.30 - 6.30 சனி, ஞாயிறு (S.L.T)
- ★ A/L 2005 11.30 - 12.30 சனி, ஞாயிறு (S.L.T)
- ★ A/L 2006 9.30 - 10.30 சனி, ஞாயிறு (S.L.T)

(C/32619)(35-21-13-18)

**பொருளியல் திரு.K.உதயன்**

B. B, A. (HONS) B.A (பேரதேனியா)


## அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு

பிறப்பு 18 - 06 - 1925



இறப்பு 07 - 12 - 2003

அமரர்

### பொன்னம்பலம் செல்லத்துரை

எமது இல்லத் தலைவர் அவர்களின் அந்தியேட்டி, வீட்டுக்கிருத்தியம் என்பன இன்று (08-01-2004) வியாழக்கிழமை முற்பகலில் எமது இல்லத்தில் நடைபெறும். இந்நிகழ்வுகளில் கலந்துகொள்வதோடு நண்பகல் நடைபெறுகின்ற மதியபோசனத்திலும் பங்குகொள்ளுமாறு உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரையும் அன்போடு அழைக்கின்றோம்.

"வளர்மதி வாசா",
பன்னாலை, தெல்லிப்பழை.

- குடும்பத்தினர்.
(26917) (26-21-13-18)

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்

பிறப்பு 1927 - 04 - 17



இறப்பு 2003 - 12 - 09

### அமரர் காத்தமுத்து சுப்பிரமணியம்

அன்னாரின் அந்தியேட்டிக் கிரியைகள் இன்று (08-01-2004) வியாழக்கிழமை காலை 8 மணிக்கு இன்பருட்டி மடத்தில் நடைபெறும். இதில் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் கலந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

*அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறையருள் வேண்டி நிற்கின்றோம்.*

*மகன்* - சு.நடராசா, *மருமகள்* - சந்திரலேகாமணி (இந்தியா), *பேரன்மார்:* விஜயகுமார் (இந்தியா), தெய்வகுமார், சிவகுமார், சசிகுமார் (இத்தாலி), ராசகுமார் (லண்டன்), செல்வரயனி (லண்டன்),*பூட்டன்:* நரேஸ் (லண்டன்), உதயகுமார் (சுவிஸ்), *மனைவி* உதயகுமாரி (சுவிஸ்),*பேர்த்தி* - வளர்மதி, *கணவன* - விவேகானந்தன், *பூட்டன* - தினேஷ், ஆகாஸ், *பூட்டி* - கீர்த்தனா (லண்டன்), மூத்தமகள் புனிதவதி, *மருமகன* சூரியமூர்த்தி, *பேரப்பிள்ளைகள்:* தவேந்திரராசா, ஜெகன், சுபாஜினி, சுஜாதா, சுதாகர். கல்யாணி, *பூட்டப்பிள்ளைகள்:* கிசோ, கபில், கீர்த்தனா, அனிற்றா, சதீபன், தர்சன், தயானி, விதுசன்.
*இரண்டாவது மகள்:* வண்ணக்கிளி, *மருமகன்:-* திருமுருகன் (பிரான்ஸ்), *பேர்த்திமார்:* வனி திவ்வியா தாரணி (பிரான்ஸ்).
*மூன்றாவது மகள்:* ஜீவாதேவி, *மருமகன* சாந்தகுமார், *பேரப்பிள்ளைகள:* பிரதீபன், பிரசாந்தினி, சிந்தியா, *சகோதரி* தவமணி, *கணவன* தங்கராசா *பெறாமக்கள்:* சரோஜினிதேவி, சுசிலாதேவி ஆகியோர்

அன்னாரின் ஆத்மா சாந்தி பெற இறையருள் வேண்டி நிற்கின்றனர்.

இன்பருட்டி. பருத்தித்துறை. (சி-32637)(19-21-13-18)

தகவல்:
குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

### சிதம்பரநாதன் வடிவேற்பிள்ளை

இல.45, செட்டித்தெரு, நல்லூர், யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த சிதம்பரநாதன் வடிவேற்பிள்ளை அவர்கள் 06.01.2004 செவ்வாய்க்கிழமை தெகிவளையில் காலமானார்.

அன்னார் உயரப்புலம், ஆனைக்கோட்டையைச் சேர்ந்த காலஞ்சென்றவர்களான சிதம்பரநாதன் - ஆச்சிமுத்தம்மா ஆகியோரின் அன்பு மகனும், காலஞ்சென்ற விசாலாட்சியின் கணவரும் திருமதி கமலா கந்தையாவின் சகோதரரும் சச்சிதானந்தன், சிதம்பரநாதன், காலஞ்சென்ற ஜெயந்தி, தமயந்தி ஆகியோரின் பாசமிகு தந்தையும் கேசரி, உதயா, இளங்கோ, குகேஸ்வரன் ஆகியோரின் மாமனாருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (08-01-2004) வியாழக்கிழமை மாலை 3.00மணியளவில் இல.591, காலி வீதி, கல்கிசையிலுள்ள மகிந்த மலர்ச்சாலையில் நடைபெற்று, பூதவுடல் மாலை 4.30 மணிக்கு கல்கிசை மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

120/3, காலி வீதி,
தெகிவளை.
தொலைபேசி: 2716442 (சி-32636) (26-21-13-18)

தகவல்:
வ.சிதம்பரநாதன்
(மகன்)

உதயன்

## சர்வதேச மாற்றம் இங்கும் வருமா?

சர்வதேச அரசியலில் இவ்வாரம் எதிர்பாராத பல திடீர் திருப்பங்களும் மாற்றங்களும் ஏற்பட்டிருப்பது சர்வதேச அரசியல் பார்வையாளர்களுக்கு அதிர்ச்சியையும் ஆச்சரியத்தையும் தந்திருக்கின்றது.

தங்களுக்குள் யுத்தம் புரிந்து, அதன்பின் தொடர்ந்து கருத்து முரண்பாடுகளை வெளிப்படுத்தி வந்த பல நாடுகள் திடீரென கைகுலுக்கி நட்புக் கரம் நீட்டியிருக்கின்றன.

ஐந்து வருடங்களுக்கு முன்னர் - குர்திஷ் தீவிரவாதிகளுக்கு சிரியா உதவி செய்கின்றது என்ற குற்றச்சாட்டின் பேரில் - அந்த நாட்டுடன் நேரடிப் போர் தொடுக்க யுத்த விளிம்பு வரை சென்றது துருக்கி. அமெரிக்க சார்புடைய துருக்கியை கடந்த நான்கு தசாப்த காலமாக எதிரி போன்றே சந்தேகக் கண்ணுடன் நோக்கி வந்தது சிரியா.

ஆனால், இப்போது பனி படர்ந்த துருக்கித் தலைநகர் அங்காராவில் சிரிய அதிபர் பஷார் அல் அஸாத்துடன் கைகுலுக்கி நட்புறவுப் பேச்சை ஆரம்பித்திருக்கின்றார் துருக்கி அதிபர் அக்மட் ஸெஸர்.

இஸ்ரேலுடன் சமாதான உடன்பாடு செய்தமைக்காக எகிப்துடனான உறவை 1980களில் துண்டித்துக் கொண்ட ஈரான், இப்போது எகிப்துக்கு நட்புக் கரம் நீட்டியிருக்கின்றது.

1979இல் ஈரானில் நடந்த மதப்புரட்சிக்குப் பின்னர் அண்மையில்தான் முதல் தடவையாக ஈரானிய அதிபர் மொஹமட் கதாமிக்கும் எகிப்து அதிபர் ஹொஸ்னி முபாரக்கிற்கும் இடையில் சிநேகபூர்வ சந்திப்பு நிகழ்ந்தது. மீண்டும் இரு நாடுகளுக்கும் இடையில் இராஜதந்திர உறவு மலர இருப்பதாக அறிவிக்கப்பட்டிருக்கின்றது.

இதேபோல, நமது அயலில் பரம வைரிகளாக விளங்கிய இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்கும் இடையில் நல்லுறவு மலரும் சாத்தியம் பற்றிய அறிவிப்பும் இப்போது வெளியாகியிருக்கின்றது.

பாகிஸ்தான் தலைநகர் இஸ்லாமாபாத்தில் 'சார்க' மாநாட்டை ஒட்டி பாகிஸ்தான் அதிபர் பர்வேஸ் முஷாரப்புக்கும் இந்தியப் பிரதமர் அடல் பிஹாரி வாஜ்பாய்க்கும் இடையில் இடம்பெற்ற சந்திப்பு இரு நாடுகளுக்கும் இடையில் மற்றொரு தடவை சமரச முயற்சிகள் இடம்பெறுவதற்கான வாய்ப்பை ஏற்படுத்தித் தந்திருக்கின்றது.

இந்தியா - பாகிஸ்தான் நாடுகளுக்கிடையில் சர்ச்சையையும் குழப்பத்தையும் - ஏன் அவ்வப்போது யுத்தத்தையும் கூட - ஏற்படுத்தி வந்த - பிரச்சினைக்குரிய - காஷ்மீர் பிரதேசம் குறித்து இரு தரப்பினரும் அடுத்த மாதம் நேரடியாகப் பேசுவது என்றும் தீர்மானிக்கப்பட்டிருக்கின்றது.

உலக சனத்தொகையில் கால்வாசிக்கு அதிகமான எண்ணிக்கையில் மக்களைக் கொண்ட இந்த ஆறு நாடுகளும் தங்களுக்குள் உள்ள வேற்றுமைகளை மறந்து தத்தமது பிரதேசங்களில் - பிராந்தியங்களில் - நிரந்திர அமைதியை ஏற்படுத்தும் ஆக்கபூர்வமான முன்முயற்சிகளில் முனைப்பாக ஈடுபடத் தொடங்கியிருப்பது கண்கூடாகத் தெரிகின்றது. சர்வதேச மட்டத்தில் காலங்காலமாக தங்களுக்குள் எதிரிகளாக மோதி - கொடூர யுத்தத்தில் ஈடுபட்டு - வந்த தரப்புகள்கூட இப்போது கை கோர்த்து நடக்கத் தயாராகிவிட்டன.

சர்வதேச மட்டத்தில் ஏற்பட்டுவரும் இந்த மாற்றம் நமது நாட்டிலும் தேசிய மட்டத்தில் ஏற்படாமல் இல்லை.

இனப்போரில் ஈடுபட்டு வந்த சிங்களத்தரப்பும் தமிழர்தரப்பும் அமைதி வழியில் - சமாதான முறையில் - தங்களுக்குள் பிரச்சினையைத் தீர்க்க ஒரே மனதாக இணக்கம் கண்டு, அதற்கான ஆணையையும் கடந்த பொதுத்தேர்தல் மூலம் அரசியல் தலைவர்களுக்கு வழங்கி, தங்கள் எதிர்பார்ப்பையும் அபிலாஷையையும் வெளிப்படுத்தியிருந்தன.

அந்தச் சமாதான நடவடிக்கைகளுக்கான முன்முயற்சிகளும் ஆக்கபூர்வமான வழியில் எடுக்கப்பட்டு முன்னேற்றம் காணப்பட்டது. ஆனால், இப்போது எல்லாம் தலைகீழாகிவிட்டன. அடுத்து என்ன நடக்கும் என்ற அச்சநிலை பலருக்கு. நாட்டில் தற்காலிகமாகவேனும் அமைதி நீடிப்பதற்குக் காரணமான யுத்த நிறுத்தம் நின்று நிலைத்துத் தாக்குப் பிடிக்குமா என்ற சந்தேகம் கூட ஏற்பட்டு விட்டது.

இன்று நிலவும் இவ்வளவு குழப்பத்துக்கும் - நெருக்கடிக்கும் - காரணம் இனமோதல்களில் எதிரும் புதிருமாக ஈடுபட்ட இரு தரப்புகளுமல்ல. சிங்களத் தலைமைத் தரப்பில் நிறைவேற்று அதிகாரத்துக்கும் சட்டமாக்கும் நாடாளுமன்ற அதிகாரத்துக்கும் இடையிலான அதிகாரப் போட்டியே சமாதான முயற்சிகள் அடிபட்டுப் போகும் சூழ்நிலை ஏற்பட்டிருப்பதற்குக் காரணம்.

சர்வதேச ரீதியில் இடம்பெற்றுவரும் சமாதான முயற்சிகள் நமது நாட்டிலும் மேற்கொள்ளப்படமாட்டாவா என்பதுதான் இப்போது இந்நாட்டு மக்களின் ஒரே ஆதங்கமாகும்.

# தமிழர்கள் புலம் பெயர்ந்து வாழும் நாடுகளில் தமிழ்மொழி செத்துக்கொண்டிருக்கின்றது

## ஆஸ்திரேலிய ஈழத் தமிழர் கழகத் தலைவர் உரை

வலி.வடக்கு,ஜன.8

"புலம்பெயர்ந்து பல்வேறு நாடுகளிலும் வாழும் தமிழ் மக்களிடையே தமிழ்மொழி மெல்லமெல்லச் செத்துக்கொண்டு இருக்கின்றது. இத்தகைய நாடான ஆஸ்திரேலியாவில் இருந்து சுமார் பதின்மூன்று வருடங்களின் பின்னர் இந்த மண்ணுக்கு வந்துள்ளேன். நான் பேசும் மொழியில் தடங்கல்கள் ஏற்பட்டால் மன்னித்துக்கொள்ள வேண்டும்".

ஆஸ்திரேலியாவில் உள்ள ஈழத்தமிழர் கழகத்தின் தலைவர் வை.ஈழலிங்கம் இவ்வாறு தெரிவித்தார்.

கலாநிதி சிவத்தமிழ்ச்செல்வி தங்கம்மா அப்பாக்குட்டியின் 79ஆவது பிறந்தநாள் அறக்கொடை விழா நிகழ்வு தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தான அன்னபூரணி மண்டபத்தில் துர்க்காதுரந்தரி செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி தலைமையில் நேற்று இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் தொடர்ந்து உரையாற்றிய வை.ஈழலிங்கம் மேலும் தெரிவித்ததாவது:-

1977 ஆம் ஆண்டு இலங்கைத் தமிழர் சங்கம் என்ற பெயரில் எமது அமைப்பு உருவானது. தமிழீழப் பேராட்டம் வளர்ச்சி அடைந்ததைத் தொடர்ந்து இலங்கைத் தமிழர் சங்கம் என்ற பெயரை ஈழத்தமிழர் கழகம் என மாற்றி ஆஸ்திரேலிய அரசில் பதிவுசெய்து அறக்கட்டளை நிறுவனமாக இயங்கிவருகின்றோம்.

எமது சங்கத்தின் 25ஆவது ஆண்டு நிறைவைக் கொண்டாடும் போது 25 ஆயிரம் டொலர்களைச் சேமித்து ஈழத்தில் கல்வி அபிவிருத்திக்கு உதவி செய்வதெனத் தீர்மானித்தோம். அதன் அடிப்படையில் தீர்மானம் நிறைவேற்றியபோது, ஆறு. திருமுருகன் அங்கு வந்து செயறபாடு இடம்பெறுவதற்கான வழியை ஏற்படுத்தித் தந்தார்.

சமாதானத்தை நோக்கி இன்று நாம் சென்று கொண்டிருக்கின்றோம். இந்த நிலைமையில், இளைய தலைமுறையை வலுவுள்ளவர்களாகவும் அறிவுள்ளவர்களாகவும் மாற்ற வேண்டியது எங்கள் ஒவ்வொருவரினதும் கடமையாகும்.

இதன் அடிப்படையிலேயே நாம் சிவத்தமிழ்ச்செல்வி அம்மாவின் மூலம் கல்வி அபிவிருத்திக்கு நிதி உதவியை வழங்கியுள்ளோம். தமிழர்கள் வாழும் இடங்களில் சமயத்தின் தேவையும் அவசியமாக இருக்கின்றது. இதன் அடிப்படையிலேயே சிட்னி நகரில் முருகன் கோயிலையும் நிறுவி செயற்படுத்தி வருகின்றோம்.

அங்கு சமய வளர்ச்சி ஏற்பட இங்குள்ளவர்கள் உதவி செய்ய முன்வரவேண்டும். இந்தியாவில் இருந்து அறிஞர்களை அழைக்கின்ற போதிலும் கூட முழுமையான வரலாற்றைக் கூறுபவர்களாக அவாகள் இல்லை. இங்கு இருந்து வருபவர்களினாலேயே உண்மையான சமயக்கருத்தை வெளிப்படுத்த முடியும் எனவும் குறிப்பிட்டார்.

யாழ்ப்பாணம் தேசிய கல்வியயற் கல்லூரி பீடாதிபதி தி.கமலநாதன் உரையாற்றும்போது கூறியதாவது:-

சமூகத்தில் இன்று கூறுவது ஒன்று செய்வது ஒன்று மாறுபட்ட நிலையே காணப்படுகின்றது. ஆனால், சிவத்தமிழ்ச்செல்வியிடம் இத்தன்மை இல்லை. சொல், செயல், சிந்தனை என்ற மூன்றும் ஒரு நேர்கோட்டிலேயே இருக்கின்றது. இதுவே உயர்ந்த பண்பும் ஆகும்.

தேவாரங்கள், திருவாசகங்கள், திருமுறைகளை ஓதும்போது கைகூப்பி வணங்கிய வண்ணம் இருக்க வேண்டும் என நான இந்துக்கல்லூரியில் படிக்கும்போது அம்மா கூறியிருந்தார். மாணவனாக இருக்கும்போது ஆதனைப் புறந்தள்ளிய நான், அதன் மகிமையை இன்று உணர்கின்றேன். என்னுடைய மாணவர்களுக்கும்கூட இதனை கற்பித்து வருகின்றேன் எனவும் குறிப்பிட்டார்.

அகில இலங்கை கம்பன் கழகத்தைச் சேர்ந்த பிரசாந்தன் உரையாற்றும்போது தெரிவித்ததாவது:-

நான் இங்கிலாந்துக்குச் சென்றிருந்தபோது ஒன்றை உணரக் கூடியதாக இருந்தது. அங்குள்ள புலம்பெயர்ந்த மக்கள் தமது சொந்த மண்ணில் நிர்க்கதியாக இருக்கும் மக்களுக்கு ஏதோ ஒரு வகையில் உதவி செய்ய வேண்டும் என எதிர்பார்க்கிறார்கள்.

நாம் இடம்பெயர்ந்து எம்மையே பாதுகாத்துக்கொள்ள முடியாது இம்மண்ணில் இருந்து ஓடிய போதிலும் அம்மையார் தன்னுடன் இருந்த பிள்ளைகளையும் பாதுகாத்து இங்கு வாழ்ந்த பெருந்தகையாவர் எனக் குறிப்பிட்டார்.

சிவஸ்ரீ இ.சுந்தரேஸ்வரக் குருக்கள், சட்டத்தரணியும் பதில் நீதிபதியுமான மு.சபாநாதன் உட்பட மற்றும் பலரும் நிகழ்வில் உரையாற்றினார்கள். (ம-86)

## தங்கம்மா அப்பாக்குட்டியின் பிறந்தநாள் அறக்கொடை விழா

வலி.வடக்கு,ஜன.8

கலாநிதி சிவத்தமிழ்ச்செல்வி தங்கம்மா அப்பாக்குட்டியின் 79ஆவது பிறந்தநாள் அறக்கொடை விழா நேற்றுக்காலை தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தான அன்னபூரணி மண்டபத்தில் கலாநிதி செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி தலைமையில் இடம்பெற்றது.

முன்னதாக துர்க்கையம்மன் ஆலயமுன்றிலில் இருந்து சிவத்தமிழ்சசெல்வி தங்கம்மா அப்பாக்குட்டி மங்கள வாத்தியம் சகிதம் விழா மண்டபத்திற்கு ஊர்வலமாக அழைத்து வரப்பட்டார்.

மங்களவிழக்கை யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி பீடாதிபதி தி.கமலநாதன், ஆஸ்திரேலிய ஈழத்தமிழர் கழகத் தலைவர் வை.ஈழலிங்கம், இந்துகலாசார அமைச்சின் சிரேஷ்ட செயலாளர் து.வைத்திலிங்கம் ஆகியோர் ஏற்றி வைத்தனர்.

துர்க்காதுரந்தரி செல்வி தங்கம்மா அப்பாக்குட்டியினால் எழுதப்பட்ட 'அறிவொளி காட்டிய சான்றோர்வரிசையில்....' என்னும் நூலை சிற்பி (சரவணபவன்) வெளியிட்டு வைத்து ஆய்வுரையை நிகழ்த்தினார்.

நூலின் முதற்பிரதியை வை.ஈழலிங்கம் தங்கம்மா அப்பாக்குட்டியிடம் இருந்து பெற்றுக்கொண்டார்.

ஆசியுரைகளை சிவஸ்ரீ இ.சுந்தரேஸ்வரக்குருக்கள், நல்லை ஆதீன குரு முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள், யாழ்ப்பாணம் தேசிய கல்வியயற் கல்லூரி பீடாதிபதி தி.கமலநாதன், அகில இலங்கை கம்பன் கழக துணைப் பொறுப்பாளர் க.பிரசாந்தன் ஆகியோர் வழங்கினார்கள்.

தொடர்ந்து பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட யாழ்ப்பாணம் பல்கலைக்கழக தமிழ்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி சி.சிவலிங்கராசா நூல் வெளியீட்டுரையையும் பிரதம விருந்தினர் உரையையும் நிகழ்த்தினார்.

நிகழ்வில் யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த பேராசிரியர்கள், தமிழர் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களான ந.ரவிராஜ், மாவை சேனாதிராசா மற்றும் பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள், வலயக் கல்விப் பணிப்பாளர்கள் உட்பட பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள், பொதுமக்கள் எனப்பலரும் கலந்து கொண்டனர். (ம-86)

## சிறு கைப்பணியாளர்களை இணைத்து ஒன்றியம் அமைக்க நடவடிக்கை

யாழ்ப்பாணம்,ஜன.8

யாழ்.மாவட்டத்திலுள்ள சிறு கைப்பணியாளர்களை ஒன்றிணைத்து யாழ்மாவட்ட கைப்பணியாளர் ஒன்றியம் ஒன்றை அமைப்பதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளன. இது தொடர்பான கலந்துரையாடல் ஒன்று எதிர்வரும் 10ஆம் திகதி காலை 10மணிக்கு யாழ்.செயலகத்தில் இடம்பெறவுள்ளது.

தும்புத்தொழில், பனையோலைக் கைத்தொழில், மரச்சிற்ப வேலை, கடதாசிப் பொம்மைகள் செய்தல், மட்பாண்டப் பொருள்கள், உற்பத்தி, துணி அச்சு மற்றும் அலங்கார வேலைப்பாடுகள் ஆகியவற்றில் ஈடுபடும் சகல கைப்பணியாளர்களையும் இதில் தவறாது கலந்துகொள்ளுமாறு தொழில்துறைத் திணைக்கள மாவட்ட அலுவலர் பி. ராகவன் கேட்டுள்ளார். (ம-5)

## இம்மாத நடுப்பகுதியில் அகாஷி மீண்டும் இலங்கை வருகின்றார்

ஜப்பானின் விசேட சமாதானத் தூதுவர் யசூஷி அகாஷி இம்மாத நடுப்பகுதியில் மீண்டும் இலங்கை வருகிறார். இங்குள்ள நிலைமைகளை ஆராய்வதுடன் உயர்மட்டப்பேச்சுக்களையும் அவர் நடத்தவிருக்கின்றார்.

அரசியல் நெருக்கடிகளுக்குத் தீர்வுகண்டு விடுதலைப் புலிகளுடன் உடனடியாகச் சமாதானப் பேச்சை ஆரம்பிக்கும்படி ஜப்பான் இலங்கையை வலியுறுத்தி வருகின்றது.

ஒரு வாரகால விஜயத்தை மேற்கொண்டு இம்மாதம் 19 ஆம் திகதி அகாஷி இலங்கைக்கு வருவார் என இராஜதந்திர வட்டாரங்கள் தெரிவித்தன. டோக்கியா மாநாட்டின் நன்கொடையாளர்களினுடனான சந்திப்புக்களிலும் அகாஷி கலந்துகொள்வார் என எதிர்பார்க்கப்படுகின்றது. ஜனாதிபதி, பிரதமர் மற்றும் ஏனைய தலைவர்களைச் சந்திக்கும் அகாஷி விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகளையும் சந்தித்து பிரச்சினைகளுக்குத் தீர்வுகாண்பது தொடர்பாகக் கலந்துரையாடுவார் என எதிர்பார்க்கப்படுகின்றது. (ம)

**நாளை**

மார்கழி 25
வெள்ளிக்கிழமை
(09.01.2004)
திதி: துதியை
முன்னிரவு 11.51 வரை.
நட்சத்திரம்: பூசம்
முன்இரவு 7.42 வரை
சுபநேரம்: 6.32-8.02
ராகுகாலம்: 11.02-12.32
(பழைய நேரப்படி)

**உதயவாக்கு**

நல்ல நம்பிக்கை என்ப[illegible] உண்மையின் மறு[illegible]

## விபத்தில் சிறுமி பலி!

யாழ்ப்பாணம்,ஜன.8

இயக்கச்சிச் சந்தியில் நேற்றுமுன்தினம் மாலை இடம்பெற்ற வீதி விபத்தில் சிறுமி ஒருத்தி கொல்லப்பட்டார்.

புளியங்குளத்திலிருந்து பளை நோக்கிச் சென்று கொண்டிருந்த மினிபஸ் ஒன்று, வீதியைக் கடக்க முயன்ற சிறுமியை மோதிப்பந்தாடியது. கிளிநொச்சி ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் செல்லப்பட்டபோது வழியில் சிறுமி உயிரிழந்தார்.

ஊரணியன் பற்று, இயக்கச்சியைச் சேர்ந்த சிவகுரு கஜிதா (வயது 9) என்ற சிறுமியே சம்பவத்தில் உயிரிழந்தார்.

இதேவேளை - நேற்றுமுன்னதிம் கிளிநொச்சியில் வேறு இரண்டு வாகன விபத்துக்களும் இடம்பெற்றுள்ளன. (ம-9)

### சட்டங்களில் மாற்றங்களைக் கொண்டுவந்து

## மாகாண சபைகளுக்கு ஒரே நாளில் தேர்தல்

மாகாண சபைகள் தொடர்பான சட்டங்களில் மாற்றங்களைக் கொண்டுவருவதன் மூலம் அனைத்து மாகாண சபைத் தேர்தல்களையும் ஒரே நாளில் நடத்துவதற்கு ஐக்கிய தேசிய முன்னணி அரசு தீர்மானித்துள்ளது.

முன்னணியின் கொள்கை வகுப்புச் செயற்குழுவின் சந்திப்பொன்றைத் தொடர்ந்தே இம் முடிவு எடுக்கப்பட்டதாக அக்கட்சி வட்டாரங்கள் தெரிவித்தன. தேர்தல்களை ஒரே நாளில் நடத்துவதற்கு சட்டத்தில் மாற்றம் செய்யப்படல் வேண்டும் என செயற்குழுவிற்கு பிரதமர் தெரிவித்தார்.

ஜனாதிபதியுடனான தற்போதைய அரசியல் நெருக்கடி விரைவில் தீர்வதற்கான அறிகுறிகளில்லாததால் தேர்தலிற்குத் தயாராகுமாறும் அவர் தனது கட்சி உறுப்பினர்களைக் கேட்டுக்கொண்டார்.

1999இல் நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலின் பின், ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க இரண்டு தடவைகள் சத்தியப்பிரமாணம் செய்தார் என்று கூறப்படுவது தொடர்பாகவும் செயற்குழு ஆராய்ந்தது. ஜனாதிபதி குமாரதுங்கவின் இரண்டாவது பதவிக்காலம் அடுத்தவருடம் டிசெம்பர் மாதத்துடன் முடிவடையும் என்பதில் தனக்கு எவ்வித சந்தேகமுமில்லை என அரசியலமைப்பு விவகார அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் தெரிவித்தார்.

ஜனாதிபதியின் இரண்டாவது பதவிக்காலம் டிசெம்பர் 2005 இல் உத்தியோகபூர்வமாக நிறைவடையும் என தேர்தல் ஆணையாளர் தயானந்தா திசாநாயக்காவிற்கு அரசு அதிகார பூர்வமாக அறிவித்துள்ளது. (ம)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்
15 - 04 - 1975



மறைவு
20 - 12 - 2002

*அன்பின் பிறப்பிடமாய், பாசத்தின் உறைவிடமாய், நேசத்தின் வசிப்பிடமாய்,*
*பண்பின் மறைவிடமாய் துன்பத்தின் தொலைவிடமாய் கடமையின் கண் இமையாய்*
*பரிவில் பரியாய், மனத்துள் மாணிக்கமாய் எல்லாமாய் வாழ்ந்த எம் அன்புத் தெய்வம்*

### அமரர் தங்கராசா விஜியேந்திரகுமார்

திதி: 08-01-2004

அவர்களின் இழப்பில் நாம் அனைவரும் அனைத்தையும் எம் உள்ளத்தால் இழந்து அனாதையாய் நிற்கின்றோம்.

தேற்றுவார் யாருமின்றி தினம் தேம்பி அழுகின்றோம்
ஆற்ற வழிதேடி தோற்றுத் துடிக்கின்றோம்

மாற்று உண்டென்றால் நீ மறுபடியும் வந்தெங்கள்
வாழ்வை வளம்படுத்து

வாழும் வயதில் காலனுக்கு உனைக்கொடுத்த எமது விஜியே!
உன் ஈகைக்கு அளவே இல்லையா?

உன் இரக்கக்குணம் இவ்வுலகில் யாருக்குமே இல்லை
இப்பெருமையை நாங்கள் அனைவரும்
பெருமையுடன் உன்னை வணங்கி நிற்கின்றோம்

உனது பிரிவால் எமது உள்ளங்கள் உறங்காமல் தவிக்கின்றன.

*ஓம் சாந்தி! ஓம் சாந்தி! ஓம் சாந்தி!*

தகவல்:
திருமதி த.சிவபாக்கியம்
(அம்மா-கனடா)
905-472-4955

உனது பிரிவால் வாடும்:
**அம்மா, அண்ணா, தம்பிமார்கள், அண்ணி,**
**பெறாமகன் மற்றும் உற்றார், உறவினர், நண்பர்கள்.**

(26878) (19-21-13-18)

## கண்ணீர் அஞ்சலி

எமது சங்கப் பணியாளர்களான,
திரு.கி. புஸ்பராஜா அவர்களின் அன்புத் தந்தையும்
திருமதி பு. தயாளினி அவர்களின் அன்பு மாமனாருமாகிய
**மாணிக்கம் கிருஷ்ணன் (கிட்டுணு)**
அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு
எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

**பணியாளர்கள்,**
யா.மா.அ.கூ.சங்கம்.
பிராந்திய கோழிப்பண்ணை, அச்சுவேலி.

(26901) (26-13-18-21)

### சித்த மருத்துவ மாணவர்களுக்கு!

சித்த மருத்துவத்துறை மாணவர்கள் அனைவரையும் இன்று வியாழக்கிழமை முற்பகல் 10 மணிக்கு கைதடி சித்தமருத்துவத் துறைக்கு சமுகம் தருமாறு மாணவா ஒன்றியம் கேட்டுள்ளது. (ம-ரி)

### ஸ்ரீ தியாகராஜர் ஆராதனை விழா

யாழ்ப்பாணம்,ஜன.8

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன தமிழ்ச்சேவையினரின் ஏற்பாட்டில் ஸ்ரீதியாகராஜர் ஆராதனைவிழா வருகின்ற திங்கட்கிழமை மாலை 6.30 மணிக்கும் தமிழிசை விழா வருகின்ற செவ்வாய்க்கிழமை மாலை 4.30மணிக்கும் நல்லை ஆதீன மண்டபத்தில் இடம்பெறும்.

நிகழ்வுகளில் இசை ஆர்வலர்களைக் கலந்து சிறப்பிக்குமாறு இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன தமிழ்ச்சேவையினர் கேட்டுள்ளனர். (ம)

### மருந்தாளர் பயிற்சி ஆரம்பமாகி நடக்கிறது

யாழ்ப்பாணம்,ஜன.8

வடக்கு - கிழக்கு மாகாண சுகாதார அமைச்சினால் நடத்தப்படுகின்ற வெளிவாரி மருந்தாளர் பயிற்சிநெறி ஆரம்பமாகி நடைபெற்று வருவதாக சுகாதார சேவைகள் மாகாண பிரதிப் பணிப்பாளர் க.தா.சிவபாதம் தெரிவித்துள்ளார்.

நேர்முகப் பரீட்சைக்குத் தோற்றியோரின் புள்ளிகளின் அடிப்படையில தெரிவு செய்யப்பட்டோரில் கடந்த 3ஆம் திகதி வரை பயிற்சி நெறிக்குச் சமுகமளிக்காதவர்களின் இடங்களுக்கு ஏனையோர் சேர்த்துக் கொள்ளப்படவுள்ளனர்.

எனவே நேர்முகப் பரீடசைக்குத் தோற்றியோரில் பயிற்சிநெறியில் கலந்துகொள்ள ஆர்வமுடையவர்களை நாளை மறுதினம் சனிக்கிழமை காலை 9மணிக்கு யாழ்.மத்திய கல்லூரிக்கு வருகை தருமாறு பிரதிப் பணிப்பாளர் அறிவித்துள்ளார்.

குடாநாட்டில் வெளிவாரி மருந்தாளர்களுக்கு ஏற்பட்டுள்ள பற்றாக் குறையை அடுத்து இந்தப் பயிற்சி நெறி நடத்தப்பட்டு வருகின்றது. (ம-10)

## முதலாவது பிறந்தநாள் வாழ்த்து



கல்வயல் சிவகுமாரன் — கைதடி நாவற்குழி கேதாரகௌரி
தம்பதியினரின்
செல்வப் புதல்வி

### அபிஷா

தனது முதலாவது பிறந்த நாளை இன்று (08.01.2004) வியாழக்கிழமை லண்டனில் உள்ள தனது இல்லத்தில் அன்பு அப்பா, அம்மாவுடனும், லண்டன் மாமா வரதனுடனும் வெகுவிமரிசையாகக் கொண்டாடுகின்றார். அபிஷாவை அம்மப்பா, அம்மம்மா, அப்பம்மா, அவுஸ்திரேலியாவில் வசிக்கும் கரன் மாமா, கண்டியில் உள்ள பிரபு மாமா, சுவிஸ் சித்தப்பா, சித்தி, அக்கா தேன் நிலா, ஜேர்மனி மாமா, அத்தை, மச்சாள் அபிராமி, கல்வயல் மாமாமார், அத்தைமார், மச்சான் முகுந்தன், கோகுலன், மச்சாள் சசிந்தா, உற்றார், உறவினர் அனைவரும் பல்கலையும் பெற்று பல்லாண்டு காலம் வாழவேண்டுமென எல்லாம் வல்ல வன்னக்குளம் வீரகத்திப் பிள்ளையாரை வேண்டுகின்றோம்.

அம்மப்பா
செல்லையா கந்தையா J.P.
பதிவாளர்.

கைதடி வடக்கு,
கைதடி.

(26884) (26-21-13-)

### புதிய வாழ்வு
### யோகாசன ஆராய்ச்சி நிலையம்

(மானிப்பாய் வீதி, தாவடி.) T.P.3294, 6874

மாதர்களுக்கான
விசேட "யோகா" பயிற்சி வகுப்புக்கான
**சேர்க்கை நடைபெறுகின்றது.**
உங்கள் பெயர்களை 11.01.2004ஆம் திகதிக்கு முன்
பதிவு செய்து கொள்ளவும்.


ஆசிரியர்
**ம.நேசன்(கண்ணன்)**
(யோக மருத்துவர் இந்தியா)

பயிற்சி வகுப்புகள் நடைபெறும் இடம்:
**க.செல்வநாயகம் (வேந்தன்)**
மூத்ததம்பி ஒழுங்கை,
மானிப்பாய்.
T.P.: 222 6111

(35-21-13-18) (26903)

ஓம் விராட் விஸ்வப்பிரம்மனே நமஹ!

## 21ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



மலர்வு
19-04-1928

உதிர்வு
19-12-2003

திருநெல்வேலியைச் சேர்ந்த
விஸ்வப் பிரம்மகுல திலகர்
எமது இல்லக விளக்கு
அமரர்

### சதாசிவம் சின்னையா

**ஆசாரியார்**
(அதிபர், சின்னையா இரும்புத் தொழிலகம்)

மனிதர் குல மாணிக்கமாய் மாண்புடன் மாநிலத்தில்
புனிதராய் வாழ்ந்து அம்பிகை கழல் சேர்ந்தீர்
இனிய உமது பேச்சும் புன் சிரிப்புத் தவழும் முகமும்
கனிவான பார்வையும் காண்பதுதான் எப்போது?
உங்கள் ஆத்மா சாந்தி பெற ஸ்ரீ பத்திரகாளித் தாயின்
திருவடித் தாமரைகளைப் பணிந்து போற்றுகின்றோம்

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

இன்று (08-01-2004) வியாழக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறுகின்ற வீட்டுக்கிருத்திய நிகழ்விலும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் கலந்துகொள்வதோடு நண்பகல் நிகழ்கின்ற மதியபோசனத்திலும் பங்கேற்குமாறு உறவினர்கள், நண்பர்கள் அனைவரையும் அன்போடு அழைக்கின்றோம்.

– குடும்பத்தினர்.

அம்மன் வீதி,
திருநெல்வேலி கிழக்கு, திருநெல்வேலி.

(சி-32634) (26-21-13-18)

# வரலாற்றுத் திரிபை தடுத்திட அரும்பாடுபட்டவர் கலைஞானி

## அவரது அஞ்சலிக் கூட்டத்தில் சட்டத்தரணி உரை

தமிழினத்தின் வரலாற்றைத்திரித்துக் கூறுவதிலும் சிதைப்பதிலும் வரலாற்றாசிரியர்கள் ஈடுபட்டுக் கொண்டிருந்தபோது அதனைத் தடுத்து நிறுத்துவதற்கு அரும்பாடுபட்டவர் மாமனிதர் கலைஞானி ஆவார்.

- இவ்வாறு தெரிவித்தார் சட்டத்தரணி பொன்.பூலோகசிங்கம்.

மாமனிதர் கலைஞானி அசெல்வரத்தினத்தின் 2 ஆவது ஆண்டு நினைவஞ்சலிக் கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:-

கலைஞானியின் சேவைகளை ஆராய்வதற்கு அவரின் பின்புலத்தைப் பார்க்கவேண்டும். அவர் தோன்றிய குரும்பசிட்டி மண் கலைச் செழிப்பு மிக்கது. ஈழத்துப் பத்திரிகை உலகின் ஆரம்பப் பத்திரிகையான ஈழகேசரியின் மூலம் பல எழுத்தாளர்கள் உருவாகினார்கள். அதன்மூலம் ஆக்க இலக்கியத்துறையில் கனக.செந்திநாதன் தோற்றம் பெற்றார். 1901 இல் பொன்.பரமானந்தர் கல்விக்கூடத்தைத் தோற்றுவித்ததன் மூலம் அங்கு கல்வி ஒளியை ஏற்றிவைத்தார். இப்படியாக ஏ.ரி.பொன்னுத்துரை நாடகத்துறையிலும், கலாகேசரி தம்பித்துரை சிற்பம், ஓவியத்துறையிலும் கந்தவனம் கவிதைத்துறையிலும் முன்னிலைக்கு வந்தார்கள்.

இவர்களிலிருந்து சற்று வித்தியாசமானவராக கலைஞானி கலை உலகில் கால் பதித்தார். அவரிடம் புகைப்படம், தொல்பொருள் பற்றிய புலமைப்பதிவு இருந்தது. புகைப்படக் கலையகத்தினூடு அவர் ஆவணமாக்கும் முயற்சிகளில் ஈடுபடலானார். ஒரு தேசிய இனத்திற்கு உரியதான கலாசாரப் பெறுமானங்களோடு கூடிய வரலாற்றுச் சுவடிகளைச் சேர்த்து வைத்தார். பாண்டியன்குளம், தட்டான்குளம், குறுந்தூர்மலை போன்ற பல இடங்களில் தனி மனிதனாக நின்று மண்ணைத் தோண்டி அகழ்வாராய்ச்சியில் ஈடுபட்டார்.

எமது வரலாறு சரியாக எழுதப்பட வேண்டுமென்பதில் உறுதியாக இருந்தவர் கலைஞானி. தமிழ்மக்களின் வரலாற்றைத் திரிப்பதிலும், சிதைப்பதிலும் தமிழ் வரலாற்றாசிரியர்களே ஈடுபட்டுக்கொண்டிருப்பது குறித்து உள்ளங்குமுறியவர் அவர். அதற்காக அவர் வெளியிட்ட துண்டுப்பிரசுரங்களும், பத்திரிகை அறிக்கைகளும் ஏராளம். அவரின் இந்த உறுதியான உயரிய பணிக்காகவே "மாமனிதர்" விருது அவரை அலங்கரித்தது.

ஆனைக்கோட்டையில் அகழ்வாராய்ச்சி நடைபெற்றபோது 7 அடி நீளமான மனித எலும்புக்கூடு மீட்கப்பட்டது. பெருங்கற்காலப் பண்பாட்டுக்கு உரியதாக பொ.ரகுபதி அதை இனங்கண்டார். ஆனால், அது இப்பொழுது நம்மிடம் இல்லை. அழிக்கப்பட்டுவிட்டது. இவ்வாறு எமது பொக்கிஷங்கள் பல அழிந்தொழிந்து போயின. இவ்வாறான நிலையில் கலைஞானியின் பங்களிப்பு என்றும் நினைவுகூரத்தக்கது. தமிழ்மக்களின் போராட்ட வரலாற்றோடு அவர் இணைந்து செயற்பட்டு உயிர் நீத்துள்ளார் என்றார்.

திரைப்பட இயக்குநர் க.தேவதாசன் தனது உரையில் -

சமூகத்தின் வாழ்வுக்காக நிரந்தர விடுதலைக்காக கலைஞானி சேவையாற்றி வந்தார். ஆனால், எமது சமூகம் அவரை மதிக்கத் தவறிவிட்டது. இதனால், தனது இறுதிக்காலத்தில் அவர் இந்தச் சமூகத்தை வெறுத்தார். உயிர்பிரிவதற்கு முன்னர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த போது தான் உயிர்வாழ்வதை விட இறந்துபோவது மேல் என்று நினைத்தார். அதை அவரின் இறுதி வார்த்தைகள் எடுத்துக்கூறின. அந்தக் காட்சி எனக்கு மஹாகவி பாரதியைத்தான் நினைவுபடுத்தியது. நல்ல கலைஞனான அவர் தான் செய்த பணியை இறுதிக் கட்டத்திலும் கைவிடவில்லை. ஒரு கலைஞன் தான் செய்யும் சேவைக்கு அங்கீகாரத்தை எதிர்பார்ப்பான். அதைத்தான் கலைஞானியும் எதிர்பார்த்தார் - என்றார். (ஐ-10)

## வலிகாமம் பிரிவு தொலைக்கல்வி அலுவலர்களுக்கு .

யாழ்ப்பாணம்,ஜன.8

வலிகாமம பிரிவு தொலைக்கல்வி நிலையத்தில் கல்வி பயிலும் உத்தியோகத்தர்களுக்கான வகுப்பு எதிர்வரும் 13ஆம் திகதி காலை 10 மணிக்கு யாழ்.மேலதிக அரச அதிபரின் அலுவலகத்தில் நடைபெறவுள்ளது.

இவ்வகுப்பில் வலிகாமம் தொலைக்கல்வி நிலையத்தில் கல்வி பயிலும் அனைத்துப் பதவி நிலை உத்தியோகத்தர்களையும் தவறாது கலந்துகொள்ளுமாறு வலிகாமம் தொலைக்கல்வி நிலையப் பொறுப்பாளர் திருமதி பதிலகநாயகம்போல் அறிவித்துள்ளார்.

(ம-8)




மானிப்பாய் லியோ கழகம் நெடுந்தீவு வைத்தியசாலைக்கு கடந்த நவம்பர் மாதத்தில் 12 ஆயிரம் ரூபா பெறுமதியான மருந்துப் பொருள்களை அன்பளிப்புச் செய்தது. கழகம் தொடர்ச்சியாக மேற்கொண்டு வரும் பொதுமக்களுக்கான உதவிச் செயற்றிட்டத்தின் ஒரு பகுதியாகவே இந்த மருந்துப் பொருள்கள் வழங்கப்பட்டன.

# நஷ்டஈடு கொடுத்து ஓய்வு வழங்கும் திட்டத்துக்கு தொழிற்சங்கம் எதிர்ப்பு

கொழும்பு,ஜன.8

குறித்த ஒரு தொகையினை நஷ்டஈடாக வழங்கிச் சேவையை முடிவடையச் செய்யும் வகையில் தொழிற்சட்டத்தில் திருத்தம் கொண்டுவர அரசு மேற்கொண்டு வரும் முயற்சிக்கு எதிர்ப்புத் தெரிவித்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட தொழிற்சங்கங்களின் சம்மேளனம் தீர்மானித்துள்ளதாக அதன் தலைவர் லீனஸ் ஜயதிலக தெரிவித்துள்ளார்.

இது விடயமாக அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

பொருளாதார அபிவிருத்தி, தொழில் வளத்தை எளிதில் இயங்கச் செய்தல் மற்றும் வேலை வாய்ப்பினை உருவாக்குதல் ஆகிய நோக்கங்களுக்காகவே மேற்படி தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதென அரசு அறிவித்துள்ளது. இது ஓர் உறுதியான விதிமுறை என்றும் அது தெரிவித்துள்ளது.

எனினும், இந்த திருத்தச் சட்டத்தின்படி மாதாந்தம் மூவாயிரம் ரூபா முதல் மூவாயிரத்து ஐநூறு ரூபா வரையான குறைந்தளவு சம்பள அடிப்படையிலேயே நஷ்டஈட்டுக் கொடுப்பனவு வழங்கப்படவுள்ளது. எவ்வாறாயினும், 30 மாதச் சம்பளத் தொகையே கூடிய மொத்தக்கொடுப்பனவாகும். எனவே, இந்தப் புதிய விதிமுறையின்படி வேலையை இழப்பவர்கள் பின்னர் நிர்க்கதியாகின்றனர்.

இது ஒரு அடிப்படை விளக்கமற்ற திருத்தம். அத்துடன், வெளிநாட்டு நிறுவனங்களினால் இங்கு நடத்தப்படும் தொழிற்சாலைகளில் உள்ள ஊழியர்களையும் நஷ்டஈட்டுக் கொடுப்பனவுடன் சேவையிலிருந்து நீக்குவதற்கு அந்த நிறுவனங்களைத் தூண்டுவதாகவும் இது அமைகிறது.

மேலும், பொருளாதாரம், வேறு அபிவிருத்திகளுக்கு முன்னைய சட்டம் ஏதாவதொரு விதத்தில் எதிர்மறையான தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளதென்பதற்கு எதுவித ஆதாரமும் கிடையாது.

நஷ்டஈட்டுக் கொடுப்பனவு வழங்கப்படுவதில் நெகிழ்வுத் தன்மை இருக்க வேண்டியது அவசியம்.

அத்துடன், தீர்மானம் ஒட்டு மொத்தமானதாக அல்லாமல் பிரிவுகளைத் தனித்தனியே ஆராய்ந்து தீர்மானிக்க வேண்டுமென உயர் நீதிமன்ற நீதிவான் சர்வானந்தா கூறியதும் கருத்தில் கொள்ளப்படவில்லை - என்று அவர் மேலும் தெரிவித்தார். (எ-8)

## குடாநாட்டின் புராதன இடங்களை ஆவணப்படுத்தும் முயற்சியில் செயலகம்

யாழ்ப்பாணம்,ஜன.8

யாழ்குடாநாட்டில் உள்ள புராதன இடங்கள் தொடர்பான தகவல்கள், வரலாற்று ஆதாரங்கள் என்பனவற்றை ஆவணப்படுத்துவதற்கான ஆரம்பக் கட்ட நடவடிக்கைகளை யாழ்.செயலகம் மேற்கொள்ளவுள்ளது.

இது பற்றி ஆராய்வதற்கென யாழ். மாவட்டக் கலாசார உத்தியோகத்தர்களுக்கான கூட்டம் ஒன்று நாளை வெள்ளிக்கிழமை காலை 10மணிக்கு யாழ்செயலகத்தில் நடைபெறவுள்ளது.

குடாநாட்டிலுள்ள அனைத்துப் பிரதேச செயலகங்களையும் சேர்ந்த கலாசார உத்தியோகத்தர்களையும் இதில் கலந்துகொள்ளுமாறு யாழ். மேலதிக அரச அதிபர் திருமதி பதிலகநாயகம் போல் கேட்டுள்ளார்.

அத்துடன், கலாசார உத்தியோகத்தர்கள் தமது பிரதேசங்கள் தொடர்பான தொல்லியல் தகவல்களையும் இக்கூட்டத்திற்குக் கொண்டுவருமாறு அவர் கேட்டுள்ளார்.

(ம-8)

## பொலீஸாரின் நிதி உதவியுடன் இந்துக் கோவில் புனரமைப்பு

வவுனியா - மன்னார் வீதியில் அமைந்துள்ள முத்துமாரியம்மன் கோவில் பொலீஸாரின் நிதியுதவியுடன் புனர்நிர்மாணம் செய்யப்பட்டு கடந்த நான்காம் திகதி திறந்து வைக்கப்பட்டது.

யுத்த காலத்தில் சேதமுற்றுக் கைவிடப்பட்ட நிலையில் இருந்த இந்தக் கோவில் வவுனியாவில் கடமையாற்றும் பொலீஸார் உவந்தளித்த பணத்தில் புனர்நிர்மாணம் செய்யப்பட்டது.

வன்னிமாவட்டப் பிரதிப் பொலீஸ் மா அதிபர் மஹிந்த பெத்தவெல மற்றும் வவுனியா சிரேஷ்ட பொலீஸ் அதிகாரி ரீ.ஜே.மிஸ்கின் ஆகியோர் புனரமைக்கப்பட்ட கோவிலைத் திறந்து வைத்தனர்.

தைப்பொங்கல் தினத்தன்று விசேட பூசை வழிபாடுகளை நடத்துவதற்கான ஏற்பாடுகளையும் பொலீஸார் மேற்கொண்டுள்ளனர்.

## முதலில் பொதுத் தேர்தலா? மாகாண சபைத் தேர்தலா? விரைவில் ஜனாதிபதி முடிவுசெய்வார்

மாகாணசபைகள் அனைத்தையும கலைத்துவிட்டு ஒரேநாளில் அவற்றிற்கான தேர்தலை நடத்துவதா? அல்லது நாடாளுமன்றத்தைக் கலைத்துப் பொதுத்தேர்தலை நடத்துவதா என்பது குறித்து ஜனாதிபதி சந்திரிகா மிக விரைவில் இறுதிமுடிவு எடுக்கவுள்ளார் என பொ.ஐ.முன்னணியின செயலாளர் டி.எம்.ஜயரத்ன தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி இதுகுறித்து இறுதி முடிவை மேற்கொள்வதற்கு முன்னர் பொ.ஐ.முன்னணிக்கும் சி.ல.சு.கட்சிக்கும் தெரிவிப்பார் என ஜயரத்ன தெரிவித்தார்.

வடமேல் மாகாண சபையையே முதலில் கலைப்பது என தீர்மானிக்கப்பட்டது. அந்த மாகாணசபையின் ஆயுள் காலம் எதிர்வரும் மார்ச் 29ஆம் திகதியுடன் முடிவடைகிறது. (ம)



வட மாகாண அதிபர் சங்கத்தின் 'கலைக்கோலங்கள்' நிகழ்வில் கலந்துகொண்ட யாழ். வலயக் கல்விப் பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன் மங்கள விளக்கேற்றுவதைப் படத்தில் காணலாம். நிகழ்வில் கலந்துகொண்ட ஏனைய விருந்தினர்களும் படத்தில் உள்ளனர்.
(படம்: வலி. கிழக்கு செய்தியாளர்)

# துரித அபிவிருத்தித்திட்ட ஆலோசனை; அரச சார்பற்ற இணையம் புறக்கணிப்பு

## அதன் வருடாந்தக் கூட்டத்தில் கண்டனம்

யாழ்ப்பாணம்.ஜன.8

யாழ். குடாநாட்டில் இந்த ஆண்டு மேற்கொள்ளப்படவுள்ள துரித அபிவிருத்தி தொடர்பாக தம்மிடமிருந்து ஆலோசனைகள் எதுவும் பெறப்படாதது குறித்து யாழ். மாவட்ட அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையம் கண்டனம் வெளியிட்டுள்ளது.

அரச சார்பற்ற நிறுவனங்களில் இணையம் 13ஆவது வருடாந்தப் பொதுக் கூட்டம் இணையக் காரியாலயத்தில் கடந்த திங்களன்று டாக்டர் வைதியாக ராஜா தலைமையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் கலந்துகொண்ட இணையப் பிரதிநிதிகளே மேற்படி கண்டனத்தை வெளியிட்டனர்.

குடாநாட்டின் துரித அபிவிருத்தித் திட்டம் ஒன்றைத் தயாரிப்பதற்கான முக்கிய கலந்துரையாடல் ஒன்று கடந்த டிசெம்பர் மாதம் 29 ஆம் திகதி யாழ். அரச அதிபர் தலைமையில் யாழ். செயலகத்தில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் பாதுகாப்பு அமைச்சின் முன்னாள் செயலாளர் ஒஸ்டின் பெர்னாண்டோ, அமைச்சரவையின் செயலாளர் வேரகொட ஆகியோரும் பங்குபற்றியிருந்தனர்.

இக்கூட்டத்திற்கு சகல திணைக்களங்களின் தலைவர்களும் நிறுவனங்களின் பிரதிநிதிகளும் அழைக்கப்பட்டிருந்தனர். எனினும், இக்கூட்டத்திற்குத் தாம் அழைக்கப்படாதது கடும் கண்டனத்திற்குரியதென இணையப் பிரதிநிதிகள் கருத்துவெளியிட்டனர்.

யாழ். குடாநாட்டு மக்களுக்கு தற்போது அவசியம் தேவைப்படும் உதவிகள், மனிதாபிமானப் பணிகள் குறித்து இணையம் நன்கு அறிந்துள்ளது. அத்துடன், கடந்த பல வருடங்களாகக் குடாநாட்டு மக்களின் அபிவிருத்தி, புனர்வாழ்வு நடவடிக்கையில் அது காத்திரமான பங்களிப்பை வழங்கியுள்ளது.

இந்நிலையில் குடாநாட்டில் துரித அபிவிருத்தி நடவடிக்கைக்காக கூட்டப்பட்ட கூட்டத்திற்கு இணையப் பிரதிநிதிகள் அழைக்கப்படாதது ஏன்? என இணையப் பிரதிநிதிகள் கேள்வியெழுப்பினார்கள். உரியவர்கள் இது விடயத்தில் தீவிர அக்கறை காட்டி அரசசார்பற்ற நிறுவனங்களின் இணையத்தின் பங்களிப்பையும் பெற்றுக் கொள்ள வேண்டும் எனவும் -அவர்கள் சுட்டிக்காட்டினர்.

(ம-8)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



மண்டைதீவைச் சேர்ந்த

### இராசரத்தினம் பரதன்

05-01-2004 அன்று யாழ்.மாவட்ட மேலதிக நீதிவான் திருமதி S.நந்தசேகரன் முன்னிலையில் அகில இலங்கை சமாதான நீதிவானாக சத்தியப்பிரமாணம் செய்து கொண்டார். இவரது சேவைகள் மேன்மேலும் வளர மனமுவந்து வாழ்த்துகின்றோம்.

ஸ்கைவே எலக்ரோனிக்
உரிமையாளர்,
குடும்பத்தினர்.

பருத்தித்துறை வீதி,
கல்வியங்காடு. (26887)(21-13-18)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்

### பொன்னம்பலம் தியாகேஸ்வரி

மலர்வு 24-04-1923 — உதிர்வு 20-12-2002

திதி: 08-01-2004

ஆண்டொன்று ஆனாலும் ஆறவில்லை எம்மனது
ஈண்டு உம்மை எண்ணியே நிதம் வாடுகிறோம்
எப்போதும் உம்நினைவால் ஏங்கியே
தவிக்கின்றோம்
இப்போது நினைத்தாலும் தாங்காது எம் இதயம். (26821)

தற்காலிக முகவரி:
கைதடி வடக்கு,
கைதடி. (26-13-18)

நிரந்தர முகவரி:
கைதடி நாவற்குழி,
கைதடி.

- குடும்பத்தினர்.

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 12 - 10 - 1927 வேலணை



உதிர்வு 20 - 12 - 2002 கொழும்பு

திருமதி

### அம்பிகாநிதி சோமசுந்தரம்

வருடம் ஒன்று கடந்ததே
மாறுமா உங்கள் முகம்
நாம் புவியில் வாழும் வரை
எங்கள் உள்ளங்களில் உங்கள் மூச்சு
நிலைத்திருக்கும் - என்றும்.

இன்று (08-01-2004) வியாழக்கிழமை பகல் வேலணை முடிப்பிள்ளையார் கோயிலில் நடைபெறும் ஆத்மசாந்திக்கான விசேட பூசையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மகேஸ்வர பூசையிலும் கலந்துகொள்ளுமாறு அன்பர்கள், அடியார்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

வேலணை மேற்கு,
வேலணை. (26861) (26-13-18-21)

மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும் (08-01-2004)

மலர்வு 23 - 08 - 1947



உதிர்வு 09 - 12 - 2003

### அமரர் சற்குணம் நாகராசா

(Retired Manager, Marketing Department)

எங்கள் வாழ்வின் ஒளிவிளக்கே!
அன்பின் அகல் விளக்கே!
எம் வாழ்விற்கு வித்திட்ட
அன்புத் தெய்வமே!

பாசமுள்ள கணவராகவும் தந்தையாகவும்
எம்முடன் இருந்து விட்டு மாயமாய் மறைந்ததேன் - அப்பா?
ஆயிரம் உறவுகள் இருந்தாலும் - அப்பா
என்றழைக்க உறவு ஒன்று இல்லை
ஊர்போற்றும் உத்தமராய் வாழ்ந்தீர்கள்!
என்றும் எம் மனதில் மறையாத எங்கள் தெய்வமே!
எம்மைக் கண்ணீரில் ஆழ்த்திவிட்டு
நீங்கள் எங்கு சென்றீரோ? (21-13-18)

உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

அன்னாரின் இறுதிக்கிரியைகளில் (11-12-2003) நேரில் கலந்துகொண்டும், தந்தி, தொலைபேசி, கடிதங்கள் மூலம் அனுதாபச் செய்திகளை அனுப்பி வைத்தவர்களுக்கும் எமது நெஞ்சம் நெகிழ்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

தகவல்:
இந்திராணி சற்குணம் (மனைவி)
130A, Sea St, Negombo.
T.P.: 031 - 22 33503 (26413)

உங்களின் பிரிவால் தவிக்கும்:
தாய், மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளை,
சகோதரி குடும்பத்தினர்.

## செய்திக்கொத்து

### 2,737 வீடுகள் சேதம்

வடமராட்சி கிழக்கு, ஜன.8

கடந்தகால யுத்தத்தினால் வடமராட்சி கிழக்கில் 2 ஆயிரத்து 737 வீடுகள் சேதமடைந்துள்ளதாகக கணக்கிடப்பட்டுள்ளது.

இந்த வீடுகளில் ஆயிரத்து 728 வீடுகள் முழுமையாகவும், ஆயிரத்து 9 வீடுகள் பகுதி பகுதியாகவும் சேதமடைந்துள்ளன எனத் தெரிவிக்கப் பட்டது. (எ-10-182)

### சங்கப் பணியாளருக்கு இடமாற்றம்

நவாலி, ஜன.8

மானிப்பாய் ப.நோ.கூ.சங்கத்தின் கிளை முகாமையாளர்கள் மற்றும் விற்பனையாளர்கள் பலருக்குப் புதிய ஆண்டில் வெவ்வேறு கிளைகளுக்குப் பணி இடமாற்றம் வழங்கப்பட்டுள்ளதாகச் சங்க வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (எ-10-100)

### ஒலிபெருக்கி அன்பளிப்பு

பருத்தித்துறை,ஜன.8

புலோலி மேற்கு, ஒல்லையம்பதி வீரபத்திரர் ஆலயத்துக்கு அப்பகுதி மக்களால் ஒலிபெருக்கி ஒன்று அன்பளிப்பாக வழங்கப்பட்டுள்ளது. (எ-10-118)

### முன்பள்ளி மீண்டும் இயங்குகிறது

குருநகர்,ஜன.8

குருநகர் சனசமூக நிலையத்தினால் நடத்தப்பட்டு வந்த முன்பள்ளி கடந்த திங்கள்முதல் மீளவும் செயற்படத் தொடங்கியுள்ளது. (எ-10-51)

### விளையாட்டு மைதானம் புனரமைப்பு

சாவகச்சேரி,ஜன.8

மட்டுவில் சந்திரபுர ஸ்கந்தவரோதயா மகாவித்தியாலய விளையாட்டு மைதானம் தற்பொழுது புனரமைப்புச செய்யப்பட்டு வருகிறது.

2000ஆம் ஆண்டு மே மாதம் தென்மராட்சிப் பிரதேசத்தில் ஏற்பட்ட அசாதாரண சூழ்நிலையினால் இந்த மைதானம் பலத்த சேதமடைந்தமை குறிப்பிடத்தக்கது. (எ-10-31)

### பயிற்சி வழங்கல்

வடமராட்சி,ஜன.8

கிராம அபிவிருத்தித் திணைக்களமும், மருதங்கேணி உதவி அரசாங்க அதிபர் பணிமனையும் இணைந்து மருதங்கேணிப் பிரதேசத்தில் யுவதிகளுக்கான தையல், மனையியல், சிகையலங்காரம் போன்றவற்றுக்கான பயிற்சிகளை வழங்கவுள்ளன.

இதற்கென ஆழியவளை, உடுத்துறை ஆகிய பகுதிகளைச் சேர்ந்த 30 யுவதிகள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். (எ-10-182)

### வீதிகள் புனரமைப்பு

குருநகர்,ஜன.8

குருநகர் பகுதியில் சேதமடைந்துள்ள பலவீதிகள் யாழ். மாநகரசபையினால் தற்பொழுது புனரமைக்கப்பட்டு வருகின்றன.

ஆயினும், வீதிகளுக்குக் குறுக்காகச்செல்லும் வடிகால்களின் மூடிகள் உடைந்து காணப்படுவதால், மக்கள் விபத்துக்குள்ளாக வேண்டியிருப்பதாக அப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர். (எ-10-51)

### இடமாற்றம்

யாழ்ப்பாணம்,ஜன.8

யாழ்.மாவட்ட பொலீஸ் அத்தியட்சகர் ஹெட்ட தர்மஸ்ரீ இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

கடந்த முதலாம் திகதியில் இருந்து இடமாற்றம் செய்யப்பட்ட பொலீஸ் அத்தியட்சகர் கொழும்பு பொலீஸ் தலைமைக்காரியாலயத்தில் கடமையாற்றி வருவதாகக் கூறப்பட்டது. (ம-10-7)

### கூட்டம்

பாடசாலை மாணவர்களுக்கு விநியோகிக்கப்படும் இலவச பாடநூல் முன்னேற்ற மீளாய்வு பற்றிய கூட்டமொன்று இன்று காலை 9.30மணிக்கு கல்வி அமைச்சின் கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது.

பாடசாலை அலுவல்கள் அமைச்சர் சுரனிமல் இராஜபக்ஷ தலைமையில் நடைபெற உள்ள இக்கூட்டத்துக்கு சகல கோட்டக்கல்வி அதிகாரிகளும் அழைக்கப்பட்டுள்ளனர்.

2004ஆம் ஆண்டுக்குரிய பாடசாலை இலவச பாடநூல் பற்றிய பிரச்சினைகள் தொடர்பாகவும், 2004ஆம் ஆண்டில் நடைமுறைப்படுத்தப்பட உள்ள ஆறாம்தர மாணவர்களுக்கான பல் பாடநூல்கள் தேர்வு தொடர்பாகவும் இக்கூட்டத்தில் ஆராயப்பட உள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.


**இதோ!**

சித்த ஆயுர்வேத முறைப்படி தயாரிக்கப்பட்ட இருமல் நிவாரணி! தீராத இருமல், சளி, இளைப்பு மற்றும் நுரையீரல், சுவாச நாளங்களில் உண்டாகும் சளி நோய்கள், தொண்டையில் ஏற்படும் நமைச்சல் ஆகிய நோய்களை விரைவில் குணமாக்கும் அதியற்புத தேசிய ஔஷதம்

**சித்தாரா பனங் கற்கண்டு இருமல் பாணி**

யாழ்.குடாநாட்டின் அனைத்து பார்மஸிகளிலும், கடைகளிலும் பெற்றுக்கொள்ளலாம்.

Manufactured By:
SITHARA PRODUCTS
Puttalam Road, Chilaw.
(Reg.No:-6382) AR/PR/No:228

யாழ்.மாவட்ட ஏகவிநியோகஸ்தர்:-
சிவா நறுமணப் பூங்கா
இல.288, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
தொ.பே.இல.: 021 - 222 - 2567

(குறிப்பு:- சத்திரச்சந்திக்கு அண்மையில்) (சி-32383)


## இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி

பிறப்பு 1914-07-10



இறப்பு 2002-01-08

### அமரர் யோண் றொபேட் அல்பேட்

(ஓய்வுபெற்ற அதிபர்)

ஆண்டுகள் இரண்டு ஆயினும்
ஆறுதல் இல்லாத மனைவி, மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்..........
உங்கள் நினைவுடன்
உம் வழி செல்வோம்!
உங்கள் பெயர் நிலைக்க வாழ்வோம்!!

என்றும் உங்கள் நினைவாக
மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்,

உடுவில்.

தகவல்:
அ.ஜெயராஜகுலேந்திரன் (அதிபர்).

(சி-32624) (26-21-18-13)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 14 - 02 - 1940



உதிர்வு 20 - 12 - 2002

### அமரர் முத்தையா சுந்தரலிங்கம்

திதி: 08-01-2004

அன்போடு அரவணைத்து ஆதரித்திட்ட தெய்வமே!
ஆண்டு ஒன்று ஆனாலும் ஆறவில்லை எம்மனது
என்றும் எம் நினைவு உங்களுடன் வாழும்.

ஊரெழு கிழக்கு,
ஊரெழு. (27890) (19-21-13-18)

அன்பு மனைவி,
உற்றார், உறவினர்.

## நெஞ்சை விட்டகலாத நான்காம் ஆண்டு நினைவலைகள்

மலர்வு 24 - 08 - 1949



உதிர்வு 23 - 12 - 1999

### அமரர் வைரமுத்து இரத்தினசிங்கம் (வாணம்)

(கா.சி. கூ. ஊழியர்)

திதி பிரதமை 08-01-2004

அன்புத் துணையாய் அருகிருந்தால் போதுமென்றிருந்தேன்
அந்தரத்தில் தவிக்க விட்டுச்சென்று
ஆண்டும் நான்கு ஆகிவிட்டதய்யா
பாசத்துணையாய் பக்கத்தில் இருந்தால் போதுமென்றிருந்தேன்
பாவி என் வாழ்வும் நீர்க்குமிழி போல் ஆகிவிட்டதய்யா
காலன் இட்ட கணக்கில் காற்றோடு உங்கள் மூச்சு கலந்தாலும்
என்மூச்சு உள்ளவரை உங்கள் நினைவு நெஞ்சை விட்டகலாது.

இன்று உங்கள் ஆத்மா சாந்தி பெற இறைவனைப் பிரார்த்திக்கின்றோம். (26873) (26-21-18-13)

நி.முகவரி:
கொல்லங்கலட்டி,
தெல்லிப்பழை.

த.முகவரி:
கட்டுடை,
மானிப்பாய்.

என்றும் உங்கள் நினைவில் வாழும்:
மனைவி, சகோதரர்கள்.

# எண்கணித ஜோதிடம் - 2004

## எண் - 6

6,15,24 திகதிகளில் பிறந்த நீங்கள் பேரன்பு கொண்டவர்கள். உண்மையை ரொம்பவும் நேசிப்பீர்கள். சோதனையின்றி சாதனையில்லை. முதியோரை கண்ணியப் படுத்துபவன் தனது முதுமையில் கண்ணியம் பெறுவான் என்ற தத்துவத்தை உணர்ந்து நடப்பதால் பலர் உங்களை நேசிப்பர். ஞான மார்க்கத்தில் ஈடுபட்டுள்ளவர்களுக்கு நல்ல குரு கிடைப்பார்.

அடிக்கடி 'டென்சன்' காணப்படும். எதிலும் கடும் முயற்சிக்குப்பின் வெற்றி பெறுவீர்கள். ஆடை, ஆபரணப் பிரியரான உங்களுக்கு எல்லாம் வந்து சேரும். அவ்வப்போது திடீர் செலவு ஏற்படும். கொடுக்கல், வாங்கல் இழுபறியாக இருந்தாலும் முடிவு சிறப்பாக இருக்கும். பக்தி, ஞானத்தில் மூழ்குவீர்கள். பணம் பல வழிகளில் வந்து உங்கள் பொக்கெட்டை நிரப்பும். ஆனால் நியாயமான செல வுகள் பிடுங்கிச்செல்லும்.

திடீரென உடல் நிலை சிறிது பாதிக்கும். கால்வலி, தொற்று, மூத்திரக்கல், வயிற்றுக்கோளாறு தோன்றி மறையும். சாப்பாட்டுப்பிரியரான நீங்கள் காரம், உப்பு, சர்க்கரை கொஞ்சம் குறைத்துக் கொள்வது நல்லது. நல்ல பல திட்டங்களை போட்டு வெற்றி பெறுவீர்கள். பெரிய மகான்களின் சந்திப்பும், ஆசியும் கிடைக்கும். புதிய முயற்சி வெற்றியளிக்கும். தியானம் மனதிற்குப் புத்துணர்சியூட்டும்.

பொது வாழ்க்கையில் எதிர்ப்புக்கள் இருந்தாலும் முடிவு வெற்றிதான். அதிக உழைப்பு இருந்தால் சிறப்பான பல நன்மைகள் கைகூடும். குடும்பத்தில் சுப காரியங்கள் நடக்கும். முறையான செலவுகள் வரும். புதியசொத்துக்கள் வாங்க வாய்ப்புண்டு. அடிக்கடி தேவையற்ற குழப்பம், சந்தேகம் உங்கள் மனதை வாட்டும். தொழில் ஏற இறங்க இருந்த போதிலும் கடும் உழைப்பால் நிலை நிறுத்தப்படும்.

'பிறர் துன்பத்தைத் தெரிந்துகொள், ஆனால் உன் துன்பத்தைக் கூறிவிடாதே' என்ற தத்துவத்தைப் புரிந்து மற்றவர்களிடம் பழகுங்கள். தான்செல்லும் பாதை சரியா தப்பா என்பதைப் பார்த்துச் செல்லுங்கள். உங்களுக்குப் பத்துப்பேர் உதவக்காத்திருப்பார்கள். அவ்வப்போது வெளியூர், வெளிநாட்டுப் பயணம் ஏற்படும்.

### நோய்

தொற்றுக்கள், வயிற்றுக்கோளாறு, இடுப்புவலி, தோல் வியாதி வந்து நீங்கும். பொதுவாக தண்ணீர் அதிகம் குடிக்கவேண்டும். தியானம், உடற்பயிற்சி அவசியமாகும்.

### மாணவர்களுக்கு

இந்த ஆண்டு கல்வியில் நல்ல உயர்வு பெறுவீர்கள். பாராட்டும், புகழும் வரும், மேற்படிப்புக்கு நல்ல வாய்ப்பு உண்டு. முன்கூட்டியே உழைக்கப்பாருங்கள்.

உங்கள் அதிர்ஷ்டம் பெயரிலும், கையொப்பத்திலும் தான் இருக்கிறது. இதனால் தடைகள் இருந்தால் அதைப் போக்க கையெழுத்தை அதிர்ஷ்டகரமாக அமைக்க வேண்டும்.

### மாதப்பலன்கள்

*ஜனவரி:-* திடீர் பணவரவு, உறவினர்கள் வருகை பலருடைய சந்திப்பு, உல்லாசப்பயணம் பெரியவர்களின் பராட்டும் ஏற்படும் காதல் கசக்கும், வேண்டாத பயம் வந்து சேரும், மனதை வாட்டும், மகான்களின் சந்திப்பு ஏற்படும். எதையும் உடனே முடிப்பீர்கள் போட்டிகள் இருக்கும் மற்றவர்கள் முடியாது என்பதைக் கூட திடீரென முடித்து விடுவீர்கள். அடிக்கடி சளிபிடிக்கும் பெரிய மனிதர்களின் சந்திப்பும் அவர்களின் ஆதரவும் மனதிற்கு தெம்பாக இருக்கும். அலைச்சல் இருக்கும். கொடுக்கல் வாங்கல் சிறப்பாக இருக்கும். கால்வலி குறையும் புதிய பொருள் வாங்கிச்சேர்ப்பீர்கள்.

*பெப்ரவரி:-* அடிக்கடி பயணம் செய்வீர்கள் பேச்சில் வேகம் வேண்டாம் நிதானம் தேவை.

பணம்தேடி வரும். தொழில் சூடு பிடிக்கும், நல்ல மனிதர்களின் நட்பு கிடைக்கும். காதல் கைகூடும். பாராட்டும் பணமும் வந்து உங்கள் தகுதியை உயர்த்தும் திடீர் குழப்பம் தோன்றி மறையும். சளி சம்பந்தமான வியாதிகள் தோன்றி மறையும். எதையும் உடனே செய்ய முடியாது திணறுவீர்கள். மருத்துவச்செலவு, வெளிநாட்டுப் பயணம் ஏற்படும். தேவையில்லாத பயணம் மனதை வாட்டும். ஆடை, ஆபரணச் சேர்க்கை உண்டு. எதிலும் பிடிப்பு இருக்காது. புதிய டிரஸ் எடுப்பீர்கள் பெண்களுக்கு நகை சேரும்.

*மார்ச்:* நல்ல மனிதர்களின் சந்தப்பு கிடைக்கும். திடீர் பயணம். உல்லாசச்செலவு ஏற்படும். சொத்துக்கள் வாங்க விற்க சிறப்பாக இருக்கும். பணம் பல வழியில் வரும். எதையும் உடனுக்குடன் செய்து முடிப்பீர்கள் 'டென்சன்' காணப்படும். பலருடைய பாராட்டும் மதிப்பும் உங்கள் தகுதியை உயர்த்தும் காதல் கசக்கும். வேண்டாத மனபயம் அடிக்கடி தோன்றி மறையும் சிற்றின்பம், பேரின்பம் இரண்டும் கலந்து மனதில் வலம் வரும். உங்கள் வளர்ச் சியைப்பார்த்து சிலர் கெடுதல் செய்யப் பார்ப்பார்கள் ஆனால், உங்கள் பக்தி அவர்களைக் காணாமல் செய்துவிடும். கொடுக்கல், வாங்கல், பண உதவி, சொத்துச்சேர்க்கை ஏற்படும்.

*ஏப்ரல்:* எதிலும் நிதானம், முன் எச்சரிக்கை தேவை. பேசும்போது என்ன பேசுகிறோம் என்று யோசித்துப் பேச வேண்டும். பணம் வந்தாலும் செலவை மட்டுப்படுத்த முடியாது காதல் கசக்கும். சொத் துக்களில் வில்லங்கம் ஏற்பட்டு மறையும். எதிலும் பாராட்டும் மதிப்பும் மறைமுகமான எதிர்ப்பும் இருக்கும். பயணமும் அடிக்கடி செய்ய வேண்டியிருக்கும் தொழில் தடைகளைத் தாண்டி உயரும். பணம் பல வழிகளில் வந்து பாக்கெட்டை நிரப்பும் நரம்பு சம்பந்தமான வியாதிகள் வந்து நீங்கும். எதிர்பாராத நன்மைகள் நடக்கும் மனதிற்குத் தெம்பளிக்கும்.

*மே:* பணம் பல வரும். திடீர் நன்மைகள் நடக்கும் பாராட்டும் மதிப்பும் கூடும் எதிலும் கடுமையாக உழைத்து வெற்றி பெறுவீர்கள். அவசரமும், பதட்டமும் அடிக்கடி மனதில் இடம்பிடிக்கும் தேவையற்ற பயமும் கற்பனையும் ஏற்படும். திருமண காரியத் திட்டம் உருவாகும். பெரிய மகான்களின் சந்திப்பும் புனித யாத்திரையும் மனதிற்குத் தெம்பளிக்கும் உத்தியோகத்தில் திருப்தி, கல்வியில் மேன்மை ஏற்படும். காதலர்களிடம் கருத்து வேறுபாடு தோன்றி மறையும். திடீர் மருத்துவச் செலவு ஏற்படும். வீடு, வாகனம் வாங்க விற்க வெற்றி கரமாக இருக்கும். பணச்செலவு அதிகரிக்கும் பயணம் உண்டு.

*ஜூன்:* நினைத்த காரியம் கைகூடும். பக்தி, ஞானம் இவற்றில் மனம் நாடிச் செல்லும். தேவையில்லாத குழப்பம் குடிகொள்ளும். பாராட்டும், மதிப்பும் ஒரு பக்கம் கூடினாலும தேவையில்லாத பகையும் ஏற்படும். எடுத்த காரியத்தை உடனே முடிக்க படபடப்புடன் செயற்படுவீர்கள். காரணமற்ற பயம் தோன்றும். திடீர் நன்மைகள் நடக்கும். தொழில் படிப்படியாக உயரும். கொடுக்கல், வாங்கல் சிறப்பாக இருக்கும். சிலர் கடன் கேட்டுத் தொந்தரவு செய்வர். அடிக்கடி சிந்தனையில் மூழ்குவீர்கள். கால்வலி, பல்வலி, இடுப்பு வலி வந்து நீங்கும். புதிய திட்டங்கள் அடிக்கடி மனதில் வலம் வரும்.

*ஜூலை:* புதிய திட்டங்களைப் போட்டு அதை நடைமுறைக்குக் கொண்டு வர அரும்பாடுபடுவீர்கள் திடீர் பயணங்கள் ஏற்படும். உங்களை நேசித்த வரை பகைக்க நேரும். சொத்துக்கள் வாங்க விற்க சிறப்பாக இருக்கும். எங்கு சென்றாலும் வரவேற்பும், மதிப்பும் கூடும். திடீரென குழப்பம் குடிகொள்ளும் ஆடை, ஆபரணம் வாங்கும் வாய்ப்பு ஏற்படும். புனித யாத்திரை மகான்சந்திப்பு மனதிற்கு சந்தோஷமாக இருக்கும். எதிர்பாராத நன்மைகள் நடக்கும். காதல் கை கூடும். கல்வியில் மேன்மையடைவீர்கள் ரத்த அழுத்தம் கூடும். பல்வலி வந்து நீங்கும்.

*ஓகஸ்ட்:* எதிர்பாராத நன்மைகள் நடக்கும். தரகு ஒப்பந்தம் கொடுக்கல் வாங்கல் சிறப்பாக நடக்கும். எதிர்பாராத வகையில் பணம் சேரும் மனதில் அடிக்கடி டென்சன் காணப்படும். அவசரப்படுவதால் சில காரியங்களைக் கோட்டைவிடுவீர்கள். தேவையில்லாத பயம் வந்து நீங்கும் அரசாங்க ஆதரவும் மேலதிகாரி ஒத்துழைப்பும் மனதிற்குத் தெம் பளிக்கும்.

பணம் பல வழிகளில் வரும். சுபகாரியம் நடத்துவீர்கள். புது வீடு வாங்க , கட்ட வாய்ப்புண்டு. ஆடை ஆபரணம் சேரும்.

*செப்ரெம்பர்:* புதிய திட்டங்கள் போட்டு அதை நடைமுறைக்கு கொண்டுவர அரும்பாடுபடுவீர்கள். எடுத்த காரியம் படிப்படியாக வெற்றியடையும். புதிய தொழில் மூலம் பணம் ஈட்டுவீர்கள். பாராட்டும், மதிப்பும் மனதிற்கு தெம்பளிக்கும். வீடு, வாகனம்வாங்க, விற்க சிறப்பாக இருக்கும். உத்தியோகத்தில் திருப்தியும், கல்வியில் மேன்மையும் பெறுவீர்கள். உடல் வலி, மனக்குழப்பம் வந்து நீங்கும். எதையோ இழந்தது போன்று தனிமையில் வருந்துவீர்கள். வழக்கு இழுபறியாக இருக்கும். பெரிய மனிதர் சந்திப்பு மனதிற்குத் தெம்பளிக்கும். குடும்பத்தில் சிறு பிரச்சினை தோன்றி மறையும்.

*ஒக்டோபர்:* உங்கள் சாமர்த்தியத்தால் பலரைத் தன் வயம் இழுத்து விடுவீர்கள். பெரிய மனிதர் நட்பும் ஆதரவும் கிடைக்கும். வெளிநாட்டுத் தொடர்பு ஏற்படும். பல வழிகளில் பணம் சேரும். புதுமனிதர் களின் நட்பு கிடைக்கும். சொத்துக்கள் சேரும். வீடு வாகனம், நிலம் இவற்றில் ஏற்பட்ட வில்லங்கம் நீங்கும். வயிற்றுக்கோளாறு, வாயுக் கோளாறு, உஷ்ணவியாதி, இரத்த அழுத்தம் வந்து நீங்கும். எதிலும் உடனே செயற்பட்டு வெற்றிகரமாக முடிப்பீர்கள். உத்தியோகத் தில் சிறு பிரச்சினை வந்து நீங்கும். சிறு விபத்து ஏற்பட்டுத் தப்புவீர்கள்.

*நவம்பர்:* தாமதமாகிக் கொண்டே சென்றாலும் எடுத்த காரியம் எப்படியும் வெற்றியாகிவிடும். வெளியூர் பயணங்கள் செய்வீர்கள். எதையும் போராடிச் செய்யவேண்டியிருக்கும். மனம் ஏற இறங்க இருக்கும். எங்கு சென்றாலும் வரவேற்பும் மதிப்பும் கூடும். முடியுமா, முடியாதா என்று புலம்பிக் கொண்டிருந்த விசயமும் முடிந்துவிடும். திடீர்ப்பயணங்கள் ஏற்படும். திருமணக்காரியம், நிகழ்ச்சி நடத்துதல் புதிய சொத்துக்கள் வாங்குதல் போன்ற நன்மைகள் நடக்கும். உல்லாசப் பயணம் செய்வீர்கள். தேவை யில்லாத டென்சன் மனதில் காணப்படும். செலவை மட்டுப்படுத்த முடியாது.

*டிசெம்பர்:* நினைத்த காரியம் படிப்படியாக வெற்றியாகும். பெரிய மனிதர் சந்திப்பும் அரவணைப்பும் உண்டு எதையும் உருண்டு புரண்டு முடித்து விடுவீர்கள். மூட்டு வலி வந்து நீங்கும். புதிய பொருள் வாங்கிச் சேர்ப்பீர்கள். வெளியூர் வெளிநாட்டுப் பயணங்கள், விருந்து உபசரிப்பு ஏற்படும். அடிக்கடி மனதில் புதுப்புதுக் கருத்துக்கள் தோன்றும். கொடுக்கல் வாங்கல்கள் சுமாராகச் செல்லும். கல்வியில் முன்னேற்றம், உத்தி யோகத்தில் உயர்வு ஏற்படும். சிறு விபத்து ஏற்பட்டுத் தப்புவீர்கள். திடீர் நன்மை நடக்கும். மருத்துவச் செலவு ஏற்படும். புதிய தொழில் தொடங்கும் வாய்ப்பு உண்டு. சுபகாரியம் கைகூடி வரும். குழந்தைகளினால் மகிழ்ச்சி உண்டு. *(வளரும்)*

# உயர்பாதுகாப்பு வலயத்தை அகற்றுமாறு இடதுசாரிகள் பிரதமரிடம் வலியுறுத்து!

கொழும்பு,ஜன.8

வடக்கில் அதியுயர் பாதுகாப்பு வலயங்கள் உடன் அகற்றப்பட வேண்டுமென்று இடதுசாரிக் கட்சிகளின் தலைவர்கள் பிரதமரை நேரில் சந்தித்து வலியுறுத்தியுள்ளனர்.

இடது சாரிக் கட்சிகளின் தலைவர்கள் கடந்த திங்கட்கிழமை பிரதமர் ரணில் விக்கிரம சிங்கவைச் சந்தித்து தற்போதைய அரசியல் நிலைமை தொடர்பாகக் கலந்துரையாடினர். அவர்கள் மூன்று அம்சக் கோரிக்கையைப் பிரதமரிடம் முன் வைத்துள்ளனர்.

பிரதமருடனான இந்தச் சந்திப்பு பற்றி விளக்கமளிக்கும் செய்தியாளர் மாநாடு நேற்றுமுந்தினம் நிப்பொன் ஹோட்டலில் நடைபெற்றது. அதில் கலந்துகொண்டு உரையாற்றியபோது நவசமசமாஜக் கட்சியின் செயலர் விக கிரமபாகு கருணாரத்ன மேற்படித் தகவலைத் தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில் கூறியதாவது:-

புரிந்துணர்வு ஒப்பந்தம் தொடர்ந்தும் கடைப்பிடிக்கப்படவேண்டும். அதை ஜனாதிபதி ஏற்றுக்கொள்ள வேண்டும்.

விடுதலைப் புலிகள் முன்வைத்திருக்கும் இடைக்கால நிர்வாக யோசனையை அடிப்படையாகக் கொண்டு சமாதானப் பேச்சுக்களைத் தொடர்ந்து நடத்தவேண்டும். ஜனாதிபதியுடன் பிரதமர் புரிந்துணர்வு அடிப்படையில் ஒப்பந்தமொன்றை மேற்கொண்டு விடுதலைப் புலிகளுடன் தொடர்ந்து பேச்சுக்களை முன்னெடுக்க வேண்டும் என்பதை பிரதமரிடம் நாம் வலியுறுத்தியுள்ளோம்.

சமாதான முயற்சிகள் தொடருவதற்கு இடதுசாரிகளான நாம் பூரண ஒத்துழைப்பு நல்குவோம். போருக்கு ஓய்வு கொடுக்கப்பட்டு இயல்புநிலை தோன்றியுள்ள போதும் தமிழ் மக்கள் இன்னமும் அதன் பலாபலன்களை அனுபவிக்க முடியாதவர்களாகவே உள்ளனர். விரக்தி நிலையிலேயே உள்ளனர்.

'அதியுயர் பாதுகாப்பு வலயப் பிரச்சினை காரணமாக இரண்டு லட்சம் மக்கள் தமது சொந்த இடங்களில் மீளக்குடியேற முடியாமல் அல்லல் படுகின்றனர்.

எனவே உயர்பாதுகாப்பு வலயம் நீக்கப்படவேண்டும். தேசமீள் கட்டமைப்பு என்ற ரீதியில் வெளிநாட்டு கம்பனிகளுடன் ஒப்பந்தங்கள் செய்து கொண்டிராமல் தொழிலாளர்கள், விவசாயிகள் ஆகியோரின் நலன் பேணப் படல்வேண்டும். இவை பற்றிப் பிரதமருடன் நாம் பேச்சுக்களை நடத்தினோம்.

- இப்படி அவர் கூறினார்.

பிரதமருடனான சந்திப்பில் புதிய இடதுசாரி முன்னணி சார்பில் கலாநிதி விக்கிரமபாகு கருணாரத்ன, வ.திருநாவுக்கரசு, லீனஸ் ஜயதிலக, லங்கா சமசமாஜக் கட்சி சார்பாகலால் விஜேதிலக கம்யூனிஸ்ட் கட்சி சார்பாக முன்னாள் அமைச்சர் இந்திக குணவர்த்தன ஜனநாயக இடதுசாரி முன்னணி சார்பாக வாசுதேவ நாணயக்கார ஆகியோர் கலந்துகொண்டனர்.

(ஒ)

# விவசாயிகளின் தேவைகளை இனங்காண அடுத்த மாத ஆரம்பத்தில் கலந்துரையாடல்

யாழ்ப்பாணம்,ஜன.8

யாழ்.மாவட்ட விவசாயிகளின் தேவைகளை இனம்காண்பதற்கான முக்கிய கலந்துரையாடல் ஒன்றை அடுத்தமாத முற்பகுதியில் நடத்த கமநல சேவைகளின் யாழ். மாவட்டத் திணைக்களம் தீர்மானித்துள்ளது.

கமநல சேவைகள் திணைக்களத்தின் உதவி ஆணையாளர் சுந்தரேசன் இதனைத் தெரிவித்தார்.

இந்த வருடம் கமநல சேவைகள் திணைக்களத்தினால் குளங்கள், துரவுகள் புனரமைக்கப்படவுள்ளன. புனரமைப்புக்கான நிதியினை உலக உணவுத்திட்டம், 'நியாப்' அரசசார்பற்ற நிறுவனங்கள் மற்றும் திணைக்களங்கள் வழங்கவுள்ளன.

விவசாய சம்மேளனப் பிரதிநிதிகள் மற்றும் கிராம அபிவிருத்திச் சங்கப் பிரதிநிதிகள் ஆகியோரை அழைத்து கமநலசேவைகள் திணைக்கள அலுவலகங்களில் இந்தக் கலந்துரையாடல் நடத்தப்படும். விவசாயிகள் தமது தேவைகளை இக்கலந்துரையாடலில் முன்வைக்க முடியும் என்று உதவி ஆணையாளர் தெரிவித்தார்.

(ம-7)

# சாவகச்சேரி-யாழ்ப்பாணம் இடையே மீண்டும் மினிபஸ் சேவை ஆரம்பம்

தென்மராட்சி,ஜன.8

சாவகச்சேரி - யாழ்ப்பாணம் மினி பஸ் சேவை தென்மராட்சி தனியார் சிற்றூர்தி - சேவைகள் சங்கத்தினால் மீண்டும் ஜனவரி முதலாம் திகதி தொடக்கம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இடப்பெயர்வுக்குப் பின்னர் இந்த பஸ் சேவை கொடிகாமத்திலிருந்து நடத்தப்பட்டு வந்தது.

சாவகச்சேரி பகுதியில் பெருமளவு மக்கள் மீளக்குடியமர்ந்துள்ளதை யடுத்து இந்த பஸ் சேவையை மீண்டும் ஆரம்பிக்குமாறு மக்கள் கோரிக்கை விடுத்திருந்தனர். (ம-117)

# யுத்தம் ஒன்று ஏற்பட்டால் முழுப்பொறுப்பும் ஜனாதிபதியுடையதே

**அரசியல்வாதிகள் தங்களது தேவைகளை நிறைவேற்ற மக்களைப பகடைக்காய்களாக பயன்படுத்தி வருகிறார்கள் என்று-பாதுகாப்பு அமைச்சை ஜனாதிபதி பொறுப்பேற்ற சம்பவத்தைச் சாடுகின்றார் முன்னாள் மேலதிக சொலிசிஸ்டர் ஜெனரலும் ஜனாதிபதி சட்டத் தரணியுமான ஸ்ரீநாத் பெரேரா 'லங்காதீப' நாளிதழில் எழுதிய கட்டுரையின் தமிழாக்கத்தை இங்கு தருகின்றோம்.**

பாதுகாப்பு அமைச்சுப்பதவி ஜனாதிபதியின்வசமே இருக்கவேண்டுமென அரசமைப்பின் எந்தவொரு பிரிவிலும் குறிப்பிடப்படவில்லை. அவ்விதம் குறிப்பிடப்பட்டிருந்தால் 2001ஆம் ஆண்டு டிசெம்பர் மாதத்தில் ஜனாதிபதி சந்திரிகா பாதுகாப்பு அமைச்சராகத் திலக்மாரப்பனவை நியமிக்க வேண்டி ஏற்பட்டிருக்காது.

கடந்த ஏழு வருடங்களாக இந்த நாட்டின் பிரதமர் மற்றும் ஜனாதிபதி பதவியை வகித்தவரும், வகித்து வருபவருமான சந்திரிகா அரசமைப்பில் உள்ளடக்கப்பட்டுள்ள சட்ட விதிகளைப் பரிசீலிக்காது திலக்மாரப்பனவைப் பாதுகாப்பு அமைச்சராக நியமித்தார் எனக்கூறின், அவர் முழுநாட்டையுமே அவமதிப்பதாகிறார் என்று அர்த்தமாகும்.

பாதுகாப்பு அமைச்சர் பதவியை ஜனாதிபதியைத் தவிர்ந்த வேறெவரும் வகிக்க முடியாதென அரசமைப்பில் குறிப்பிடப்பட்டிருந்தும், தான் அது பற்றி விரிவானவகையில் ஆராயாது திலக்மாரப்பனவைப் பாதுகாப்பு அமைச்சராக நியமித்ததாக அவர் தெரிவிக்க முயற்சிப்பாரானால், அவர் இந்த நாட்டின் ஜனாதிபதிப் பதவியை மட்டுமன்றி, ஒரு நாடாளுமன்ற உறுப்பினர் பதவியைக்கூட வகிக்கத் தகுதியற்றவர் என்றே நாம் கருதமுடியும்.

எனினும், அரசமைப்பு விதிகளுக்கு அமைவான விதத்தில் பொதுமக்களால் தெரிவுசெய்யப்பட்ட வேறொரு நாடாளுமன்ற உறுப்பினர்கூடப் பாதுகாப்பு அமைச்சராகப் பதவி வகிக்க அரசமைப்பில் தடையெதுவும் இல்லை என்பதை ஜனாதிபதி தெளிவாக அறிந்திருந்தார் என உறுதியாகக் கூறமுடியும். அவ்வாறாயின், இன்று நிலவும் தவறான கருத்தை எவ்விதத்திலாவது தெளிவுபடுத்த வேண்டும். அதாவது பாதுகாப்பு அமைச்சராக ஜனாதிபதியைத் தவிர வேறு ஒருவர் நியமிக்கப்படுவதற்கு அரசமைப்பு இடமளிக்கவில்லை எனப் பரவியுள்ள கருத்தைப் போக்க வேண்டும்.

ஜனாதிபதியால் மட்டுமே பாதுகாப்பு அமைச்சுப்பதவி வகிக்கப்படவேண்டும் எனக்கொள்ளும் அளவுக்கு மிக அவசியமான தேவை எதுவும் தற்போது ஏற்பட்டிருக்கவில்லை என வெளிப்படையாகவே கூறமுடியும். அரசமைப்பின்படி நாடாளுமன்ற உறுப்பினராகத் தெரிவுசெய்யப்பட்ட தகுதியுடைய எவரையும் அமைச்சராக நியமிக்க முடியும்.

அரசமைப்பின் 4(ஆ) பிரிவில் நாட்டின் பாதுகாப்பு உட்பட்ட பொதுமககளின் நிறைவேற்று அதிகாரங்களை பொதுமக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஜனாதிபதியொருவரே நடைமுறைப்படுத்த வேண்டுமெனக் குறிப்பிடப்பட்டுள்ளது. இதனையே ஜனாதிபதியே பாதுகாப்பு அமைச்சின் பொறுப்பையும் வகிக்க வேண்டுமென ஒரு சாரார் சொல்லி வருகின்றனர். தற்போதைய அரசமைப்பின் கீழ் நிறைவேற்று அதிகாரங்கள் மூன்று வகைகளில் பிரித்தொதுக்கப்பட்டுள்ளன. (I) ஜனாதிபதி (II) அமைச்சரவை (III) அரச சேவை என்பனவே அவையாகும்.

### ஏன் பொறுத்திருந்தார்

அவ்வாறாயின் அமைச்சரவை கூட நிறைவேற்று அதிகாரத்தின் ஒரு பகுதியே என்றாகிறது அதன்படி அமைச்சரவை உறுப்பினரொருவர் பாதுகாப்பு அமைச்சராக நியமிக்கப்படுவதில் எதுவித சிக்கலோ சிரமமோ ஏற்படுமென எண்ண முடியாது. அவ்வாறு சிக்கல் மற்றும் சிரமம் ஏற்படுமென ஜனாதிபதி கூறுவாரானால் அவர் திலக் மாரம்பனவைப் பாதுகாப்பு அமைச்சராக முன்னர் நியமித்தமை அரசமைப்பு விதிகளுக்கு முரணனான செயலாக அமைகின்றது. 2001ஆம் ஆண்டு டிசெம்பர் மாதத்தில் சந்திரிகாவுக்கு அதுபற்றிச் சிறிதளவாவது ஐயம் ஏற்பட்டிருந்தால் அது குறித்துச சட்டமா அதிபரின் ஆலோசனையைப் பெற அவருக்கு வாயப்பு இருந்தது.

அவ்வித வாய்ப்பு இருந்தது என்பதைவிட அவ்வித ஆலோசனையைப் பெற்றுக்கொள்ள வேண்டிய அவசியம அவ்வேளையில் அவருக்கு ஏற்பட்டிருந்தது. அதுமட்டுமன்றி, அவ்வித ஐயம் ஏற்பட்டிருந்தால் அது பற்றி அரசமைப்பு விடயங்களில் அவருக்கு உதவிகள் வழங்கிவரும் ஆலோசகர்களிடம் அவரால் ஆலோசனை பெற்றுக்கொள்ளக் கூடிய வாய்ப்பும் அவருக்கிருந்தது. மேலும் அவ்வித ஐயத்தைத் தீர்த்துக்கொள்வதற்காக, அண்மையில் அவர் உயர்நீதிமன்றத்தின் ஆலோசனையைப் பெற்றமைபோன்று அவ்வேளையிலேயே அரசமைப்பின் 129ஆம் பிரிவின் கீழ் உயர்நீதிமன்றத்தின் ஆலோசனையைப் பெற்றுக்கொள்ளும் வாய்ப்பும் அவருக்கு இருநதது. ஆனால், சந்திரிகா அவ்வேளையில் அவ்வாறான முயற்சிகள் எவற்றிலும் ஈடுபடாமல் 2001ஆம் ஆண்டு டிசெம்பர் மாதத்தில் திலக்மாரப்பனவைப் பாதுகாப்பு அமைச்சராக நியமித்துள்ளார்.

### நீதிமன்ற ஆலோசனை

புதிதாகப் பதவியேற்ற ரணிலின் அரசு வெற்றிகரமாகச் சமாதான முயற்சிகளை ஆரம்பித்தது மட்டுமன்றி, அவற்றை வெற்றிகரமாக முன்னெடுததுச்சென்று, இரண்டு ஆண்டுகள் முடிவடைந்த வேளையிலேயே ஜனாதிபதி இப்பிரச்சினை தொடர்பாக உயர் நீதிமன்றத்தின் ஆலோசனையைப் பெற்றுக்கொள்ள எண்ணினார்.

நான் அறிந்த வகையில், ஜனாதிபதியின் வேண்டுகோள் தொடர்பாக உயர்நீதிமன்றம் தெரிவித்த ஆலோசனையில் பொதுமக்களால் தெரிவுசெய்யப்பட்ட நாடாளுமன்ற உறுப்பினரொருவரைப் பாதுகாப்பு அமைச்சராக நியமிக்க முடியாதெனக் குறிப்பிடப்பட்டிருக்கவில்லை.

நாட்டின் அரசமைப்புக்கு அமைய ஜனாதிபதியே அமைச்சரவையின் தலைவர் என்பது மட்டுமன்றி, அமைச்சரவை மேற்கொள்ளும் தீர்மானங்களுக்கு ஜனாதிபதியே பொறுப்பேற்கக் கடமைப்பட்டுள்ளார்.

எவராவது ஒரு அமைச்சர் நாட்டின் தேசிய பாதுகாப்புத் தொடர்பாக மேற்கொள்ளும் தீர்மானம் குறித்து அமைச்சரவைக்குக் காரணம் காட்டியாக வேண்டும். ஏதாவதொரு வகையில் பாதுகாப்பு அமைச்சர் நாட்டின் தேசிய பாதுகாப்புக்குப் பாதிப்பு ஏற்படும் விதத்தில் நடவடிக்கை மேற்கொள்வாரானால், தனது நிறைவேற்று அதிகாரத்தைப் பாவித்து அப்பாதுகாப்பு அமைச்சரை அப்பதவியிலிருந்து நீக்கிவிட ஜனாதிபதியால் முடியும். அவருக்குப் பதிலாக நாட்டின் தேசிய பாதுகாப்புக்கு பாதிப்பு ஏற்படுத்தும் வகையில் நடவடிக்கை மேற்கொள்ளமாட்டாரெனத் தான் நம்பும் மற்றொரு நாடாளுமன்ற உறுப்பினரை ஜனாதிபதி அப்பதவிக்கு நியமனம் செய்யலாம். அவ்வாறன்றி பாதுகாப்பு அமைச்சர் தவறான வகையில் நடவடிக்கை மேற்கொள்ளும் வேளையில், அமைச்சரவைக்குள்ளேயே அத்தவறைத் திருத்திக கொள்ளக் கூடிய உரிமையையும் ஜனாதிபதி கொண்டுள்ளார்.

ஆனால், ஜனாதிபதி தான் அரசியல் கட்சியொன்றின் தலைவியாக பணியாற்றுவதையும், அவரது கட்சிக்கு எதிரான ஐ.தே.கட்சி நாடாளுமன்றத்தில் பெரும்பான்மை பெற்று நாடாளுமன்ற அதிகாரம் அக்கட்சியின் கைகளில் கிட்டியிருக்கும் இன்றைய நிலையையும் நாம் கவனத்தில் கொண டாக வேண்டும். இரு ஆண்டுகளுக்கு முன்னர், அது வரையில் பொதுமக்களின் உயிரிழப்புக்குக் காரணமாகவும், சொத்துக்கள் மற்றும் நாட்டின் பொருளாதாரம் என்பவற்றுக்குப் பாதிப்பை ஏற்படுத்துவதாகவும் அமைந்திருந்த வடக்கு-கிழக்கு யுத்தத்தைத் தற்காலிகமாகவேனும் நிறுத்தி, சமாதான முயற்சிகளை அரசு முன்னெடுத்துச் சென்றது. அம்முயற்சிகளுக்குத் தடங்கல் ஏற்படுத்தும் விதத்திலேயே - சமாதான முயற்சிகளை எதிர்த்துவந்த - ஸ்ரீ.ல.சு.கட்சியின் தலைவியான ஜனாதிபதி மூன்று அமைச்சுகளின் பொறுப்புகளையும் தம்வசம் எடுத்துக் கொண்டார்.



யுத்தத்தின் மூலம் அரசியல் ஆதாயம் தேடிக்கொள்ள முயலும் அரசியல்வாதிகளின் பலதரப்பட்ட தேவைகள் எவையான போதிலும், நாடு இரண்டாகப் பிளவுபடுவதைத் தவிர்த்து, தடைப்பட்டுப்போயுள்ள சமாதான முயற்சிகளை மீண்டும் ஆரம்பிக்க வேண்டும் என்ற எதிர்பார்ப்பு நாட்டின் பெரும்பாலான பொதுமக்கள் மத்தியில் காணப்படுகிறது.

தற்போதைய ரணிலின் அரசு அவ்வாறான சமாதான முயற்சிகளை முன்னெடுத்துச்சென்ற வேளையிலேயே ஜனாதிபதி, அரசிடமிருந்து மூன்று அமைச்சுக்களின் பொறுப்புக்களைக் கைப்பற்றியுள்ளார். ஜனாதிபதியின் இந்த நடவடிக்கையால் நாட்டு மக்கள் பெருங்குழப்பம் அடைந்திருப்பதைத் தெளிவாக அவதானிக்க முடிகிறது. இவ்வித சந்தர்ப்பம் ஒன்றில், நாட்டின் பெரும்பாலான பொதுமக்களின் நம்பிக்கையை வென்றெடுத்த கட்சியைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினரொருவரே பாதுகாப்பு அமைச்சர் பதவியை வகிக்க வேண்டியது அவசியமாகும்.

ஜனாதிபதியின் அண்மைக்கால நடவடிக்கைகளால் சமாதான முயற்சிகள் தடைப்பட்டிருப்பது மாத்திரமன்றி, சமாதான முயற்சிகளில் பெருமளவிலான முன்னேற்றம் ஏற்பட்டுள்ள இவ்வேளையில் மீண்டும் நாட்டில் யுத்தச் சூழ்நிலை ஏற்படுமானால் அதற்கு முற்றுமுழுதான பொறுப்பையும் ஜனாதிபதியே ஏற்கவேண்டும்.

முன்னாள் பாதுகாப்பு அமைச்சர் திலக்மாரப்பன, இவ்விடயத்தில் சரியான விதத்தில் செயற்படாதிருந்தால் அவரைப் பதவியிலிருந்து அகற்றுவது தொடர்பாக எதுவித சிக்கலும் உருவாகியிருக்காது.

### மாற்றம் இல்லை

ஜனாதிபதி பாதுகாப்பு அமைச்சுப் பொறுப்புகளைத் தம்வசம் எடுத்துக்கொண்ட கடந்த ஆண்டு நவம்பர் மாதம் 4ஆம் திகதிக்கு முன்னர், திலக்மாரப்பனவின் கட்டுப்பாட்டின் கீழ் இயங்கிய பாதுகாப்பு அமைச்சின நடவடிக்கைகளில் மாற்றங்கள் எதனையாவது மேற்கொள்வதற்கு ஜனாதிபதி நடவடிக்கை எடுத்தாரா?

பாதுகாப்பு அமைச்சர் பதவியிலிருந்து மாரப்பனவை விலக்குவதற்கு முன்னர் விடுதலைப் புலிகள் அமைப்பின் மணிராசன் குளம் முகாமை பத்து நாள் அவகாசத்தில் அங்கிருந்து அகற்றிவிட நடவடிக்கை மேற்கொள்ளுமாறு ஜனாதிபதி அவருக்கு உத்தரவிட்டிருந்தார்.

தற்போது ஜனாதிபதியால் பாதுகாப்பு அமைச்சுப் பொறுப்புக்கள் கைப்பற்றப்பட்டு இரண்டு மாதங்களுக்கு மேலாகி விட்டது. நானறிந்த வகையில் குறிப்பிட்ட மணிராசன்குளம் முகாம் இன்றும் முன்பிருந்த இடத்தில், முன்பிருந்த விதத்தில் விடுதலைப் புலிகள் அமைப்பால் பேணப்பட்டு வருகின்றது. அதற்கு எதிராக நடவடிக்கை எதுவும் எடுக்கப்படவில்லை.

அம்முகாமை அங்கிருந்து அகற்றுமாறு கூக்குரலிட்ட ஏனைய அரசியல்வாதிகள் தற்போது ஏன் மௌனமாகி விட்டனர் என்பது தெரியவில்லை. இது நான் அவதானித்தவற்றில் உதாரணத்துக்காகக் குறிப்பிட்ட ஒரு விடயம் மட்டுமே.

இன்று பலதரப்பட்ட நபர்கள் தத்தமது அரசியல் விருப்பு வெறுப்புக்களை நிறைவேற்றிக்கொள்வதற்காக இந்நாட்டு மக்களையும் தாய் நாட்டையும் பணயமாக வைக்கின்றனர். கடந்த ஐம்பது ஆண்டுகளுக்கு முன்னர் பெற்ற சுதந்திரத்துக்குப் பின் நாட்டின் வரலாற்றை நாம் இன்றைய நிலையிலிருந்து பின் நோக்கிப் பார்ப்போமானால் இந்த வேறுபாட்டை எம்மால் தெளிவாக அவதானிக்கமுடியும்.

அரசியல் செல்வாக்குக் காரணமாகவும் தமது அரசியல் செல்வாக்கை அதிகரித்துக் கொள்ளும் நோக்கிலும் இவ்வித நடவடிக்கைகளில் ஈடுபட்ட, ஈடுபட்டுவரும் அரசியல்வாதிகள் பற்பல சந்தர்ப்பங்களில் நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ இவற்றின் பங்குதாரர்களாக இயங்கி வருவதை அவதானிக்க முடிகிறது. அமைதியான வாழ்க்கையை விரும்பும் நாட்டின் சாதாரண பொதுமக்கள் இவர்களது சூது விளையாட்டில் வெட்டுண்டு வெளியேற்றப்படும் காய்களைப் போன்று பாதிப்புக்களுக்கு உள்ளாகுகின்றனர்.

நாட்டின் தற்போதைய அரசமைப்பின் பிரகாரம், நாட்டின் பாதுகாப்புக்கு ஜனாதிபதியே பொறுப்பானவராகிறார். தாம் அப்பொறுப்பைச் சரிவர நிறைவேற்ற வேண்டுமானால் பாதுகாப்பு அமைச்சின் பொறுப்புக்களை அவர் தன்னிடம் மட்டுமே வைத்திருக்கவேண்டும் என்ற கட்டாயம் எதுவும் கிடையாது. அதற்காக ஆரம்பத்தில் கூறப்பட்டமை போன்று சட்டபூர்வமான பொதுத்தேர்தல் மூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட நாடாளுமன்ற உறுப்பினரொருவரை அப்பதவியில் நியமித்து நிர்வாகத்தை மேற்கொள்ள வைக்க இயலும். அதன் பொருட்டு பொதுமக்களின் பெரும் நம்பிக்கைக்குப் பாத்திரமான நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவரைத் தெரிவுசெய்து அவரைப் பாதுகாப்பு அமைச்சராக நியமித்தால் அவர் ஜனாதிபதியின் தலைமையிலான அமைச்சரவையின உறுப்பினர்களில் தானும் ஒருவரென்ற எண்ணத்தில் பொறுப்புணர்வுடன் செயற்பட வாய்ப்பு ஏற்படும்.

அத்தோடு, சட்டத்தை உருவாக்கும் நாடாளுமன்றத்தின் அங்கத்தவர்களில் தானும் ஒருவரென்ற உணர்வோடு அவர் சட்டங்களுக்கு மதிப்பளித்துப் பொறுப்புணர்வுடன் செயற்படுவார்.

ஆகவே, ஜனாதிபதியும், நாடாளுமன்றத்தில் பெரும்பான்மையைக் கொண்டுள்ள அரசும் தத்தமக்குரிய அடிப்படைக் கருத்துக்களை வற்புறுத்தும் தரப்புக்களாகச் செயற்பட்டு வரும் இன்றைய நிலையில் சட்டப்படி பொதுமக்களால் நாடாளுமன்றத்துக்குத் தெரிவுசெய்யப்பட்ட உறுப்பினரொருவரைப் பாதுகாப்பு அமைச்சராக நியமிப்பதே பொதுமக்களின் எதிர்பார்ப்புக்களை நிறைவேற்றத் தக்க மிகப்பொருத்தமான நடவடிக்கையாய் அமையும் என்பது எனது கருத்தாகும்.

### அரசமைப்பை திருத்தவேண்டும்

தற்போதைய அரசமைப்பில் காணப்படும் பொருத்தமற்ற சட்டப் பிரிவுகளில் ஒன்றாக இந்த 129ஆவது பிரிவைக் குறிப்பிடமுடியும். அரசமைப்புத் திருத்தம் மேற்கொள்ளப்படும் வேளையில் அதில் இடம்பெற்றுள்ள மேற்சொன்ன வகையான பொருத்தமற்ற பிரிவுகள் குறித்துப் பரிசீலிக்கப்பட வேண்டியது அவசியமாகும்.

நாட்டின் பாதுகாப்புத் தொடர்பாக மேற்கொள்ளக்கூடிய நடவடிக்கைகளுக்கான அதிகாரங்கள் அரசமைப்பின் மூலம் ஜனாதிபதிக்கு வழங்கப்பட்டுள்ளன. நாட்டின் பாதுகாப்புப் படைகளின் தளபதியாக ஜனாதிபதி மட்டுமே செயற்பட முடியும். எனவே நாட்டின் தேசிய பாதுகாப்பை உறுதிப்படுத்திக் கொள்வதற்காக நடவடிக்கைகளுக்கான முடிவு மேற்கொள்ளல், கட்டளை பிறப்பித்தல் போன்ற செயற்பாட்டு அதிகாரங்கள் அரசமைப்பு மூலம் ஜனாதிபதிக்கு வழங்கப்பட்டுள்ளன. நாட்டு மக்களது நன்மைகருதி இவ்வித அதிகாரங்கள் வழங்கப்பட்டுள்ள நிலையில் பாதுகாப்பு அமைச்சுப் பதவியைச் சட்டப்படி பொதுமக்களால் தெரிவுசெய்யப்பட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவரிடம் வழங்குவது குறித்துத் தீர்மானித்து செயற்படுத்துவதில் ஜனாதிபதிக்கு எதுவித அழுத்தங்களும் ஏற்படாது.

நடைமுறை அரசமைப்பு விதிகளில் திருத்தங்கள் மேற்கொள்ளாது விடின், எதிர்காலத்தில் குறிப்பிட்டதொரு சந்தர்ப்பத்தில் தற்போதைய நாடாளுமன்ற அதிகாரத்தைக் கொண்டுள்ள ஐ.தே.கட்சியிடம் ஜனாதிபதிப் பதவியும், தற்போதைய ஜனாதிபதிப் பதவியைக் கொண்டுள்ள பொ. ஐ.முன்னணியிடம் நாடாளுமன்றப் பெரும்பான்மையும் கிட்டும் நிலைமை உருவாகித் தற்போது ஜனாதிபதி செயற்படும் விதத்தில் புதிதாகப் பதவி ஏற்கும் ஜனாதிபதியும் செயற்பட முனைவாரானால் அதனால் பொ.ஐ.முன்னணி தற்போதுள்ளது போன்ற நெருக்கடியைச் சந்திக்கும் நிலை ஏற்படுவதைத் தவிர்க்கமுடியாது.

**வீயெஸ்ரீ**

அரசமைப்பு அர்த்தமுள்ளதொன்றாக அமைய வேண்டுமானால் அது பொதுமக்களுக்குப் பூரண நன்மையளிப்பதாகவும், அவர்களது எதிர்கால சுபீட்சத்தைக் கட்டியெழுப்பும் விதத்திலும் ஜனநாயக ரீதியில் பொதுமக்களின் ஆணைமூலம் உருவாக்கப்பட்ட நாடாளுமன்றத்தின் குறிக்கோள் நிறைவேறும் விதத்திலும், நாட்டுக்கும்,நாட்டின் பொதுமக்களுக்கும் பயன்தரும் வகையிலும் அமைதல் அவசியமாகும்.

❖

# வாசகர் திருமுகம்

## ஆஸ்பத்திரி மலசல கூடத்துக்கும் கட்டணம் அறவிடுவது சரியா?

கடந்த 27.12.2003 திகதிய 'உதயன்' வாசகர் திருமுகத்திலே மேற்காட்டப்பட்ட மகுடத்தைக் கொண்ட திருமுகத்திற்கு வாசகர்களின் கவனத்தைக் கோருகின்றேன். பேருந்து நிலைய மலசலகூடம புதிய கட்டடத்தில் மிக அண்மையில் ஆரம்பிக்கப்பட்டது. நோயாளர்கள் மலசல கூடத்தை பாவிப்பதைப்போன்று பேருந்துப் பிரயாணிகள் சகலரும் பேருந்து நிலைய மலசலகூடம் பாவிப்பதில்லை. விரல் விட்டெண்ணக் கூடிய ஒரு சிலரே 2ரூபா கொடுத்து மலசலகூடம் பாவிக்கிறார்கள். கூடுதலானோர் பேருந்து நிலையத்துக்கு எதிர்புறத்தேயுள்ள யாழ். மாநகர சபை மலசலகூடத்தையே காசின்றி நாடுகின்றனர். இது தினமும் கண்கூடாகக் காணக்கூடியதாக உள்ளது. அதுவும் பேருந்து நிலைய மலசல கூடம் போல துப்புரவாகவேயுள்ளது. 'வார்ட்டில் தங்கியிருக்கும் நோயாளர்கள் மலசலகூட வசதியின்மையால் அவஸ்தைப்படுகிறார்கள்' என்பது வாசகர்களுக்கு வாட்டிலே மலசலகூடம் இல்லை என்ற ஓர் ஐயத்தை ஏற்படுத்தியிருக்கலாம். நானறிந்த வரையில் மலசலகூட வசதியற்ற வார்ட்டுகளில்லை என்பதுதான் உண்மை. பேருந்து மலசலகூடம் அறவிடுவது போன்று 2ரூபா வீதம் அறவிட்டு நியமிக்கப்படும் தனியார் சுத்திகரிப்பு சேவைக்கு கொடுக்கலாமென்பது எவ்வகையிலும் சாத்தியமற்றது. ஏனெனில் வயிற்றோட்ட நோயாளரோ அன்றி வயிற்றுளைவு நோயாளர்களோ பல முறை மலகூடத்தை பாவிக்கும் போது அவர்களிடம் பணம் அறிவிடமுடியுமோ? ஆஸ்பத்திரியை நாடிவருபவர்கள் 80 சதவீதமானோர் பாமர மக்களே. குறிப்பிட்ட திட்டத்தைப் போன்றே நோயாளர் வைத்தியசாலைக்கு வருவதைக் குறைக்கும் நோக்கில் முன்பு நிதி அமைச்சராக இருந்த டாக்டர் என்.எம்.பெரேரா 25சதமுத்திரை ஒட்டும் திட்டத்தைக் கொண்டுவந்தார். கடைசியில் நடைமுறை சாத்தியப்படாது போக கைவிடப்பட்டது எனவே, நோயாளர்களிடம் மலசலகூட வரி அறவிடல் கேலிக்கூத்தானது. எமது போதனா வைத்தியசாலை மலசலகூடங்கள் எவ்வகையிலும் கொழும்பு போதனாவைத்தியசாலை மலசல கூடத்திற்குச் சளைத்ததல்ல.

நான் மூன்று தசாப்தத்துக்கு கூடுதலாக சுகாதார சேவையிலே ஈடுபட்டவன். எனவே மலசலகூட சுத்திகரிப்பு, அதன் துப்புரவு சுத்திகரிப்புத் தொழிலாளியிலேயும் மேற்பார்வையாளரிலுமே தங்கியுள்ளது. மேற்பார்வையாளரின் கடமைப்பட்டியல் **Duty list** இல் முதல் காணப்படுவது வார்ட் மலசலகூட சுத்திகரிப்பை, துப்புரவை மேற்பார்வையிடல் என்பதே. எனவே, மேற்பார்வையாளர் கடமையைச் செவ்வனே செய்தால் அவலநிலை என்ற சொல்லே அர்த்தமற்றதாகிவிடும்.

50 - 60ஆம் ஆண்டுகளிலே தென்னிந்தியாவைச் சேர்ந்த பரமகுடி இந்திய தமிழ் சுத்திகரிப்பு தொழிலாளர் சிலர் வைத்தியசாலை மலசல கூடசுத்திகரிப்பு தொழிலாளர்களாயிருந்தனர். அவர்கள் ஒவ்வொரு 2 மணித்தியாலத்திற்கு ஒருமுறை மலகூடம் சுத்திகரிப்பதுடன், நெருப்புத் தண்ணீர் ஊற்றல், ஈசி எனப்படும் கலவையிட்டுக் கழுவல், காபிக்போடல் என்பன மூலம் மலகூடத்தை துப்புரவு செய்வர். ஒவ்வொர் 2 மணித்தியாலமும் மேற்பார்வையாளர் சுத்திகரிப்பு தொழிலாளருடன் மலகூடத் துப்புரவை கவனிப்பார். அன்றைய வைத்தியசாலை அத்தியட்சகர்(**M.S.**) வாரத்தில் ஒரு நாளை ஆதாவது வெள்ளிக்கிழமைகளில் மேற்பார்வையாளருடன் ஒவ்வொரு வார்ட் மலசலகூட சுகாதாரத்தை துப்புரவை மேற்பார்வையிடுவர். வார்ட் மலசலகூடம் துப்புரவில்லையேல் மேற்பார்வையாளரின் வருட சம்பள உயர்ச்சி (**ANNUAl SALARY INCREMENT**) தடுத்து வைக்கப்படும் இந்த நிலைதான் அன்று. இன்றோ???

*எஸ்.ஆர். அருமைநாயகம்*

*போதனா வைத்தியசாலை,*
*முன்னாள் மேற்பார்வையாளர்.*

## கட்டாக்காலி நாய்களும் கட்டவிழ்த்து விடப்பட்ட வாலிபர்களும்

இன்றைய யாழ்ப்பாணத்தில் இரண்டே இரண்டு தொல்லைகள்தான் மக்களிடத்தே பெரிதும் பேசப்படுகின்றன. ஒன்று கட்டாக்காலி நாய்கள் மக்களுக்குக் கொடுக்கும் தொல்லை மற்றது கட்டவிழ்க்கப்பட்ட வாலிபர்கள் பெண்பிள்ளைகளுக்குக் கொடுக்கும் தொல்லை.

கட்டாக்காலி நாய்களை அடக்கிஒடுக்க அதிகாரிகள் எடுக்கும் முயற்சிகளை பத்திரிகைகளினூடு பலமுறை அறிந்தேன். ஆனால், இந்த வாலிபர்களை அடக்க எந்த முயற்சிகளும் எந்தவொரு அதிகாரியும் எடுத்ததாக நான் அறியேன்.

நான் சந்தித்த சில துன்பவியல் சம்பவங்களே என்னை இவ்வாறு எழுதத்தூண்டியது. அவற்றை விவரிக்கிறேன்.

எங்கள் யாழ். தலைமை அஞ்சல் காரியாலயம் அமைந்துள்ள இடத்தில் பெண்களை (இளம் பெண்களை) தொல்லை செய்யும் சில றிக்கிமாட்டின்களை கண்டேன். றிக்கிமாட்டின் என்றவுடன் குழம்ப வேண்டாம், இவர் ஒரு பொப்பாடகர், இவர் போலவே உடை அணிந்து, தலை இழுத்து, கடுக்கன் குத்தியவர்கள் அவர்கள். இவர்கள் செய்த குறும்பானது தபாலகத்திற்கு வந்த அந்தச் சிறுமியிடம் என்னுடைய விலாசத்திற்கா? கடிதம் போட்டாய் என்று வினாவ, அச்சிறுமி அதனைப் பொருட்படுத்தாது செல்ல, அவன் ஓடிச்சென்று அச்சிறுமியை பிடித்து திருப்பி மிரட்டியது என்கண்நின்று அகலவில்லை.

யாழ்ப்பாணத்தின் பல இடங்களில் சில வாலிபர்கள் யாராவது ஒருவரின் வீட்டின் படலையின் முன்நின்று போகவரும் பெண்பிள்ளைகளை சீட்டி அடிக்கிறார்கள், இதனை கேட்க வந்த அந்த வீட்டுக்காரனை தகாத வார்த்தைகளால் பேசி அவ்விடத்தைவிட்டு அகன்றனர். இது நடந்தது மாலை 6.30 மணிக்கு பின். இரவு 10 மணி போல் அதே வீட்டுக்குச்சென்று கூச்சலிட்டு அவர்களின் நித்திரையை கலைத்ததாக நான் பின்பு அறிந்தேன்.

இவ்வாறு நான் சந்தித்தவை பல. அவற்றை எழுதுவதானால் நான் எனது பயணத்திற்கான பேருந்தை தவறவிட்டு விடுவேன்.

இதை எழுதும் நானும் ஓர் இளைஞன் தான். என்னாலேயே பொறுத்துக்கொள்ள முடியாதளவு சீண்டல்கள்.

இதனைத் தக்க அதிகாரிகளுக்கு தெரியப்படுத்தி, தக்கநடவடிக்கை எடுக்கக் கேட்டுக்கொள்கிறேன்.

*– வழிப்போக்கன்.*

*யாழ். பஸ்நிலையம்.*

### முன்பள்ளிகளுக்கு கற்றல் உபகரணங்கள்

வலிகாமம் தெற்கு,ஜன.8

தனது எல்லைக்குட்பட்ட தெரிவு செய்யப்பட்ட இருபது முன்பள்ளிகளுக்கு கற்றல் உபகரணங்களை சுன்னாகம் பிரதேசசபை வழங்க உள்ளது.

சபையின் பன்முகப்படுத்தப்பட்ட நிதியில் 97 ஆயிரம் ரூபா இதற்கென ஒதுக்கப்பட்டுள்ளது.

மேலும் இப்பிரதேச சபை எல்லைக்குட்பட்ட ஒன்பது சனசமூக நிலையங்களுக்கும், ஒரு முன்பள்ளிக்கும் 2லட்சத்து 92ஆயிரம் ரூபா பெறுமதியுடைய தளபாடங்கள் வழங்கப்பட உள்ளதென பிரதேச சபை செயலாளர் திருமதி ச.சொக்கலிங்கம் தெரிவித்தார். (ம-152)

### கண்ணாடிகளை பெற அறிவுறுத்து

யாழ்ப்பாணம்,ஜன.8

'ஹெல்ப் ஏஜ்' (HELP AGE) நிறுவனத்தினால் யாழ். வை.எம்.சி.ஏ. மண்டபத்தில் கடந்த ஒக்ரோபர் மாதம் நடத்தப்பட்ட இலவச கண்சிகிச்சை முகாமில் கலந்துகொண்டு கண்ணாடி பெற்றுக்கொள்ளாதவர்கள் எதிர்வரும் 26ஆம் தகதி காலை 9 மணிக்கு வை.எம்.சி.ஏ. மண்டபத்துக்கு வருகை தந்து கண்ணாடிகளை பெற்றுக்கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

வரும் பொழுது முன்னர் வழங்கப்பட்ட அட்டையையும் எடுத்துவருமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-10)

### அதிபர் பதவி வெற்றிடம்

வலிகாமம்தெற்கு,ஜன.8

வலிகாமம் கல்வி வலயத்தில் வெற்றிடமாகியுள்ள இரண்டு பாடசாலைகளின் அதிபர் பதவிக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

வடலியடைப்பு சைவப்பிரகாச வித்தியாசாலை, காங்கேசன்துறை மகா வித்தியாலயம் ஆகிய பாடசாலைகளுக்கே அதிபர் பதவிக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

வலிகாமம் கல்வி வலயத்தில் காணப்படும் முறைப்படியான விண்ணப்பங்களைப் பார்த்துத் தயாரித்து பொருத்தமான அதிபர், ஆசிரியர்கள் இம்மாதம் 19ஆம் திகதிக்கு முன்பாகத் தங்கள் விண்ணப்பங்களை வலிகாமம் கல்வி வலயத்தில் சேர்ப்பிக்குமாறு வலிகாமம் வலயக்கல்விப் பணிப்பாளர் அறிவித்துள்ளார். (ம-152)

### வரணிப் பகுதிக்கு மின் விநியோகம்

தென்மராட்சி,ஜன.8

வரணிப் பகுதிக்கு இன்னும் இரு வாரங்களில் மின்சாரம் வழங்கப்படவுள்ளது என்று அதிகாரிகள் தெரிவித்தனர். இப்பகுதிக்கு மின்விநியோகம் வழங்குவதற்கான வேலைகள் பூர்த்தியடையும் நிலையில் உள்ளன.

வரணி பொதுச் சந்தை, வரணி வடக்கு வாழைத் தோட்டம் ஆகிய இடங்களில் மின்மாற்றிகள் பொருத்தப்பட்டு மின்விநியோகம் வழங்கப்படவுள்ளது என்று இலங்கை மின்சார சபை வட்டாரங்கள் தெரிவித்தன.

அடுத்த கட்டமாக நாவற்குழி, தச்சந்தோப்பு, கைதடி வடக்கு, சரசாலை, கல்வயல் ஆகிய பகுதிகளுக்கு இந்த வருடத்துக்குள் மின்சாரம் வழங்குவதற்கு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்றும் தெரிவிக்கப்பட்டது. (ம-117)

### கலந்துரையாடல்

தென்மராட்சி,ஜன.8

தென்மராட்சி கல்வி வலயத்திற்குட்பட்ட முன்பள்ளிகளின் ஆசிரியர்களுக்கான கலந்துரையாடல் எதிர்வரும் 11ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 மணிக்கு மீசாலை வீரசிங்கம் மகாவித்தியாலயத்தில் நடைபெறுமென முன்பள்ளி ஆசிரியர் சங்கத் தலைவர் சொ.வி.த. கந்தையா அறிவித்துள்ளார். (ம-117)

★ ★ ★

யாழ்ப்பாணம்,ஜன.8

யாழ். பல்கலைக்கழக விஞ்ஞான பீட மாணவர்களுக்கான கலந்துரையாடல் இன்று காலை 9 மணிக்கு பல்கலைக்கழக பிரதான மண்டபத்தில் நடைபெறவுள்ளது. அனைத்து விஞ்ஞான பீட மாணவர்களையும் கலந்துகொள்ளுமாறு விஞ்ஞானபீட மாணவர் ஒன்றியம் கேட்டுள்ளது. (ம-ரி)

# கல்விச் சாலை காட்சிகள்




வடலியடைப்பு சைவப்பிரகாச வித்தியாசாலையின் வருடாந்தப் பரிசளிப்பு விழா அண்மையில் நடைபெற்றது. பிரதம அதிதியாக கலந்து கொண்ட இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்கள யாழ். மாவட்ட உதவிப் பணிப்பாளர் சிவ.மகாலிங்கம் உரையாற்றுவதைப் படத்தில் காணலாம். வித்தியாலய அதிபர் வீ.நடராசா, சிறப்பு விருந்தினர்களாக கலந்துகொண்ட சங்கானை சிவப்பிரகாச மகாவித்தியாலய அதிபர் ச.கைலாசநாதன், வடலியடைப்பு கிராம அலுவலர் க.சுதர்சன் ஆகியோரும் படத்தில் காணப்படுகின்றனர். *(படம்: சண்டிலிப்பாய் செய்தியாளர்)*



யாழ்ப்பாணம் 'இங்கிலிஷ் ஸ்பீச் அன்ட் ராமா' அக்கடமியின் வருடாந்த சான்றிதழ் வழங்கும் வைபவமும் ஆங்கில கலை நிகழ்வுகளும் யாழ்ப்பாணக் கல்லூரி பட்டதாரி பீரிவில் அண்மையில் நடைபெற்றன. இந்நிகழ்வில் வண. பிதா. கொன்சன்டைன் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டார். சிறுவர்களின் ஆங்கில நிகழ்ச்சி ஒன்றைப் படத்தில் காணலாம். (ஜ)



தாவடி இந்து தமிழ்க்கலவன் பாடசாலைக்கு நீர்த்தாங்கி அமைப்பதற்கான அடிக்கல் நடுநிகழ்வு அண்மையில் இடம்பெற்றது. எஸ்.ஆர். சரவணபவன் அடிக்கல் நடுவதையும் பாடசாலை அதிபர் செ.செல்வராஜா உட்பட ஏனையோர் அருகில் நிற்பதையும் படத்தில் காணலாம். (ஜ-10)



மானிப்பாய் மகளிர் கல்லூரியின் இளநங்கை மலர் வெளியீட்டு விழா அண்மையில் இடம்பெற்றது. இந்த நிகழ்வில் மலரின் சிறப்புப் பிரதியை ஆனைக்கோட்டை பாலசுப்பிரமணியம் வித்தியாசாலை அதிபரும் பழைய மாணவியுமான திருமதி கு.ஜெயவீரசிங்கத்திடம் முன்னாள் துணைவேந்தர் பொன். பாலசுந்தரம்பிள்ளை வழங்குவதைப் படத்தில் காணலாம். (ஜ-86)

## வீடு விற்பனைக்கு

சுண்டிக்குளி மகளிர் கல்லூரி, கச்சேரியை அண்டிய பகுதியில் சகல வசதிகளுடன் கூடிய மாடிவீடு விற்பனைக்கு உண்டு.

தொடர்பு: மு.விமலநாதன்.
27/20, புங்கன்குளம் வீதி. பாண்டியன் தாழ்வு.
யாழ்ப்பாணம். (26915)(14-16-32)

## ஆள் தேவை

தொலைபேசி. பக்ஸ் இயக்கக்கூடிய பெண் தேவை. நேரில் வரவும்.

**சப்பல் ஸ்ரீட்ஸ்**
27. 2ஆம் குறுக்குத்தெரு சந்தி.
யாழ்ப்பாணம்.
T.P: 5469.
(சி-32642)(14-16-32)

## நீங்காத நினைவில் முதலாம் ஆண்டு



மண்ணில் 1924-04-17 — விண்ணில் 2002-12-20

### அமரர் நாகநாதர் இராமலிங்கம்

முதலாம் வட்டாரம் புங்குடுதீவு
(முன்னாள் பிரபல வர்த்தகர்)
திதி: பிரதமை -2004-01-08

385 ஆவது நாளும்
திருவாதிரைத்தேரேறி எம்மைத் திடீரென்று
திகிலடையவைத்து எங்குசென்றீர்-ஐயா?
சிவஜோதியில் கலந்து இறைவனோடு ஒன்றி
சிவலோகம் சென்றீர் ஐயா! -உங்களைப்
பிரிந்த துயர் ஆறாமல் - தினமும் நாம்
பிரிவினால் வாடுகின்றோம்-ஐயா!
ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

என்றும் உங்கள் நினைவுடன் வாழும்:
**அன்பு மனைவி, மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.**

55/2, வைமன் வீதி,
நல்லூர். (26923)(32-14-16)

## திருமறைக் கலாமன்றம் ஓவியக் கலைவட்டம்

நடத்தும்

### ஓவிய, சிற்பக் கண்காட்சி -2004

காலம் : 09,10,11 ஜனவரி 2004 (வெள்ளி, சனி, ஞாயிறு)
நேரம் : காலை 9.00 மணி-மாலை 5.00 மணி
இடம் : 'கலாமுற்றம்' 15, றக்கா வீதி, யாழ்ப்பாணம்.

*அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.*

238, பிரதான வீதி, யாழ்ப்பாணம். ஓவியக் கலைவட்டம் திருமறைக்கலாமன்றம்

*பார்வையாளர்களுக்கான போட்டி:* இக் கண்காட்சியை பார்வையிடும் பார்வையாளர்கள் கண்காட்சித் திடலில் வைத்து வழங்கப்படும் தலைப்புக்கமைய வரைந்து தரும் ஓவியங்களில் முதல் மூன்று இடங்களைப் பெறும் ஓவியங்களுக்கு கண்காட்சி இறுதி நாளன்று நினைவுப் பரிசில்கள் வழங்கப்படும்.

(சி-32643)(32-14-16)

## அபிவிருத்தி அதிர்ஷ்டம்

| | |
|---|---|
| சீட்டிழுப்பு வாரம் | 541 |
| திகதி | 06.01.2004 |

| டிக்கட்டின் நிறம் - நீலம் |
|---|
| செல்லுபடியாகும் தொடர் இல. 4443640-4459211 |

வெற்றி இலக்கங்கள் **11 19 42 51**



லக்கினம்

மேடம்

ஜக்பொட் பரிசு
ரூபா. 1,739,200/-
வெல்லப்படவில்லை

இந்த வெள்ளிக்கிழமைக்கான ஜக்பொட் ரூபா **2,512,200/-**

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் தொகை | பரிசுத் தொகை(ரூ.) | மொத்தப் பரிசுத் தொகை(ரூ.) |
|---|---|---|---|
| 1 இல | 346,034 | 10 | 3,460,340 |
| 2 இலக்கங்கள் | 31,786 | 20 | 635,720 |
| 1 இல + லக்கினம் | 31,614 | 30 | 948,420 |
| 2 இல + லக்கினம் | 2,851 | 100 | 285,100 |
| 3 இலக்கங்கள் | 850 | 500 | 425,000 |
| 3 இல + லக்கினம் | 81 | 5,000 | 405,000 |
| 4 இலக்கங்கள் | 04 | 100,000 | 400,000 |
| 4 இல + லக்கினம் | - | 1,739,200 | - |
| மொத்தம் | 413,220 | - | 6,559,580 |

மொத்தப் பரிசுத் தொகை ரூபா.6,559,580/-

தொடர் இல. 5431415க்கு மேற்பட்ட சிவப்பு நிற டிக்கட்டுகள் 2004 ஜனவரி 09ம் திகதி வெள்ளிக்கிழமை செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

அபிவிருத்தி அதிர்ஷ்ட சீட்டிழுப்பில் பணப்பரிசு வெற்றி பெறாத டிக்கட்டுகளில் முச்சக்கர வண்டி வெற்றி பெறும் 5 டிக்கட்டுகளின் தொடர் இலக்கங்கள்

**4453672-8-46**
**4459021-3-71**
**4455216-2-77**
**4450660-6-25**
**4447348-2-64**

வளமான வாழ்விற்கு

அபிவிருத்தி லொத்தர் சபை
இல. 33, சென்ற் மைக்கல் வீதி,
கொள்ளுப்பிட்டி, கொழும்பு 3.

யாழ்ப்பாணத்தில் : விநியோகஸ்தர்,
34, கந்தப்பசேகரம் வீதி,
(பஸ் நிலையம் முன்பாக), யாழ்ப்பாணம்.

PHOENIX O&M

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



புங்குடுதீவு, 7ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் யாழ்ப்பாணம், பிறவுண் றோட், நீராவியடியை வசிப்பிடமாகவும் கொண்ட

**உயர்திரு. எஸ். கே. சண்முகலிங்கம அவர்கள்**
*(புங்குடுதீவு ஸ்ரீ கணேச மகாவித்தியாலய அதிபர்)*

வயதில் பொன்விழாவையும் ஆசிரியர், அதிபர் தொழிலிலும் கூட்டுறவுச் சேவையிலும் வெள்ளி விழாவையும் காண்கின்ற வேளையில் பிறந்த மண்ணுக்குச் செய்த சேவைக்காக நீதி அமைச்சினால் அகில இலங்கை சமாதான நீதிவானாக நியமனம் கிடைத்தமையையிட்டு அவரைப் பாராட்டி வாழ்த்துவதோடு, அவர்களது பொதுச்சேவை மேன் மேலும் வளர்ந்து சிறப்புற எல்லாம்வல்ல இறைவனை வேண்டுகின்றோம்.

*99, பிறவுண் றோட்,*
*யாழ்ப்பாணம்.* திருமதி கனகம்மா தளையசிங்கம்.
(26918)(14-16-32)

## வெள்ளி விழா நாயகரை வாழ்த்துகின்றோம்



**திரு. க. சி. பகவத்சிங்கம்**
அதிபர் (S.L.P.S.2:I)
யாழ். நவக்கிரி அ.மி.த.க.பாடசாலை

இன்று (08.01.2004)இல் தனது சேவையில் 25 வருடங்களை நிறைவுசெய்யும் அதிபர் திரு.க.சி.பகவத்சிங்கம் அவர்களை தனது சேவையில் மேலும் பல உயர்வுகளைப் பெற்று பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகின்றோம்.

*யாழ்.நவக்கிரி அ.மி.த.க.*
*பாடசாலை,*
*புத்தூர்.* (26924)(14-16-32)
ஆசிரியர்கள், மாணவர்கள், பா.அ.சங்கம்.

## நன்றி நவில்கின்றோம்

எமது குடும்பத் தலைவரான

### தம்பையா சின்னத்துரை

அவர்கள் கடந்த 01.01.2004வியாழக்கிழமை இறைபதமடைந்தார். அவருக்கு ஆரம்பகாலம் முதலாக இறுதி நேரம் வரை நேரம் பார்க்காமல அளப்பரிய சேவை செய்து சிறந்த வைத்திய சிகிச்சை அளித்த துர்க்கா கிளினிக் டாக்டர் அவர்களுக்கு முதற்கண் எமது நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

அத்துடன், அன்னாரது இறுதிச் சடங்கின் போது பல வழிகளிலும் உதவியவர்களுக்கும் கண்ணீர் அஞ்சலி வெளியிட்ட லிங்கம் ஸ்ரோர்ஸ், பிள்ளையார் அரிசி ஆலை ஊழியர்கள் மற்றும் கனடா சுதுமலை மக்கள் ஒன்றியம், நாவலர் பாடசாலை, சுதுமலை ஈஞ்சடி ஞானவைரவர் தேவஸ்தான தர்மகர்த்தா சபை, நாவலர் சனசமூக நிலையம், நாவலர் விளையாட்டுக் கழகம் ஆகியோருக்கும் மற்றும் தபால், தந்திமூலமும் தொலைபேசி மூலமும் எமக்கு ஆறுதலும் தேறுதலும் அனுதாபமுமளித்த அன்பர்கள், நண்பர்கள் அனைவருக்கும் எமது நெஞ்சம் நெகிழ்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

*சுதுமலை வடக்கு,*
*மானிப்பாய்.* (26919)(14-16-32) திருமதி சின்னத்துரை குடும்பம்.

## மரண அறிவித்தல்கள்

### திருமதி செல்லம்மா முத்துக்குமாரு

கோயில் கடவை, துன்னாலை மத்தி கரவெட்டியைச் சேர்ந்த திருமதி செல்லம்மா முத்துக்குமாரு அவர்கள் நேற்று (07.01.2004) புதன்கிழமை சிவபதம் அடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சந்திரசேகரம் - சின்னப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மகளும் ஓய்வுபெற்ற மதுவரி உத்தியோகத்தர் முத்துக் குமாருவின் அன்பு மனைவியும் செல்வக்குமாரி (ஜேர்மனி), விமலகுமாரி, சாந்தகுமாரி (ஆசிரியை, யா/ஞானசாரியார் கல்லூரி), சிவகுமார் (ஜேர்மனி), சந்திரகுமார் (ஜேர்மனி), நந்தகுமாரி, வசந்தகுமாரி (லண்டன்) ஆகியோரின அன்புத் தாயாரும் தெய்வேந்திரன் (ஜேர்மனி), வல்லிபுரம் (ஆசிரியர், யா/அல்வாய் சின்னத்தம்பி வித்தியாலயம்), சண்முகேஸ்வரன் (தாதிய உத்தியோகத்தர், யாழ்.போதனா வைத்தியசாலை), மண்டலேஸ்வரி (ஜேர்மனி), ரஜனி (ஜேர்மனி), குணசேகரம் (ஆசிரியர், யா/புற்றளை மகாவித்தியாலயம்), விஷ்ணுகுமார் (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமியாரும் அகல்யா, அஸ்வினி, அகிலன், கோபிதரன், சிந்துயா, அபிநஜா, பானுஜன், பிரவீன்குமார், பிரதீப்குமார், சந்தியா, சாரண்யா, பபிதா, விஷ்வா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் காலஞ்சென்ற திருமதி கமலம்மா தனபாலசிங்கம், காலஞ்சென்ற பஞ்சலிங்கம், திருமதி சிவபாக்கியம், வரவாகு (ஓய்வுபெற்ற ஆசிரியர்) ஆகியோரின் அன்புச் சகோதரியும் காலஞ்சென்றவர்களான இராமநாதன், இராமசிப்பிள்ளை ஆகியோரின் அன்பு மருமகளும் மயில்வாகனம் (ஓய்வுபெற்ற பொலீஸ் உத்தியோகத்தர்), காலஞ்சென்ற மகேஸ்வரி, இராஜசிங்கம (கனடா), செல்வவிநாயகம் (ஓய்வுபெற்ற உத்தியோகத்தர், உணவுக் கட்டுப்பாட்டுத் திணைக்களம்), சிவலிங்கம் (பொறுப்பதிகாரி, துறைமுகம் -பருத்தித்துறை), திருமதி சிவயோகம் சிவலிங்கம் (நோர்வே), அமிர்தலிங்கம் (கனடா), திருமதி இராஜேஸ்வரி பாலசுப்பிரமணியம் ஆகியோரின் அன்பு மைத்துனியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 11.01.2004 ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 மணிக்கு நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக வேரகொண்றை மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*கோவிற்கடவை,*
*துன்னாலை மத்தி, கரவெட்டி.* (26929)(36-14-16-32)
தகவல்: இ.முத்துக்குமாரு (கணவர்)

### திருமதி கந்தையா கனகம்மா

பாலாவி தெற்கு, கொடிகாமத்தைச் சேர்ந்த திருமதி கந்தையா கனகம்மா அவர்கள் நேற்று (07.01.2004) புதன்கிழமை காலமானார்.

அன்னார் வைரவி கந்தையா (ஓய்வுபெற்ற ஆசிரியர், கச்சாய் அ.த.க. பாடசாலை) அவர்களின் அன்பு மனைவியாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (08.01.2004) வியாழக்கிழமை அவரது இல்லத்தில் மு.ப.11.00 மணிக்கு இடம்பெற்று வித்துடல் தகனக கிரியைக்காக பி.ப 1மணிக்கு பாலாவி பெரியசுட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை எமது உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*பாலாவி தெற்கு,*
*கொடிகாமம்.* (சி-32647)(14-16-32)
தகவல்: வ.வடிவேலு குடும்பத்தினர்.

பொது சன நூலகம் யாழ்ப்பாணம்

# கூரை பிரித்துத் திருட முயன்றவர்கள் அயலவர் உதவியுடன் மடக்கிப் பிடிப்பு

தெல்லிப்பழை,ஜன.8

வீட்டுக்கூரையினைப் பிரித்து நள்ளிரவில் வீடொன்றிற்குள் புகுந்து திருட முற்பட்டனர் என்று கூறப்படும் இருவர் அயலவர்களின் உதவியுடன மடக்கிப்பிடிக்கப்பட்டுள்ளனர்.

வசாவிளான் குட்டியபுலம் பகுதியிலுள்ள கி.செல்வராசா என்பவரது வீட்டினுள்• கடந்த 30ஆம் திகதி நுழைந்த நபர்களே மடக்கிப்பிடிக்கப் பட்டுள்ளனர்.

வீட்டார் ஆழ்ந்த நித்திரையில் இருந்த சமயம் கூரை ஓடுகளைக் கழற்றி வீட்டினுள் இறங்கியுள்ளனர். உறக்கத்திலிருந்த ஒருவர் திடீரென விழித்துக்கொண்டு கூச்சலிட்டதைத் தொடர்ந்து அயல்வர்களின் துணையுடன் அவர்கள் மடக்கிப் பிடிக்கப் பட்டனர்.

பொதுமக்களால் நையப்புடைக்கப்பட்ட இவர்கள் நீர்வேலி அரசியற் துறையினரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர். (ம-150)

# பிராந்திய ஒத்துழைப்புக்கு சார்க் நாடுகள் இணக்கம்

## இஸ்லாமாபாத் மாநாட்டு நிறைவில் பிரகடனம்

இஸ்லாமாபாத்,ஜன.8

சார்க் நாடுகளுக்கிடையிலான பிராந்திய ஒத்துழைப்பைப் பலப்படுத்தும் தெற்காசிய சுதந்திர வர்த்தக ஒப்பந்தம் செய்து கொள்ளப்பட்டதையடுத்து மூன்று நாள் சார்க் உச்சி மாநாடு நேற்றுமுன்தினம் நிறைவுபெற்றது.

பிராந்திய ஒத்துழைப்பிற்கான மூன்று பத்திரங்களில் சார்க் நாடுகளின் வெளிவிவகார அமைச்சர்கள் கையெழுத்திட்டனர். இக்கையெழுத்து நிகழ்ச்சியைப் பார்த்துக்கொண்டிருந்த சார்க் நாடுகளின் தலைவர்கள் கைகளைத் தட்டி அதை வரவேற்றனர்.

2006ஆம் ஆண்டு முதல் சுதந்திர வர்த்தக ஒப்பந்தத்தை நடைமுறைக்கு கொண்டுவருவதெனத் தீர்மானிக்கப் பட்டிருக்கிறது. இந்த ஒப்பந்தத்தின் கீழ் பாகிஸ்தான், இந்தியா, இலங்கை ஆகியவை முதல் ஏழு ஆண்டுகளுககுள் தீர்வைகளை பூஜ்யம் முதல் 5 சதவீதத்துக்கு இடைப்பட்ட விகிதத்தில் குறைக்கவிருக்கின்றன.

பங்களாதேஷ், நேபாளம், பூட்டான், மாலைதீவு என்பன 10 ஆண்டுகளில் இந்த நடைமுறையைப் பூர்த்தி செய்ய வேண்டும்.

பயங்கரவாதத்தை எதிர்த்துப் போராட ஒரு திட்டத்தை வரைவதெனவும் இந்த நாடுகள் இணங்கியுள்ளன. (ம)

# நெருப்புக் காய்ச்சலால் பீடிக்கப்படுவோர் எண்ணிக்கை குடாநாட்டில் அதிகரிப்பு

யாழ்ப்பாணம்,ஜன.8

குடாநாட்டில் தற்போது நெருப்புக்காய்ச்சலால் பீடிக்கப்படுபவர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருகிறது என்று சுகாதார சேவைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது. இதனால், மக்களை விழிப்புடன் இருக்குமாறு யாழ்.சுகாதாரச் சேவைகள் மாகாண பிரதிப் பணிப்பாளர் கே.ரி.சிவபாதம் அறிவுறுத்தியுள்ளார்.

இந்த வருடம் ஆரம்பித்து மூன்று நாள்களுக்குள் மட்டும் நெருப்புக் காய்ச்சலுக்கு உள்ளான 10பேருக்கு மேல் யாழ்.வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர் என்றும் அவர் சொன்னார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது:-

கடந்த ஆண்டின் இறுதிப் பகுதியில் ஏற்பட்ட காலநிலை மாற்றத்தினாலும் சுகாதாரப் பிரச்சினைகளினாலும் இந்த நோயின் தாக்கம் கூடுதலாக இருந்தது. சுகாதாரப் பிரச்சினைகள் தொடர்ந்தால் இந்த ஆண்டில் இந்த நோய் தீவிரமாகலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

குடாநாட்டில் கடந்த ஆண்டு மட்டும் இந்நோய்க்கு 575 பேர் இலக்காகியுள்ளதாகப் புள்ளி விவரங்கள் மூலம் தெரிய வருகின்றது.

மக்கள் உணவு, குடிதண்ணீர் என்பனவற்றில் மிகவும் அவதானமாக இருத்தல் வேண்டும். அத்துடன், சமையல் உணவு மற்றும் குடிதண்ணீர் என்பனவற்றினை உடனுக்குடன் சுட வைத்துப் பாவனைப்படுத்த வேண்டும்.

சாதாரண காய்ச்சலுக்கான அறிகுறிகள் தென்படுமாயின் அல்லது உடலில் எரிவுகள் ஏற்படுமாயினும் வைத்தியசாலைகளை அணுகி உடனுக்குடனான சிகிச்சையினை பெற்றுக் கொள்ளுதல் மிகவும் அவசியமானது என்று அவர் மேலும் தெரிவித்தார். (ம-6)

# கடந்த பல ஆண்டுகளை விடவும் 2003இல் மலேரியா தாக்கம் குறைவு

## சுகாதாரசேவை மாகாண பிரதிப் பணிப்பாளர் தகவல்

யாழ்ப்பாணம், ஜன.8

கடந்த பல வருடங்களின் பின்னர் 2003ஆம் ஆண்டு மலேரியா நோயின் தாக்கம் குடாநாட்டில் குறிப்பிடத்தக்களவு கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டுள்ளதாக சுகாதார சேவைகள் மாகாண பிரதிப்பணிப்பாளர் கே.ரி.சிவபாதம் தெரிவித்துள்ளார்.

**குடாநாட்டில் கடந்த 98 ஆம் ஆண்டு முதல் மலேரியா நோயினால் பீடிக்கப்பட்டவர்களின் விவரங்கள்:**

| ஆண்டு | சாதாரண மலேரியா | மூளை மலேரியா | கலப்பு மலேரியா | பாதிக்கப்பட்டவர் தொகை |
|---|---|---|---|---|
| 1998 | 46,006 | 1,733 | 63 | 47,802 |
| 1999 | 32,075 | 234 | 16 | 32,915 |
| 2000 | 6,997 | 234 | 11 | 7,242 |
| 2001 | 1,159 | 200 | 6 | 1,365 |
| 2002 | 1,419 | 401 | 9 | 1,829 |
| 2003 | 377 | 33 | - | 410 |

மலேரியா நோய் பரம்பலைக் கட்டுப்படுத்த மேற்கொள்ளப்பட்ட தீவிர நடவடிக்கைகளை அடுத்தே, இந்த நிலை ஏற்பட்டுள்ளது என்றும் அவர் சொன்னார்.

கடந்த பல ஆண்டுகளை விட 2003ஆம் ஆண்டு மலேரியா நோயினால தாக்கப்பட்டோரின் எண்ணிக்கையில் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது. கடந்த ஆண்டு 410பேர் மட்டுமே மலேரியா நோய்த் தாக்கத்திற்கு உள்ளாகியுள்ளனர். இந்த எண்ணிக்கை 2000ஆம் ஆண்டு அதி உச்சத்துக்குச் சென்றிருந்தது. 2001, 2002ஆம் ஆண்டுகளிலும் அது அதிகரித்த நிலையிலேயே இருந்தது.

சுகாதார உத்தியோகத்தர்களினால் மேற்கொள்ளப்பட்டுவரும் மலேரியா தடுப்பு மருந்து தெளிப்பு, தாய் சேய்களுக்கான மருந்தில் கழுவப்பட்ட நுளம்பு வலைகள் வழங்கப்பட்டமை மற்றும் ஏனைய சுகாதார நடவடிக்கைகளாலேயே மலேரியா நோய்த் தாக்கத்தைக் குறைக்க முடிந்துள்ளது என்று பணிப்பாளர் மேலும் தெரிவித்தார்.

# பல்கலைக்கழக அனுமதி மாவட்ட கோட்டாவில் வெட்டு ஏன்?

நீண்ட தொடர்ச்சியான அவல வாழ்க்கை நிறைந்த யுத்தகாலத்தில் கூட யாழ்.மக்கள் கட்டிக்காத்து வந்த பெருஞ்செல்வம் அவர்களது கல்விப் பாரம்பரியம்தான். ஆனால், காலத்துக்குக் காலம் அந்தக் கல்விச் செல்வத்துக்கு சாவுமணி அடிக்கும் நோக்கமாக தொடர்ச்சியாக பல நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வந்துள்ளன.

அவற்றின் உச்சக்கட்டமாக யாழ். மாணவர்களின் பல்கலைக்கழக அனுமதியில் மேற்கொள்ளப்படும் சுரண்டல்கள் யாழ் கல்விச் சமூகத்தைப் பெரும் அதிர்ச்சிக்கு உள்ளாக்கியுள்ளது. கடந்த ஆண்டில் அதாவது 2002/2003 (A) கல்வியாண்டில் யாழ். மாணவர்களின் பல்கலைக்கழக அனுமதிக்கான மாவட்டக்கோட்டா எண்ணிக்கையில் பெருங்குறைப்பு பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் மேற்கொள்ளப்பட்டது. இதனால், அனைத்து துறைசார்ந்த மாணவர்களும் பாதிக்கப்பட்டுள்ளனர். ஆனால், விழித்துக்கொண்ட ஒட்டுமொத்த யாழ். கல்விச் சமூகம் எடுத்துக்கொண்ட அயராத முயற்சியும் தமிழ் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களின் தொடர்ச்சியான ஒத்துழைப்பும் பாதிக்கப்பட்ட மாணவர்களுக்குப் பல்கலைக்கழக அனுமதியைப் பெற்றுத்தந்தன.

குறிப்பிட்ட கற்கைநெறி ஒன்றிக்கு மாணவர்கள் தெரிவு செய்யப்படும் விதமானது பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் பல்கலைக்கழக அனுமதிக்கான முதற்பத்திரக் கைநூலில் (First Form) பின்வருமாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

"1) தீவளாவிய திறமையின் (Merit) கீழ் 40%

2) மாவட்ட கோட்டாவின் (Quota) கீழ் 55%

3) கல்வியில் பின்தங்கிய மாவட்டத்திற்கான அனுமதியின் (Educationally disatrandanged district) கீழ் 5%

ஒரு குறிப்பிட்ட கற்கை நெறிக்கு மாணவர்களைத் தெரிவு செய்யும் போது மேலே (2), (3) இன் கீழ் ஏதாவது ஒரு மாவட்டத்திற்கு ஒதுக்கப்படும் இடங்கள் அடிப்படைக் கல்வியாண்டான 1993/1994 இல் ஒதுக்கப்பட்ட இடங்களைவிட குறையாதவாறு உறுதிசெய்யப்படும். இதற்கமைவாக (2), (3) என்பன ஒரு குறிப்பிட்ட மாவட்டத்தின் சனத்தொகை வீதத்திலும் குறித்த துறைக்கான மொத்த அனுமதியிலும் மட்டுமே தங்கியுள்ளது. யாழ். மாவட்டத்தில் சனத்தொகைக் கணக்கெடுப்பு நடைபெறாததால் (2), (3) இல் தெரிவாகும் மாணவர் எண்ணிக்கை குறிப்பிட்ட கற்கை நெறிக்கான மொத்த அனுமதியில் மட்டுமே தங்கியுள்ளது. மேலதிகமாக தெரிவானோரின் எண்ணிக்கை அதிகமாகக் காணப்பட்டாலும் யுத்த சூழ்நிலை தொடர்ந்தாலும் பல இடர்களை யாழ். சமூகம் எதிர்கொண்டதாலும் இவ்விடயத்தில் யாழ். கல்விச்சமூகம் வாழாவிருந்தது.

இதனை தனக்கு சாதகமாகப் பயன்படுத்திய பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு தொடர்ந்து வந்த காலங்களில் பல்கலைக்கழக அனுமதியில் அதிகரிப்பு என்ற மாயத் தோற்றத்தை உண்டுபண்ணி பல்கலைக்கழக அனுமதிக்கான மாவட்ட கோட்டா எண்ணிக்கையை குறைத்துக் கொண்டே வந்துள்ளது.

1993/1994 இல் யாழ்ப்பாணம் கல்வியில் பின்தங்கிய மாவட்டமாக அறிவிக்கப்படவில்லை. எனினும், தற்காலத்தில் பின்தங்கிய மாவட்டமாகவே அறிவிக்கப்பட்டுள்ளது. பின்தங்கிய மாவட்டமாக அறிவிக்கப் பட்டபின் உண்மையில் மாவட்ட கோட்ட அனுமதியும் பின்தங்கிய மாவட்ட கோட்டா அனுமதியும் சேர்த்து 42 இலும் அதிகமாகவே காணப்பட வேண்டும். எனினும், அது இவ்வாறு நிகழவில்லை.

**யாழ். மாவட்டத்தில் பொறியியல் துறைக்கு அனுமதி பெற்ற மாணவர்களின் சதவீதம் (கோட்டரீதியாக)**

| ஆண்டு | உண்மையாக எடுக்கப்பட்டது | எண்ணிக்கை அடிப்படையில் எடுக்கவேண்டியது | சதவீத அடிப்படையில் எடுக்கவேண்டியது | இலங்கை முழுவதற்குமான மாவட்ட கோட்டா எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| 1993/1994 | 42 | 42 | 42 | 485 |
| 1994/1995 | 23 | 42 | 39 | 452 |
| 1999/2000 | 34 | 42 | 45 | 521 |
| 2000/2001 | 33 | 42 | 49 | 571 |
| 2001/2002 | 34 | 42 | 51 | 584 |
| 2002/2003 | 36 | 42 | 50 | 577 |
| 2002/2003(A) | 37 | 42 | 50.1 | 580 |
| 2003/2004 | 27 | 42 | 50.1 | 580 |

1993/1994 பொறியியல் பீடத்திற்கு மொத்த அனுமதி - 698. யாழ்ப்பாண மாவட்ட கோட்டா 42. எனவே, மாவட்ட கோட்டா இதைவிடக் குறையாது பேணப்பட வேண்டும். ஆனால், இம்முறை யாழ். மாவட்ட கோட்டா 27.

- இவ்வாறு தொடர்ச்சியாக படிப்படியாக மேற்கொள்ளப்பட்டு வரும் குறைப்பினை பின்வரும் அட்டவணை காட்டுகின்றது.

- இவ்வாறு தொடர்ந்து வரும் கல்வியாண்டுகளில் மாவட்டக் கோட்டா எண்ணிக்கையில் குறைப்பு மேற்கொள்ளப்பட்ட நிலையிலும் தீவளாவிய (Merit) திறமையினடிபபடையில்

இவ்வருடம் பொறியியல் துறையுடன் சேர்த்து பௌதிக விஞ்ஞானத்துறையிலும் பெரும்பாதிப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளது.

தமிழ் மாணவர்களின் கல்வி திட்டமிட்ட வகையில் புறக்கணிக்கப்படுவதை ஏற்றுக்கொள்ள முடியாது. இது தொடர்பாக அனைத்துத் தரப்பினரும் கவனத்தில் கொண்டு பாதிக்கப்பட்ட மாணவர்களிற்கு நீதியான தீர்வு கிடைக்க முயற்சிக்க வேண்டும். ✪

# மாகாண உள்ளூராட்சி சபைகளின் தகவல் தொடர்புகள் ஒருங்கிணைப்பு

## அதிகாரிகளை நியமிக்கவும் பணிப்பு

வடக்கு - கிழக்கு மாகாண உள்ளூராட்சி சபைகளின் தகவல் தொடர்புகளை ஒருங்கிணைப்பதற்குரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளன. இதற்கென ஒவ்வொரு உள்ளூராட்சி சபைகளிலும் இரு அதிகாரிகள் வீதம் 72அதிகாரிகள் நியமனம் செய்யப்படவுள்ளனர்.

இதற்கான அறிவித்தலை உள்ளூராட்சி ஆணையாளர் தெ.து விஜயலட்சுமி விடுத்துள்ளார்.

உள்ளூராட்சி சபைகளின் வளர்ச்சி - அபிவிருத்தி செயற்பாடுகளை ஒருங்கிணைத்துச் செய்வதற்கு வசதியாக இந்த ஏற்பாடு மேற்கொள்ளப் படவுள்ளது.

உள்ளூராட்சி சபைகளின் செயலாளர் ஒருவரையும் மற்றும் அதற்கிணையான தரத்தில் உள்ள அலுவலர்களையும் இதற்கென நியமனம் செய்து 10ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்குமாறு ஆணையாளா உள்ளூராட்சி சபைகளுக்கு அறிவித்துள்ளார்.

இதற்கான படிவங்கள் அனைத்தும் உள்ளூராட்சி சபைகளின் செயலாளர்களுக்கு அனுப்பி வைக்கப் பட்டுள்ளன. படிவத்தில முழுப்பெயர், பதவி, தொலைபேசி இலக்கம், கல்வித் தகைமை, தொடர்புகொள்ளும் விலாசம் என்பன கோரப்பட்டுள்ளன. (ம-185)




நோர்வேயில் இருந்து வருகை தந்த போரூட் நிறுவனத்தின் உயர் அதிகாரிகள் அடங்கிய குழு ஒன்று அண்மையில் கரணவாய் செல்வாபுரம் இளங்கோ சனசமூக நிலையத்திற்கு விஜயம் செய்து தமது கிராமிய மேம்பாட்டுத்திட்ட வேலைகளைப் பார்வையிட்டது.

திட்ட இணைப்பாளர் ரொனி போரூட் உயர் அதிகாரி மோர்ரீன், யாழ்.திட்ட முகாமையாளர் மற்றும் பயனாளிகள் படத்தில் காணப்படுகின்றனர்.

*(படம்: அச்சுவேலிச் செய்தியாளர்)*

# அரசாங்கம் போரைத்திணித்தால் தமிழர் தாயகம் மலர்வது நிச்சயம்

## தங்கவேலாயுதபுரம் விழாவில் சந்திரநேரு எம்.பி

அக்கரைப்பற்று, ஜன.8

இன்றைய சூழ்நிலையில் மீண்டும் ஒரு யுத்தம் வருமா என்ற துடிப்பு மக்கள் மத்தியல் எழுந்துள்ளது. தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரன் இனியொரு யுத்தம் வராது என்று உறுதியளித்துள்ளார். ஆனால், அரசு போரைத் திணித்தால் விடுதலைப் புலிகள் அதற்கு முகம் கொடுத்து போரை வெற்றியாக முடித்து வைப்பார்கள். தமிழ் மக்களுக்கும் நிரந்தர விடிவு பிறக்கும்; தமிழர் தாயகமும் உருவாகும்.

- இவ்வாறு அம்பாறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் அ.சந்திரநேரு தெரிவித்தார்.

திருக்கோயில் பிரதேச செயலகப் பிரிவிலுள்ள மீள் குடியமர்வு கிராமமான தங்க வேலாயுதபுரம் அரசினர் தமிழ்க் கலவன் வித்தியாலய புதிய வகுப்பறைக் கட்டட திறப்பு விழாவில் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

கிழக்கு அபிவிருத்தி அமைச்சின கீழ் இயங்கும் உள்வாரியாக இடம் பெயர்ந்த மக்களுக்காக அவசர அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் 13 லட்சம் ரூபா செலவில் கட்டடம் அமைக்கப் பட்டுள்ளது.

அந்தக் கட்டடத்தை திறந்து வைத்த பின் நடைபெற்ற வைபவத்தில் உரையாற்றுகையில் அவர் மேலும் கூறியதாவது:-

போரினால் அழிந்து போன கிராமங்கள், பாடசாலைகளை மீளக் கட்டியெழுப்பி மீள் குடியேற்றங்கள் செய்யும் பணிகளுக்கு விடுதலைப் புலிகள் வழங்கி வரும் ஒத்துழைப்பு மக்களின் பால் அவர்கள் கொண்டுள்ள அக்கறையை தெளிவுபடுத்துகிறது.

அண்மையில் ஜனாதிபதி மூன்று அமைச்சுக்களைக் கையேற்றபோது நடைபெறவிருந்த அரசு மாற்றத்தைத தமிழர் கூட்டமைப்பு எம்.பிக்களே தடுத்து நிறுத்தினர். 15 கூட்டமைப்பு எம்.பிக்களும் பிரதமருக்கு எமது ஆதரவை எழுத்தில் கொடுத்தோம்

-இவ்வாறு அவர் கூறினார்.

விடுதலைப் புலிகளின் அம்பாறை மாவட்ட துணை அரசியல் பொறுப்பாளர் குயிலின்பன் பேசுகையில் கூறியதாவது:-

நாம் எமது சக்திக்கு மீறிய விலையைக் கொடுத்துள்ளோம். இன்னும் கொடுப்போம் அரசும், அரச படைகளும் தமிழ் மக்களையும், அவர்களது கல்வியையும் திட்டமிட்டுப் பாழாக்கின.

கிராமமக்கள் இரவோடிரவாக துரத்தப்பட்டு அகதிகளாக்கப்பட்டனர். பாடசாலைக்கட்டடங்கள், வீடுகள் அழிக்கப்பட்டன. எம்மிடம் இராணுவப் பலமே உள்ளது. அதனைக் கொண்டு எம்மால் தமிழ் மக்களைப் பாதுகாக்க முடியும்.

-இவ்வாறு கூறினார் அவர்.

மாருதி படையணி தளபதி சச்சு மாஸ்டர் பேசுகையில் -

யுத்தம் எம்மீது திணிக்கப்பட்டது. அந்தத் திட்டமிடப்பட்ட யுத்தத்தை நாம வெற்றி கொண்டோம். எம்மை அடக்கியாள நினைத்தார்கள். அது யுத்தமாக வெடித்தது. எமது மண்ணின் விடிவுக்காக மாவீரர்கள் சிந்திய இரத்தம் மக்களைக் காத்தது. மீண்டும் யுத்தம வந்தால் அதனை எதிர் கொள்ள நாம் பலம் வாய்ந்த நிலையில் இருக்கிறோம் என்றார்.

பாடசாலை அதிபர் .கே.தெய்வேந்திரன் தலைமையில் நடைபெற்ற இவ்வைபவத்தில் கௌரவ அதிதிக்ளாக அக்கரைப்பற்று வலயக் கல்வப் பணிப்பாளர் யூ.எல.எம்ஹாஷீம், பிரதேச செயல ாளர் ஏ.கே.தவராஜா ஆகியோர் கலந்துகொண்டனர்.

# சுகாதார ஊழியர்கள் இன்று பல இடங்களிலும் ஆர்ப்பாட்டம்

கொழும்பு,ஜன.8

சுகாதார ஊழியர்கள் தமது சம்பள முரண்பாட்டை நீக்கக் கோரி இன்று நாடு முழுவதிலும் உள்ள 500 நகரங்களில் ஆர்ப்பாட்டங்களை நடத்துவர். சம்பள முரண்பாட்டை நீக்கும்படி சுகாதார அமைச்சர் உட்பட பல்வேறு மட்டங்களில் பேச்சு நடத்தினோம். இருந்தும் சாதகமான தீர்வு இதுவரை கிடைக்கவில்லை. இந்தநிலையில் திறைசேரியுடன் நாளை 9 ஆம் திகதி பேச்சு நடைபெறவுள்ளது. இந்தப் பேச்சும் வெறும் தட்டிக்கழிப்பென்றே நாங்கள் கருதுகின்றோம். நாளைய பேச்சு அர்த்தமுள்ளதாக அமைய வேண்டும் என்று அழுத்தம் கொடுப்பதற்காகவே இன்று ஆர்ப்பாட்டம் செய்ய முடிவுசெய்தோம். இந்தப்பேச்சிலும் தீர்வு கிடைக்காவிட்டால் வேலை நிறுத்தம் மேற்கொள்வதைத்தவிர வேறுவழியில்லை என்றும் சுகாதார சேவை ஊழியர் சங்கங்களின் ஒன்றிய அழைப்பாளர் ரவி குமுதேஷ் தெரிவித்தார்.

### 25 ஆம் திகதி நள்ளிரவு முதல்

# ரயில்வே ஊழியர்களும் வேலை நிறுத்தத்துக்குத் தயார்

ரயில்வே திணைக்களம் அதிகார சபையாக மாற்றப்பட்டபோது அரசு வழங்கிய வாக்குறுதிகள் நிறைவேற்றப் படவில்லை எனக்கூறி, ரயில்வே ஊழியர்கள் எதிர்வரும் 25ஆம் திகதி நள்ளிரவு முதல் வேலை நிறுத்தத்தில் குதிக்கவுள்ளனர்.

ரயில்வே ஊழியர்களின் தொழிற் சங்கக் கூட்டுக்குழு இது குறித்து நேற்று அறிவித்தது. இந்தக்கூட்டுக் குழுவில் சுமார் 60 தொழிற் சங்கங்கள் அங்கம் வகிக்கின்றன.

ரயில்வே திணைக்களம் கடந்த ஜூலை மாதம் 23ஆம் திகதி அதிகார சபையாக மாற்றப்பட்டது. அப்போது ரயில்வே ஊழியர்களின் பிரச்சினைகளுக்குத் தீவுகாண, போக்குவரத்து அமைச்சர் ஒருமாத கால அவகாசம் கோரினார். ஆயினும், நான்கு மாதங்களுக்கு மேலாகியும் இதுவரை எமது பிரச்சினைகளை அமைச்சர் தீர்த்து வைக்கவில்லை.

எமது பிரச்சினைகளுக்கு உடனடியாகத தீர்வு காணப்படவேண்டும். அல்லது ரயில்வே அதிகார சபை பழையபடி ரயில்வேத் திணைக்களமாக மாற்றப்பட வேண்டுமெனக் கோரியே இந்த வேலை நிறுத்தத்தை ஆரம்பிக்கின்றோம் என்று ரயில்வே ஊழியர்தொழிற சங்கங்களின் கூட்டுக்குழுவின் அழைப பாளர் தெரிவித்தார்.

# காங்கிரஸ் மாவட்டக் கூட்டம் குறித்து கிருஷ்ணபிள்ளை எம்.பி.புறக்கணிப்பு!

## கட்சிக்கு எதிராக அவர் போர்க்கொடி

காத்தான்குடி,ஜன.8

காங்கிரஸ் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினரான எனக்கு எவ்வித அறிவித்தலுமின்றி கட்சியின் மாவட்டக கூட்டத்தைக்கூட்டியது பெரும்தவறாகும். இதனால், அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸ் சார்பில் அடுத்த தேர்தலில் போட்டியிடுவது குறித்து மீள்பரிசீலனை செய்யவேண்டியுள்ளது என்று மட்டக்களப்பு மாவட்ட தமிழ்க்காங்கிரஸ் நாடாளுமன்ற உறுப்பினர் ஞானமுத்து கிருஷ்ணபிள்ளை தெரிவித்தார்.

தமிழ்க்காங்கிரஸ், மட்டக்களப்பு மாவட்டக் குழுக் கூட்டத்தைக் கூட்டியுள்ளது அக்கூட்டத்திற்கு கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினரான கிருஷ்ணபிள்ளைக்கு அறிவிக்கப்படவோ, அழைப்பு விடுக்கப்படவோ இல்லை. அது குறித்து ஊடகங்களுக்குத் தகவல் அளித்த போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.தொடர்ந்து கருத்து தெரிவித்த அவர், வடக்கு-கிழக்கு மகாணத்தின் முழு நிர்வாகமுமே விடுதலைப் புலிகளிடமே உள்ளது. எதிர்காலத்திலும் அவ்வாறுதான் இருக்கும். எனவே, சகலவற்றையும் தீமானிக்கின்ற சக்திகளாகப் புலிகளே திகழ்வர் என்றார்.


**தேவை**

**தையல் வேலை தெரிந்த ஆண்கள் தேவை.**
தொடர்பு:
றூபா தையலகம்,
978, கே.கே.எஸ். றோட்,
நாச்சிமார்கோயிலடி.
(26927)



**MOVIMONDO**
**WALK IN INTERVIEW FOR ADMINISTRATOR**
Date:10 th of january
Time: 8.30 a.m to 11.30 p.m.
*Graduate in Management or CIMA
* Vety good knowledeg in MS Office
*Valid Driving Motor bike Licence
* Very good spoken and written in English
*30 years old
* Minimum 3 years Working experience
*Recommendation from 2 Non - Related References

Programme manager,
28, cathedral Road,
Jaffna. (021)2226089
(26926)(36-14-16)



**லக்ஷுமி சினிமா** இணுவில்
மாதவன், ஜோதிகா நடித்த
**பிரியமான தோழி**
காட்சி நேரம் : 10.30, 2.30, 6.30. (பு.நே.) (ரீலஸ்)
(C-32478)(32)

**லிபேட்டி** அச்சுவேலி
சிலம்பரசன், ராஜேந்தர், சர்மி நடித்த
**காதல் அழிவதில்லை** (ரீலஸ்)
தினசரி : 3.00, 7.00.
சனி, ஞாயிறு : 11.00, 3.00,7.00 (பு.நே.)
(C-32371) (32)

**நாகம்ஸ்** சுன்னாகம்

ஷாம், அருண்குமார், குட்டி ராதிகா, செந்தில் நடித்த
**இயற்கை**
தினசரி காட்சி : 11.00, 3.00. (பு.நே.) (ரீலஸ்)
வெள்ளி, சனி, ஞாயிறு இரவு 7 மணி
15 ஆம் திகதி முதல் கமல், அபிராமி, நெப்போலியன், நாசர் நடித்த
**விருமாண்டி (சண்டியர்)**

★ இந்தியாவிலும் இலங்கையிலும் ஒரே தின வெளியீடு
(C-31620)(32)

**நிறைஞ்சனாஸ்** சங்கானை
சூர்யா, ஜோதிகா நடித்த
**காக்க காக்க** (ரீலஸ்)
காட்சி நேரம்: 11.00, 2.45, 6.00 (பு.நே.)
வெள்ளி,சனி,ஞாயிறு
**KEOMA**
இரவு 8.45 இற்கு (பு.நே.)
(C-32370) (12)

**ராஜா** யாழ்ப்பாணம்

இளைய தளபதி விஜய், ஜோதிகா நடித்த
**திருமலை** (ரீலஸ்)
காட்சிகள் 10.30,2.30,6.30 (பு.நே.)
8ஆம் திகதிவரை.
அடுத்த வெளியீடு: கொஞ்சிப் பேசலாம்
(சி-32369) (32)


# கசிப்பு ஒழிப்பில் ஈடுபட்டோரை தாக்க முயன்ற நால்வர் கைதாகினர்

தெல்லிப்பழை, ஜன.8

கடந்த 28ஆம் திகதி ஊரெழு பொக்கனைப் பகுதியில் கசிப்பு அழிப்பில் ஈடுபட்டோரை ஆயுதக் கும்பல் ஒன்று வீடு புகுந்து தாக்க முயன்றமை தொடர்பாக நால்வரை சுன்னாகம் பொலீஸார் கைது செய்துள்ளனர்.

கசிப்பு ஒழிப்பில் ஈடுபட்ட சனசமூக நிலைய உறுப்பினர்களைத் தாக்க முயன்ற நால்வரைப் பொதுமக்களின் உதவியுடன் தாம் கைது செய்துள்ளதாக சுன்னாகம் பொலீஸார் தெரிவித்தனர். அவர்கள் இன்று மல்லாகம் நீதிமன்றில் ஆஜர்படுத்தப் படவுள்ளனர்.

இக்கைகலப்பு சம்பவத்தின் போது குறிப்பிட்ட குழுவினால் கைவிடப்பட்ட மோட்டார் சைக்கிளொன்றும் பொதுமக்களால் பொலீஸாரிடம் ஒப்படைக்கப் பட்டுள்ளது. இம் மோட்டார் சைக்கிளையும் பொலீஸார் நீதிமன்றத்தில் பாரப்படுத்தவுள்ளனர்.

(ம-150)

### ஐ.ரி. பார்க் பரீட்சைகள்

யாழ்ப்பாணம் தகவல் தொழில் நுட்பப் பூங்காவில் பயிற்சியை (DIPLOMA IN MS.OFFICE) நிறைவு செய்த மாணவர்களுக்கான பரீட்சைகள் யாவும் ஏற்கனவே அறிவிக்கப்பட்ட திகதிகளில் யாழ்.இந்துக் கல்லூரியில் அமைக்கப்பட்ட பரீட்சை நிலையத்தில் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

பரீட்சார்த்திகள் தமது அனுமதி அட்டையுடன் அடையாள அட்டையும் எடுத்து வருமாறும் பரீட்சைக்கான உறுதிப்படுத்தலை மேற்கொள்ளாத மாணவர்கள் இன்று வியாழக்கிழமை பயிற்சி முகாமையாளரைச் சந்திக்குமாறும் பணிப்பாளர் கேட்டுள்ளார்.

(ம-10)

### சாரணிய ஆசிரியர் கூட்டம்

சிறுதோழ் சாரணிய ஆசிரியர்களுக்கான கூட்டம் நாளை வெள்ளிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு யாழ்.மத்திய கல்லூரி ஆரம்பப் பாடசாலையில் நடைபெறவுள்ளதாக மாவட்ட ஆணையாளா அறிவித்துள்ளார்.

இந்தக் கூட்டம் யாழ்.இந்து ஆரம்பப் பாடசாலையில் நடைபெறும் என்று முன்னர் அறிவிக்கப்பட்டிருந்தது.

### ஜனாதிபதி இன்று நாடு திரும்புவார்

ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க, இஸ்லாமாபாத்திலிருந்து இன்று நாடு திரும்புவார்.

பாகிஸ்தானில் நடைபெற்ற 'சார்க' உச்சி மாநாட்டில் கலந்துகொள்ள ஜனாதிபதி, பாகிஸ்தானுக்கு மூன்று நாள் விஜயமொன்றை மேற்கொண்டிருந்தார்.

### படையினர் அனுமதி

தெல்லிப்பழை உயர் பாதுகாப்பு வலயத்திலுள்ள புற்றுநோய் வைத்தியசாலைக்குச் செல்லும் வீதியைப் புனரமைப்பு செய்வதற்கான அனுமதி படையினரால் வழங்கப்பட்டுள்ளது.

கடந்த மாத முற்பகுதியில் ஆரம்பிக்கப்பட்ட இவ்வீதித் திருத்த வேலைகள் படையினரின் அனுமதி மறுப்பையடுத்து இடைநிறுத்தப்பட்டமை தெரிந்ததே.

வீதி அபிவிருத்தி அதிகார சபையின் பிரதம பொறியியலாளர் ஜே. ஸ்ரீநிவாசன் இதற்கான அனுமதி கோரி பலாலி படைத் தலைமையகத்திற்கு கடிதம் ஒன்றை அனுப்பிவைத்திருந்தார்.

வீதி அபிவிருத்தி பணியில் ஈடுபட அனுமதிப்பதாக பலாலி படைத் தலைமையகம் பதில் கடிதம் ஒன்றை உரிய அதிகார சபைக்கு அனுப்பி வைத்துள்ளது.

(ம-150)

### வைத்திய சாலையில் சைக்கிள் திருட்டு

யாழ்ப்பாணம்,ஜன.8

யாழ். போதனாவைத்தியசாலையில் பணிபுரியும் சிற்றூழியர் ஒருவரின பெறுமதிவாய்ந்த சைக்கிள் ஒன்று நேற்று முன்தினமிரவு வைத்தியசாலை வளவினுள் இருந்து திருட்டுப் போயுள்ளது.

சிற்றூழியர் சச்சிதானந்தன் என்பவருடைய சைக்கிளே திருட்டுப்போயுள்ளது. அண்மைக் காலமாக சிற்றூழியர்களின் சைக்கிள்கள் காணாமற் போகும் நிகழ்வு ஒரு சாதாரணமாகி விட்டது என்று அவர்கள் தரப்பில் தெரிவிக்கப்படுகின்றது. இதற்கு முன்பும பல சிற்றூழியர்களின் சயிக்கிள்கள் திருட்டுப் போயுள்ளன. ஆனால் அதற்கு நிர்வாகமோ, பாதுகாப்பு உத்தியோகத்தர்களோ எந்தவித நடவடிக்கையும் மேற்கொள்ளவில்லை என்றும் அவர்கள் கூறுகின்றனர்.

காணாமற்போன சயிக்கிள்களுக்கு எந்த ஓர் இழப்பீடும் வழங்குவதில்லை எனவும் ஊழியர்களால் கவலை தெரிவிக்கப்படுகின்றது.

(ம-15)

# மரண அறிவித்தல்கள்

## அமிர்தவாசகம் தேவராசா

(ஓய்வு பெற்ற ஊழியர், காங்கேசன் சிமெந்துத் தொழிற்சாலை)

மல்வம், உடுவிலைப் பிறப்பிடமாகவும் சங்குவேலியை வதிவிடமாகவும் கொண்ட அமிர்தவாசகம் தேவராசா அவர்கள் நேற்று (07.01.2004) புதன்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான அமிர்தவாசகம் - அன்னப்பிள்ளையின் அன்பு மகனும் தேவமலர்(திரவியம்) அவர்களின் அன்புக் கணவரும் ராணிமலர், ஜெயராசா, புஸ்பராசா(சவூதி), ஜெயமலர், விஜயமலர், விஜயராஜா, புஸ்பமலர்(ஜேர்மனி), அன்ரனிராஜ் ஆகியோரின் பாசமிகு தந்தையாரும் துரைராஜா, செல்வராஜா, ஜேசுராஜா, சிலுவேத்திரி, யோகேஸ்வரி, இராஜேஸ்வரி, புவனேஸ்வரி, யோகராஜா ஆகியோரின் அன்புச் சகோதரரும் தேவசேனன், ஜெனோதாஸ்(டோகா), கட்சன்(ஜேர்மனி), ஆகியோரின் அன்பு மாமனாருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (08.01.2004) வியாழக்கிழமை பிற்பகல் 3.00 மணியளவில் சங்குவேலி இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் மல்வத்து திருக்குடும்ப மாதா கோயிலில் ஆராதனை இடம்பெற்ற பின்னர் மல்வம் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்
திருமதி தேவமலர்(திரவியம்)(மனைவி),
பிள்ளைகள், மருமக்கள்.

*சங்குவேலி வடக்கு,*
*மானிப்பாய்.* (26928)(36-14-16)

## சந்தானகிருஷ்ணன் சிவபாலன்

இணுவிலைப் பிறப்பிடமாகவும் துபாயை வசிப்பிடமாகவும் கொண்ட சந்தானகிருஷ்ணன் சிவபாலன் (04.01.2004) ஞாயிற்றுக்கிழமை துபாயில் காலமானார்.

அன்னார் மகாலக்ஷ்மியின் அன்புக் கணவரும் சந்தானகிருஷ்ணன்-ஸ்ரீரஞ்சனி ஆகியோரின் மூத்த புதல்வனும் சாயிலக்ஷமனின் பாசமிகு தந்தையும் சென்னை ராஜமாணிக்கம் செண்பகவல்லியின் அன்பு மருமகனும் சிவராம், சிவசங்கர், சிவகுமார்(ஆஸ்திரேலியா), ராஜீவலோஜனா (சவூதிஅரேபியா) ஆகியோரின் அன்புச் சகோதரனும் வசந்தன்(சவூதிஅரேபியா), மஹாலக்ஷ்மி, ரோஜநிர்மலா, துஷ்யந்தி(ஆஸ்திரேலியா) ஆகியோரின் அன்பு மைத்துனரும் சம்யுதாவின்(சவூதிஅரேபியா) அன்பு மாமனும் ராகுலின்(ஆஸ்திரேலியா) பெரிய தந்தையுமாவார்.

அன்னாரின் பூதவுடல் பொரளை ஜெயரட்ண மலர்ச்சாலையில் இன்று (08.01.2004) வியாழக்கிழமை காலை 10.00 மணிமுதல் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு மாலை 4.00 மணிக்கு இறுதிக்கிரியைகள் நடைபெற்ற பின்னர் கனத்தை பொதுமயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக் கொள்ளுகிறோம்.

தகவல்
ஆ.சந்தானகிருஸ்ணன் (தந்தை)

*மெற்றோதொடர்மாடி,*
*8 1/5 ,55 ஆவது ஒழுங்கை ,*
*வெள்ளவத்தை*
*T.P: 2362889* (சி.32646)(36-14-16)

பொது சன நூலகம்
யாழ்ப்பாணம்.

# இரண்டாவது போட்டியில் விளையாடுவேன் என்று எண்ணவில்லை என்கிறார் ஸ்டிவ்வோ



தனது குடும்பத்தினருடன் ஸ்டிவ்வோ

18 வருடங்களுக்கு முன்னர் எனது முதலாவது டெஸ்ட் போட்டியின் இரு இன்னிங்ஸ்களிலும் முறையே 13,5 ஓட்டங்களை மட்டுமே பெற்றேன். மற்றொரு டெஸ்ட் போட்டியில் விளையாட எனக்கு வாய்ப்புக் கிடைக்கும்என அப்போது நான் எண்ணவில்லை.

- இவ்வாறு சர்வதேச கிரிக்கெட்டிலிருந்து நேற்றுமுன்தினம் ஓய்வுபெற்ற ஸ்டிவ்வோ செய்தியாளர்களிடம் கூறினார்.

ஆஸ்திரேலியா கிரிக்கெட் அணித தலைவராக, கடைசி முறையாக செய்தியாளர்களுக்கு நேற்று முன் தினம் பேட்டி அளித்தார் ஸ்டிவ்வோ.

அப்போது அவர் மேலும் கூறியதாவது:-

'சர்வதேச கிரிக்கெட்டில் இருந்து ஓய்வுபெறும் இந்த நிமிடத்தில், எனது முதல் டெஸ்ட் போட்டியை நினைத்துப பார்க்கிறேன். அந்தப் போட்டியில் மிகக் குறைந்த ஓட்டங்களே என்னால் எடுக்க முடிந்தது.ஆனால், இப்போது 168 டெஸ்ட் போட்டிகளில் விளையாடி விட்டேன். இது எனக்குக் கிடைத்த மிகப் பெரிய வரம். என்மேல், எனது திறமை மேல் நம்பிக்கை வைத்து, இவ்வளவு நீண்டகாலம் அணியில் இடம்கொடுத்த ஆஸ்திரேலிய கிரிக்கெட் தேர்வாளர் களுக்கு நன்றி தெரிவித்துக்கொள்கின்றேன்.

அரங்கில் கூடியிருந்த ரசிகர்கள் அளித்த ஆரவாரம், தோளில் என்னை அமர வைத்து, எனது அணி வீரர்கள் மைதானத்தை வலம் வந்த நிமிடங்கள், சக வீரர்களின் பாராட்டுகள் முதலியவற்றால் இந்த நாளை என்னால் மறக்கவே முடியாது.

கிரிக்கெட்டில் இருந்து ஓய்வு பெற்று விட்டேன் என்பதை இந்த நிமிடத்தில் என்னால் நம்ப முடியவில்லை. ஒருவேளை, நாளை காலை நான் கண் விழிக்கும் போது, இந்த விஷயத்தை நான் உணரலாம். ஓய்வு பெறுவதில் எனக்கு கவலையோ, வருத்தமோ கிடையாது. மகிழ்ச்சியுடன் விடைபெறுகிறேன்.

உண்மையில் நான் மிகப்பெரிய அதிர்ஷ்டசாலி. என்னைவிட திறமை மிகுந்த பல வீரர்களுக்கு ஒரு டெஸ்ட் போட்டியில் ஆடும் வாய்ப்புக் கூடக் கிடைக்காமல் இருக்கும்போது நான் 168 போட்டிகள் விளையாடிவிட்டேன். இதுவே எனக்குப்போதும். திருப்தியாக நான் ஓய்வுபெறுகின்றேன்.

ஒவ்வொருவரும் ஏதாவது ஒரு காலத்தில் ஓய்வுபெற்றுத்தான் தீர வேண்டும். இதைவிட, சிறப்பான முறையில் ஓய்வுபெற எனக்கு வேறு சந்தர்ப்பம் கிடைத்திருக்காது. கிரிக்கெட்டில் எனது சாதனைகளைப் பாராட்டுகிறார்கள். எனது அணி வீரர்களே இதற்கு முக்கிய காரணம்.

இப்படி ஓர் அணிக்கு அணித் தலைவராக இருப்பதற்கு கொடுத்து வைத்திருக்க வேண்டும். எனது வீரர்களின் ஒத்துழைப்பு இல்லாமல் நான இந்த அளவுக்குப் புகழடைந்திருக்க முடியாது. அவர்களுக்கு எனது நன்றி.

அதேபோல, என்னை மிக உயரத்துக்கு வளர்த்ததில் பெரும் பங்கு ரசிகர்களுக்கு உண்டு. அவர்களின் ஆதர வில்லாமல், யாரும் வளர்ந்துவிட முடியாது. எனது மனைவி, குழந்தைகள், உறவினர்கள் மற்றும் நண்பர்கள் கிரிக்கெட்டில் நான் சாதிப்பதற்காக, அவர்கள் அளித்த ஒத்துழைப்பை குறிப்பிடாமல் இருக்கமுடியாது.

இந்தியாவுக்கு வாழ்த்துக்கள்!

இந்தத் தொடரில் மிகச் சிறந்த ஆட்டத்தை வெளிப்படுத்திய இந்திய அணியைப் பாராட்டியே தீர வேண்டும். அவர்களது துடுப்பாட்டத் திறமை அச்சுறுத்துகிறது. எனது வாழ்க்கையிலேயே, இப்படி ஒரு பலமான துடுபாட்ட அணி வகுப்பை இந்தத் தொடரில தான் முதல் முறையாகப் பார்க்கிறேன். கடந்த சில ஆண்டுகளாக இந்தியாவுக்கு எதிரான எங்கள் போட்டிகள் அதிக ஆர்வத்தைத் தூண்டுகின்றன.

இனிவரும் காலங்களில் இந்தியா, ஆஸ்திரேலியா இடையிலான போர்டர் - கவாஸ்கர் கிண்ணத் தொடர், ஆஷஸ் தொடருக்கு இணையான எதிர்பார்ப்பை நிச்சயம் ஏற்படுத்தும்.

இந்தத் தொடரில் அவர்கள் ஆதிக்கம் செலுத்தினார்கள் என்பதை ஏற்றுக்கொள்ள முடியாது. சமபலம் வாய்ந்த இரு அணிகளுக்கு இடையிலான போட்டிகளாக இந்தத் தொடர் அமைந்தது. சௌரவ் கங்குலிக்கும், இந்திய அணி வீரர்களுக்கும் எனது வாழ்த்துக்கள்."- இவ்வாறு ஸ்டிவ்வோ தெரிவித்தார்.





உ
சாமி சரணம்

## ஸ்ரீ ஐயப்ப யாத்திரையும் மஹாசக்தி பூஜையும்

இன்று (08.01.2004) வியாழக்கிழமை மாலை 3 மணிக்கு கந்தர்மடம் ஸ்ரீ செட்டியந்தாழ்வு ஞானவைரவர் ஆலயத்தில் மணிகண்ட பெருமானுக்கு 108 கலச அபிஷேகம், விசேட பூசை, படிப்பூசை பஜனைகள் நடைபெற்று இருமுடி கட்டும் வைபவமும் சக்தி பூசையும் நடைபெறும். 09.01.2004 வெள்ளிக்கிழமை காலை 6 மணிக்கு மணிகண்ட சபை யாத்திரை குழுவினர் சபரிமலைக்குச் செல்வார்கள்.

(அனைவரும் வருக மணிகண்டன் அருள்பெறுக)
சாமி சரணம்

ஸ்ரீ ஐயப்ப மணிகண்டசபை
நீராவியடி, யாழ்ப்பாணம்.

(26931)(30-14-16-32)

## HOME ECONOMIC CENTRE

புதிய வகுப்புகள் ஆரம்பம்
11.01.2004 ஞாயிற்றுக்கிழமை காலை 9மணி

கேக்ஐசிங், தலையலங்காரம், மணப்பெண் அலங்காரம்
தையல் கலை, சமையல்கலை, துணியில் வர்ணம் தீட்டுதல் (Fabric Painting), பூவேலை
கைவேலை (Hand Craft)
குறைந்த கட்டணம் நிறைந்த சேவை.
விவரங்களுக்கு நேரில் தொடர்பு கொள்ளவும்.

முக்கிய குறிப்பு

பழைய மாணவிகள் பரீட்சை சான்றிதழ வழங்கல் பற்றிய கலந்துரையாடலில் 10.01.2004 சனிக்கிழமை காலை 9.00 மணிக்கு கலந்துகொள்ளுமாறு கேட்கப்படுகின்றனர்.

41, இராஜவீதி,
நல்லூர், யாழ்ப்பபாணம்
(சட்டநாதர் கோவிலுக்கு முன்பாக)

நிர்வாகி
ரூபா சத்தியமூர்த்தி

(சி-32649)(32-14-16)



## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்
08
௦
12
௦
1925



மறைவு
20
௦
12
௦
2002

எமது குடும்பத் தலைவர்
**அமரர் சுந்தரம்பிள்ளை பாலசிங்கம்**
திதி: 08-01-2004

அமரத்துவமடைந்த எங்கள் அன்புத் தந்தையின் நினைவுகளுடனேயே என்றும் எமது வாழ் நாள்கள்...

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

திருமதி பத்மாவதி பாலசிங்கம் (மனைவி)
பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

33/2, கைலாசபிள்ளையார் கோயில் வீதி,
நல்லூர்,
யாழ்ப்பாணம்.

(26932)(32-14-16)

## திருத்தப்பட்ட விணாத்தாள்கள் கொழும்புக்கு

குருநகர், ஜன.8

யாழ்.மத்திய கல்லூரி, யாழ் வேம்படி மகளிர் கல்லூரி ஆகியவற்றில் நடைபெற்று வந்த ஜி.சீ.ஈ சாதாரண தரப்பரீட்சை விடைத்தாள் மதிப்பீட்டு வேலைகள் யாவும் கடந்த ஞாயிற்றுக்கிழமையுடன் நிறைவடைந்தன.

மதிப்பீடு செய்யப்பட்ட பரீட்சை விடைத்தாள்கள் யாவும் மறுநாள் திங்கட்கிழமை கொழும்பு பரீட்சைத் திணைக்களத்துக்கு அனுப்பி வைக்கப பட்டன என்று யாழ். வலயக் கல்வி அலுவலகம் தெரிவித்தது. (ஐ-51)

## கிளைக் கடை நிறுவ காணி அன்பளிப்பு

தென்மராட்சி கிழக்கு பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தினர் கரம்பைக குறிச்சி பகுதியில் 5லட்சம் ரூபா செலவில் புதிய கிளைக் கடைக்கான கட்டடத்தினை நிர்மாணிக்க வுள்ளனர்.

இக்கட்டடம் அமைப்பதற்கு கரம்பைக் குறிஞ்சி திக்கில் கந்தசுவாமி கோவில் பரிபாலன சபையின் இரண்டு ப்ரப்புக் காணியினை அன்பளிப்பாக வழங்கியுள்ளனர்.

காணி வழங்கியமைக்காக ஆலய திருப்பணிக்கு பத்தாயிரம் ரூபா வினை சங்க நிர்வாகம் வழங்கவுள்ளதாகத தெரிவிக்கப்பட்டது. இதேவேளை, அல்லாரை கிளைக கடையினைப் புனரமைக்கவென 2லட்சத்து 60 ஆயிரம் ரூபாவினை ஒதுக்கியுள்ளதாகவும் சங்க வட்டாரங்கள் தெரிவித்தன. (எ-117)

## பதவியுயர்வு

யாழ்ப்பாணம்,ஜன.8

யாழ்.போதனா வைத்தியசாலையில் பணிபுரியும் பரிசாரகர்களில் 37 பேர் விசேட பரிசாரகர்களாக பதவியுயர்வு பெற்றுள்ளனர்.

கடந்த காலங்களில் இப்பதவி உயர்வுகள் மிக அரிதாகவே வழங்கப்பட்டு வந்தன. தற்போதய வைத்திய சாலையின் நிர்வாகத்தின் துரித செயற பாடுகளினால் தற்போது இப் பதவி உயர்வுகள் உடனுக்குடன் கிடைக்கக் கூடியதாகவுள்ளது. 25 ஆண் பரிசாரகர்களும், 12 பெண் பரிசாரகா களும் இவ்வாறு பதவியுயர்வினைப பெற்றுள்ளனர். இவர்களுக்கு ஜனவரி முதலாம் திகதியிலிருந்து பதவியுயர்வு வழங்கப்பட்டுள்ளது. (எ-15)

## மருத்துவ உபகரணம் அன்பளிப்பு

தென்மராட்சி, ஜன.8

லண்டன் மற்றும் ஹொலண்ட் ஆகிய நாடுகளில் வசிக்கும் தென்மராட்சி மக்களால் அன்பளிப்புச் செய்யப்பட்ட மருத்துவ உபகரணங்கள் ஆழியவளை தியாகி திலீபன் மருத்துவமனைக்கு அண்மையில் வழங்கப் பட்டன. சாவகச்சேரி லயன்ஸ் கழகத தின் ஊடாக இந்த மருத்துவ உபகரணங்கள் வழங்கப்பட்டன என்று கழகத்தின் செயலாளர் தெரிவித்தார். (எ-117)

## மரண அறிவித்தல்கள்

### பொன்னுத்துரை நடராசா

நாவற்குழியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னுத்துரை நடராசா அவர்கள் 06.01.2004 செவ்வாய்க்கிழமை கொழும்பில் காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற பொன்னுத்துரை - கனகம்மா தம்பதிகளின் மகனும காலஞ்சென்ற இரத்தினேஸ்வரியின் அருமைக் கணவரும் யசிந்தாவின் பாசமிகு தந்தையும் சுதனின் அன்பு மாமனாரும் காலஞ்சென்ற பஞ்சாட்சரம் மற்றும திருஞானசம்பந்தனின் சகோதரரும் வாலாம்பிகை, குணராணி ஆகியோரின மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (08.01.2004) வியாழக்கிழமை கொழும்பில் நடைபெற்று, பூதவுடல் கனத்தை இந்து மயானத்தில் பி.ப. 2.00 மணிக்கு தகனஞ்செய்யப்படும்.இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இணுவில் மேற்கு,
இணுவில்.
(சி-32650)(14-16-32)
தகவல்:
ப.ஸ்ரீவரதன்

### சபாபதி இராசலிங்கம்

புங்குடுதீவு 12ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும், யாழ்ப்பாணம 10/213 சிவன் வீதி, திருநெல்வேலியை வதிவிடமாகவும் கொண்ட சபாபதி இராசலிங்கம் நேற்று (07.01.2004) புதன்கிழமை யாழில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சபாபதி - நாகம்மாவின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான செல்லத்துரை நாகபிள்ளை ஆகியோரின் மருமகனும் பரமேஸ்வரியின் அன்புக் கணவரும, சசிகலா (சுவிஸ்), சந்திரகலா, மதிரஜனி, பிரபாகரன், செந்தூரன் ஆகியோரின் அன்புத் தந்தையும், நாகேஸ வரன் (சுவிஸ்), சுரேஸ்குமார், ஜெசிந்தா ஆகியோரின் அன்பு மாமனாரும் முத்துலிங்கம், சண்முகலிங்கம், புவனேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரனும் சௌபாக்கியவதி, வீரசிங்கம், தவமணிதேவி ஆகியோரின் மைத்துனரும் அஜந்தன், ஜெயந்தன், லிதுசன் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (08.01.2004) வியாழக்கிழமை நடைபெற்று, பூதவுடல் மாலை 5 மணிக்கு கொக்குவில் இந்து மயானத்திற்கு தகனக்கிரியைக்காக எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

10/213, சிவன் வீதி,
திருநெல்வேலி.
(26933)(14-16-32)
தகவல்:
க.சுரேஸ்குமார் (மருமகன்).

### திருமதி கமலாம்பிகை விஜயகாந்தன் (இராஜேஸ்வரி)

யாழ்ப்பாணம், கந்தர்மடத்தைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் நைஜீரியாவில் வசித்தவரும் கனடா ஸ்காபரோவை வசிப்பிடமாகக் கொண்டவருமான திருமதி கமலாம்பிகை விஜயகாந்தன் (இராஜேஸ்வரி) அவர்கள் 05.01.2004 திங்கட்கிழமை அன்று ஸ்காபரோவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ராசா - செல்லம்மா தம்பதிகளின் செல்வப் புதல்வியும் காலஞ்சென்ற நாகலிங்கம் - திருமதி சிவயோகம் (கனடா) தம்பதிகளின் மருமகளும் நாகலிங்கம் விஜயகாந்தனின் (ஆசிரியர்) அன்பு மனைவியும் கனடாவில் வசிப்பவர்களான ராதிகா, ரோகினி, கிரண்யா, சாந்தினிகேதன், மாதினி, உமாபாலன் ஆகியோரின் அன்புத் தாயாரும் கனடாவில் வசிப்பவர்களான பிரபாகரன், கிருபாகரன், சிவகுமார், சலேந்திரன், விஜயலட்சுமி மற்றும் அபிராமி, ஜோதிலதா, கருணாகரன் (லண்டன்) ஆகியோரின் மாமியாரும் பாலச்சந்திரன் (கனடா), ரவிச்சந்திரன் (பிரான்ஸ்), கல்யாணி (லண்டன்) ஆகியோரின் சிறிய தாயாரும் பரமேஸ்வா தியாகராஜா (கனடா), சத்தியவான் (யாழ்ப்பாணம்), குணபாலசிங்கம் (யாழ்ப பாணம்) ஆகியோரின் சகோதரியும் நாகலிங்கம் தியாகராஜா (இ.போ.ச. முன்னாள் பொதுமுகாமையாளர்) அகிலேஸ்வரி, நடராஜா (லண்டன்), நாகேஸ்வரி புஸ்பராஜா (பிரான்ஸ்), சோமேஸ்வரி லோகநாதன் (பிரான்ஸ்), புவனேஸ்வரி நடராஜா (கனடா) ஆகியோரின் மைத்துனியும் யசோ, திலகா, ராசன், கருணா, வினோத் ஆகியோரின் மாமனாரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் 07.01.2004 புதன்கிழமை மாலை 5மணி முதல் இரவு 9 மணிவரை MIDLAND & SHEPPARD சந்திப்பில் 4164 SHEPPARD AVE EAST இல் அமைந்துள்ள OGDEN FUNERAL HOME இல் பார்வைக்கு வைக்கப்பட்டு, 08.01.2004 வியாழக்கிழமை காலை 10 மணியளவில் KINGSTON & WOODBINE அமைந்துள்ள ST. JOHN CEMETRY யில் இறுதிக்கிரியைகள் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள், அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றார்கள்.

416-267 9730
416-707 1596
416-723 7106

தகவல்:
இராசா குணபாலசிங்கம் குடும்பம்,
இராசா சத்தியவான் குடும்பம்.

# வெளிநாட்டிலிருந்து திரும்பியவரின் வீட்டில் பொருள்கள் கொள்ளை!

## திக்கம் பகுதியில் ஞாயிறு இரவு சம்பவம்

கரவெட்டி, ஜன.8

திக்கம் மானாண்டிச் சந்தைப் பகுதியில் உள்ள ஒரு வீட்டினுள் கடந்த ஞாயிற்றுக்கிழமை நள்ளிரவு புகுந்த திருடர்கள் அங்கிருந்து பணம், தங்க நகைகள், வீடியோ டெக் உட்பட பல லட்சம் ரூபா பெறுமதியான பொருள்களைச் சூறையாடியிருக்கின்றனர்.

நீண்டகாலம், வெளிநாட்டில் வசித்துவிட்டு சில தினங்களுக்கு முன்பு ஊருக்கு திரும்பியிருந்த ஒருவரது வீட்டிலேயே இந்தக் கொள்ளை இடம்பெற்றிருக்கிறது.

வெளிநாட்டில் இருந்து கொண்டு வந்த இலத்திரனியல் பொருள்களும் பெருந்தொகைப் பணம் மற்றும் நகைகள் என்பனவுமே அபகரிக்கப்பட்டிருக்கின்றன.

இருளோடு இருளாக வீடு புகுந்து பொருள்களை எடுத்துக்கொண்டு வெளியே வந்த திருடர்களை வீட்டுக்காரர் விழித்தெழுந்து தடுக்கமுற்பட்டபோது திருடர்கள் கத்திகளைக் காட்டி மிரட்டிவிட்டு பொருள்களோடு தப்பிச் சென்றிருக்கின்றனர்.

இந்தக் கொள்ளைச் சம்பவம் தொடர்பாக பருத்தித்துறை பொலீஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டிருக்கிறது. (ஐ-70)

## பஸ்தரிப்பு நிலையம் புனரமைப்பு

நவாலி,ஜன.8

சிவதர்மவள்ளல் அமரர் கனகராசாவின் நினைவாக, நவாலி சென். பீற்றர்ஸ் தேவாலயத்தடியில் அமைந்துள்ள பஸ் தரிப்பு நிலையத்தினை நவாலி ஊன்றுகோல் அறப்பணியகத்தினர் புனரமைப்புச் செய்துள்ளனர். (எ-10-100)

# மக்கள் வழங்கிய...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முன்னெடுக்க முடியாத ஒரு நிலை இருப்பதாக பிரதமர் கூறியிருக்கிறார். அந்த வாதத்தை ஏற்றுக்கொண்டாலும் மக்கள் தனக்கு அளித்த ஆணையை விட்டு பிரதமர் விலகிச்செல்ல முடியாது.

1994ஆம் ஆண்டு ஜனாதிபதிக்கு மக்கள் அளித்த ஆணையும் சமாதானத்தை முன்னெடுக்கவேண்டும் என்பதாகும். எனவே, அவரும் இந்த முயற்சியிலிருந்து ஒதுங்கமுடியாது. ஜனாதிபதியும் பிரதமரும் ஒன்றிணைந்து செயற்படவேண்டும்.

கடந்த நவம்பர் மூன்றாம் திகதிக்கு முன்னர் அமைச்சுக்கள் எவ்வாறு அரசிடம் இருந்தனவோ அதே சூழ்நிலை மீண்டும் உருவாகவேண்டும் என்பதே எமது வேண்டுகோள்.

- இவ்வாறு அவர் தெரிவித்தார்.

**மஹிந்த ராஜபக்ஷ எம்.பி.**

பிரதமரின் இந்த முடிவை ஏற்றுக்கொள்ளமுடியாது. இது பொறுப்பிலிருந்து நழுவிக்கொள்ளும் செயல்.

- இப்படிக் கண்டித்திருக்கிறார் எதிக்கட்சித் தலைவர் மஹிந்த ராஜபக்ஷ.

அவர் மேலும் கூறியிருப்பதாவது:-

நாட்டில் யார் சமாதானத்தை ஏற்படுத்துகிறார்கள் என்பதும் முக்கியமல்ல. யாராக இருந்தாலும் மக்களுக்குத் தேவைப்படுவது சமாதானம் என்பதை உணவேண்டும்.

சமாதானத்தை முன்னெடுக்க பிரதமருக்கு மட்டுமல்ல ஜனாதிபதிக்கும் மக்கள் தமது ஆணையை வழங்கியுள்ளனர்.

எனவே, பிரதமரும் ஜனாதிபதியும் இந்த நெருக்கடி நிலையத் தீர்க்க ஒன்றிணைந்து செயற்படவேண்டும்.

தற்போது இந்த நாட்டுக்குத் தேவை பேச்சு மூலம் பிரச்சினைக்குத் தீர்வு காணப்படுவதே ஆகும்.

- இப்படி எதிர்க்கட்சித் தலைவர் மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்.

**டக்ளஸ் தேவானந்தா எம்.பி.**

இலங்கையின் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண இருபெரும் தேசிய கட்சிகளும் இணைந்து செயற்படுவதும் அதற்குத் தேசிய நலனை முன்நிறுத்தி சகல முற்போக்கு சக்திகளும் ஆதரவு வழங்குவதும் அவசியமானதாகும்.

- இவ்வாறு ஈ.பி.டி.பியின் செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்திருப்பதாவது :-

அமைச்சுப் பொறுப்புக்கள் யார் வசம் இருக்கின்றன என்பதை விட பிரச்சினைக்குத் தீர்வு காணப்படவேண்டும் என்பதே அவசியமானதாகும். இதற்கு ஆளும் தரப்பு, எதிர்த் தரப்பு என்ற எல்லைகளைக் கடந்து தேசிய நலனை முன்னிறுத்தி செயற்பட அனைத்து சக்திகளும் முன்வரவேண்டும்; சமாதானம் தொடர்ந்தும் நிலவவேண்டும்; யுத்தம் இல்லாத நிலை தொடர்ந்து பேணப்படவேண்டும்.

அர்த்தமுள்ள அரசியல் பேச்சுக்களின் ஊடாக இனப்பிரச்சினைக்கு நிரந்தரமான தீர்வு விரைவாகக் காணப்படவேண்டும். இதுவே எமது நிலைப்பாடு என்பதை வலியுறுத்துகிறோம். இவை தனியே எந்தவொரு தரப்பினருடனும் மட்டுப்படுத்தப்பட்டவையல்ல. - இப்படி அவர் தெரிவித்தார்.

**மனோ கணேசன் எம்.பி.**

சமாதான முயற்சியில் இனி தான் ஈடுபடப்போவதில்லை, அதை ஜனாதிபதியே முன்னெடுக்கவேண்டும் என்று பிரதமர் ரணில் விக்கிரமசிங்க கூறியிருப்பது துரதிர்ஷ்டமானது. பிரதமர் இப்படி ஒரு முடிவெடுத்ததற்கு ஜனாதிபதியே காரணம். - இப்படிக் கூறியுள்ளார் கொழும்பு மாவட்ட எம்.பியான மனோ கணேசன்.

அவர் மேலும் தெரிவித்திருப்பதாவது:-

எது எப்படி ஆயினும் பிரதமர் எடுத்த இந்த முடிவை அவர், மீள்பரிசீலனை செய்யவேண்டும். அரசியல் நெருக்கடிமிக்க நிலையில் எடுக்கபபடும் இதுபோன்ற முடிவுகள் தமிழ் மக்களுக்கு பாதிப்பையே ஏற்படுத்தும்.

தென்னிலங்கையில் பலமான அரசியல் தலைமை ஒன்றுடனேயே தாம் பேச்சுக்களை நடத்த விரும்புவதாக விடுதலைப் புலிகள் தெரிவித்துள்ளனர்.

ஆனால், தென்னிலங்கையிலே பலமான சக்தி ஏற்படும் வரை இந்த இழுபறிகள் நடந்துகொண்டே இருக்கும் போலத்தான் தெரிகிறது. - இப்படி அவர் கூறினார். (எ-8)

# உடன்படிக்கை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யில் கூறியதாவது:-

இருதரப்பினருக்கும் எதிரான போரை நிறுத்துவதே போர்நிறுத்த உடன்படிக்கையின் அடிப்படையாகும்.

இது தொடர்பாக செயற்படுகையில், இராணுவத்தை வழி நடத்தும் அதிகாரம் அவசியமானதொன்றாகும். ஆயினும், இப்பொழுது எழுந்துள்ள நிலை, போர் நிறுத்த உடன்படிக்கையை முன்னெடுத்துச்செல்வதற்கு ஒரு தடையாகும்.

. ஆயினும், போர்நிறுத்த உடன்படிக்கையிலுருந்து நாம் ஒரு போதும் வீலகியிருக்கக்கூடாது. அந்த உடன்படிக்கையைப் பாதுகாப்பது நம் அனைவரினதும் பொறுப்பாகும். அதனால், அமைச்சுக்களைப் பொறுப்பேற்றது போன்று போர்நிறுத்த உடன்படிக்கையை முன்னெடுத்துச் செல்லும் பொறுப்பையும் தானே ஏற்றுக்கொள்வது ஜனாதிபதியின் பொறுப்பாகும்.

போர்நிறுத்த உடன்படிக்கையின் மீதே சமாதானப் பேச்சு தங்கி நிற்கின்றது. ஓர் அரசு என்ற வகையில் பூரண அதிகாரம் எமக்கு உண்டு என்ற அடிப்படையிலே விடுதலைப் புலிகளுடன் போர்நிறுத்த உடன்படிக்கையில் கையெழுத்திட்டோம் ஜனாதிபதி மேற்கொண்ட நடவடிக்கையினால் அந்த அடிப்படை தகர்ந்துவிட்டது.

இதனால், அந்த உடன்படிக்கையின் சில ஷரத்துகள் செல்லுபடியாகாமல் போய்விட்டன. உடன்படிக்கைக்கு முரணாகச் செயற்பட எம்மால் முடியாது. அவ்வாறு பொறுப்பேற்ற அமைச்சுக்கள் மூன்றையும் தொடர்ந்து தனது பொறுப்பிலேயே வைத்துக்கொண்டு, சமாதானப் பேச்சுக்களை முன்னெடுத்துச் செல்லவேண்டும் என்ற நிலைப்பாட்டில் ஜனாதிபதி இருப்பாரேயானால், விடுதலைப் புலிகளுடன் பேசி போர்நிறுத்த உடன்படிக்கையை மீளமைக்க அல்லது திருத்தியமைக்க நடவடிக்கை எடுப்பது ஜனாதிபதியிடம் இப்பொழுது ஒப்படைக்கப்பட்டிருக்கும் பொறுப்பாகும்.

தற்போதைய போர்நிறுத்த உடன்படிக்கையின் 4-2 ஷரத்தின் படி திருத்தங்கள் செய்ய வழியுண்டு. நோர்வே அரசுடன் பேசி, ஜனாதிபதி அதைச் செய்ய முடியும், போர்நிறுத்த உடன்படிக்கையில் திருத்தம் செய்து அதல் ஜனாதிபதி கையெழுத்திடுவாரேயானால் நாம் அதை எதிர்க்கமாட்டோம்.

தப்பித் தவறி, போர்நிறுத்த உடன்படிக்கைக்கு எதிராகச் செயற்பட்டால் - இலங்கை அரசு குறித்து நம்பிக்கை வைக்க முடியாது என்று சர்வதேச நாடுகள் முன்னிலையில் விடுதலைப் புலிகள் குற்றஞ்சாட்டக்கூடிய ஆபத்து உண்டு.

- இவ்வாறு பிரதமர் கூறினார். (ஐ-8)

# இலங்கை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யிலான இராணுவ ஒத்துழைப்பு உடன்பாடு விரைவில் வரவுள்ளது. இலங்கைப் படையினருக்கு இந்தியா பயிற்சிகளை வழங்குகின்றது.

- இப்படி அவர் கூறினார். (ஐ)


CISCO NETWOKING ACADEMY

CCNA COURSE

CCNA பாடநெறியானது எதிர்வரும் ஞாயிற்றுக் கிழமை (11.01.04) அன்று ஆரம்பமாகவுள்ளது. இதற்கு முன்பாக உங்கள் பதிவுளை மேற்கொள்ளவும்.

THE BARBARA MULVANEY Computer Training Centre T.P:-222 - 5971

NEW SCIENCE COLLEGE
PHYSICS
2006 ஆரம்பம்
சனி, ஞாயிறு
9-10 a.m.
ஆரம்பம் :
சனி (10.01.2004)
By : R.குகன்

CHEMISTRY CENTRE
Temple Rd., நல்லூர்
A/L 2006
CHE. - அன்பழகன்
Phy. } பிரபா சிவலிங்கம்
Bio. - தற்பரன்
Maths. - ராஜன்

மதுபாரத்
இந்து மகளிர் ஒழுங்கை, யாழ்.
ஆறே மாதத்தில் ஆங்கிலம் பேச, எழுத, வாசிக்க
SPOKEN ENGLISH With Grammar
BY: Mr. T.THANENDRAN
B.com.(Hons)M.M.Spl.,H.N.Dip.in Acc.
பகுதி நேர விரிவுரையாளர் (English)
தொழில்நுட்பக் கல்லூரி.
ஆரம்பம்:2004.01.10 4மணி (p.m.)
நிர்வாகி.

NEW SCIENCE COLLEGE
PHYSICS
2004 சடமும் கதிர்ப்பும்
பிரிவு 1 : 10-11 (சனி, ஞாயிறு)
பிரிவு 2 : 12-1 (சனி, ஞாயிறு)
2004 தாண்டல்புலம்
சனி, ஞாயிறு 7-8

ஒலிபெருக்கி சாதனங்கள் விற்பனைக்கு

| | | | |
|---|---|---|---|
| SSB | - | 60M | அம்பிளிபயர் |
| SSB | - | 80EM | அம்பிளிபயர் |
| SSA | - | 100M | அம்பிளிபயர் |
| SSA | - | 160M | அம்பிளிபயர் |
| AMX | - | 912 9 Ch | மிக்சர்கள் |
| HMT | - | 30 லைன் | ரான்ஸ்போமர்கள் |

XLR மைக் வகைகள்
BMS மைக் ஸ்ராண்ட்
DGT மைக் ஸ்ராண்ட்
60 Wat. யூனிற்றுகள்
18" நீள கோண்கள்
தொடர்பு :
கோபுரம் சவுண்ட்ஸ்
அகுஜா ஒலி பெருக்கி சாதனங்கள்
விற்பனையாளர் : M.மயூரன்.
மஞ்சவனப்பதி வீதி, கொக்குவில் மேற்கு, கொக்குவில்.

NEW SCIENCE COLLEGE JAFFNA
ஒளியியல்
BY: கருணாநிதி B.Sc. spl.
Mon. Fri - 6.00 - 7.00 (a.m.)
ஆரம்பம் : 10.01.2004(Fri.)
PAPER CLASS 2004
Tue., Thu. 6.00 -8.00
ஆரம்பம் : 13.01.2004

மதுபாரத்
இந்து மகளிர் ஒழுங்கை, யாழ்.
பல்கலைக்கழக மாணவர்களுக்கான
ENGLISH Paper Class
BY: த.தனேந்திரன்
(B.com.(Hons)M.M.Spl.,H.N.Dip.in Acc.
Visiting Lecturer(English)
Technical College
ஆரம்பம்:2004.01.10 3மணி (p.m)
நிர்வாகி.

விக்கி (B.Com.)
பிரத்தியேக வகுப்புகள் (வீட்டில் வந்தும் கற்பிக்கப்படும்)
★ A/L 2006 வர்த்தக வகுப்புகள்
★ O/L வர்த்தகமும் நிதியும்
★ 5ஆம் ஆண்டு புலமைப்பரிசில்
தொடர்புகளுக்கு:
ஞானவைரவர் வீதி, உரும்பிராய் கிழக்கு.
T.P. No: 077 6218306

Lingam master swiss
சுவிஸ் வாழ் தமிழர்களின் முன்னணி ஆசிரியர்
Deutsch - பெரியவர்களுக்கு
Deutsch - பாடசாலை மாணவர்களுக்கு
தொடர்பு:
062 7974164 - 079 3344733,
4665 Oftringen - swiss.






வட்மராட்சியிலும் ஓர் உதயம்
அன்றும் இன்றும் இனி என்றும்
K.உதயன்
(B.B.A.(Jaffna), B.A. (Pera) D.S.E.C.
பொருளியல்
A/L Day Class
ஆரம்பம்: இன்று (8.1.2004) வியாழன்
மு.பகல் 9.00 மணி
ENGLISH CLASS
பிரிவு III-39
(O/L எடுத்த மாணவர்களுக்கானது)
ஆசிரியர்: S.சடகோபன்
ஆரம்பம்: நாளை (09.01.2004)
வெள்ளி பி.ப. 4.00 மணி
ஆசிரியர் சேவை
போட்டிப் பரீட்சை வகுப்பு
T.தவசேகர்
கிறிஸ்ரல் சென்ரர்
நெல்லியடி.

விக்னா கல்வி நிறுவனம்
A/L 2006 கலை, வர்த்தக வகுப்புகள்
ஆரம்பம் : சனி, ஞாயிறு காலை 8 மணி

| | | | |
|---|---|---|---|
| ACC. | திரு. பாலவாசன் | ECON. | திரு. K.உதயன் |
| B.ST. | திரு. யசோ | TAM. | திரு. குழந்தை (பிரிவு1) |
| LOG. | திரு. சயந்தன் | | திரு. மாவை லிங்கம் (பிரிவு 2) |
| HIC. | திரு. பத்மராஜா | GEO. | திரு. பாபு |
| HIN. | திரு. N.T.தரன் | HIST. | திரு. சுதன் |
| P/SCI. | திரு. ஸ்ரீரங்கநாத் | | திரு. பத்மன் |
| CHRI. | திரு. வசந்தன் | DRAMA | திரு. மதி |

★ அன்றும் இன்றும் இனி என்றென்றும் பொருளியல் : K.உதயன்

பொருளியற் கல்லூரி
யாழ். நகர், இணுவில்
A/L 2005
பேரினப் பொருளாதாரம்
S.வரதராஜன் B.A. (Hons)
ஆரம்பம் : 10.01.2004 சனி
யாழ்ப்பாணம் - காலை 10.00 மணி (ப.நே.)
இணுவில் - மாலை 4.00 மணி (ப.நே.)


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 08.01.2004இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.